INSURANCE BOARD OF SRI LANKA

ஆண்டறிக்கை 2011

# இலக்கினை தீர்மானித்தல்...
# குறிக்கோள்களினை அடைதல்





## உள்ளடக்கம்

ஆண்டின் முக்கிய நிகழ்வுகள் 3 தலைவரின் அறிக்கை 4 பணிப்பாளர் நாயகத்தின் செய்தி 6 சபை உறுப்பினர்கள் 9
சபை உறுப்பினர்களின் விபரங்கள் 10 சிரேஷ்ட முகாமைத்துவக் குழு 12 ஊழியர் குழாம் 13 பொது மீளாய்வு 16
புள்ளி விபர மீளாய்வு 22 தொழிற்பாட்டு மீளாய்வு 40 ஐந்தொகை 56 வரவு செலவுக் கூற்று 57
ஒதுக்க மாற்றங்கள் பற்றிய கூற்று 58 காசுப் பாய்ச்சல் கூற்று 59
காப்புறுதியுறுநர் பாதுகாப்பு நிதிய காசுப் பாய்ச்சல் கூற்று 60 கணக்கீட்டுக் கொள்கைகள் 61
நிதிக் கூற்றுக்கள் மீதான குறிப்புகள் 63 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 69
கணக்காய்வாளர் நாயகத்தின் வினாக்களுக்கான பதில்கள் 72 பின்னிணைப்பு I 74 பின்னிணைப்பு II 75
சொல் விளக்கம் 76



# இலக்கினை தீர்மானித்தல்... குறிக்கோள்களினை அடைதல்

எமது தொழிற் துறையினை கடந்த வருடம் சரியான திசையினை நோக்கிப் பயணிக்கின்ற ஒரு நிறுவனமாகப் பரிணமிக்கச் செய்ததன் விளைவாக, நாம் இவ்வருடம் மிக முக்கியமானதொரு மைற்கல்லினை அடைந்தோம். மேற்கொள்ளப்பட் பல முன்னேற்றகரமான நிகழ்வுகளைத் தொடர்ந்து, ஒழுங்குபடுத்தற் சபை என்ற வகையில், புத்துணர்வு மற்றும் தன்னம்பிக்கை என்பனவற்றைப் பெற்றதுடன், எதிர் காலத்தில் பல சவால்களையும் சந்தர்ப்பங்களையும் எதிர்கொள்ளவுமுள்ளோம். வெளிப்படைத்தன்மை மிக்கதும் பொறுப்புமிக்கதுமான ஒரு காப்புறுதித் துறையினைப் பேணுவதன்பால் எமது கவனத்தினைச் செலுத்தி, காப்புறுதிக் கம்பனிகளுக்கும் அவ்வாறே, அதன் பங்குதாரர்களுக்கும் பாதுகாப்பானதும் தொழில்வாய்மைமிக்கதுமான ஒரு சூழலை உருவாக்கி பல முன்னேற்றங்களுடன் பயணிக்கவுள்ளோம்.

# நோக்கு

"பொதுமக்களின் நம்பிக்கையையும் காப்புறுதித் தெழில்துறையின் அபிவிருத்தியையும் ஊக்குவிக்கின்ற ஒரு சூழலை உருவாக்குவதன் ஊடாக, காப்புறுதித் தொழில்துறையின் ஒழுங்குபடுத்தற் சட்டகத்திற்கு வலுவூட்டுவதன் மூலம் நிலைத்து நிற்கும் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்"



# பணிக் கூற்று

"இலங்கையில் காப்புறுதி வியாபாரமானது காப்புறுதிச் சான்றிதழ் வைத்திருப்போர் மற்றும் எதிர்கால காப்புறுதிச் சான்றிதழ் வைத்திருப்போரின் நலன்களை பாதுகாக்கும் பொருட்டு தொழில்வான்மையுடனும் நடைமுறைச்சாத்தியமான வகையிலும் நம்பகத்தன்மையுடன் முன்னெடுத்துச் செல்லப்படுவதை உறுதிப்படுத்துதல்"

# ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்



- 22 காப்புறுதிக் கம்பனிகள்
- 46 காப்புறுதித் தரகர்கள்
- 32,651 காப்புறுதி முகவர்கள்
- 2015 பெப்ரவரி அளவில் சேர்வு நிலைக் காப்புறுதிக் கம்பனிகள் இரண்டு தனித்தனி நிறுவனங்களாகப் பிரிக்கப்படவுள்ளன
- அனைத்து காப்புறுதி கம்பனிகளும் பங்குப் பரிமாற்றகத்தில் நிரற்படுத்தப்படவுள்ளன
- நட்டமடைந்த வர்த்தகத்தரகர்களைப் பதிவு செய்தல்
- நிறுவனரீதியான காப்புறுதி முகவர்களை அங்கீகரித்தல்
- காப்புறுதிக் கம்பனிகளின் மூலதனத் தேவைப்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன
- இடர்சார் மூலதனத்தினை நோக்கி நகர்தல்

**ரூபா 261.78 பில்.**
காப்புறுதித் தொழிற்துறையின் மொத்த ஆதனம்

**ரூபா 78.51 பில்.**
கா.தொ.துறையின் பதியப்பட்ட மொத்த தவணைப் பணம்

**காப்புறுதித் தொழில்துறைச் செயலாற்றுகை**

| | 2011 | 2010 | மாற்ற % |
|---|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட பிரிமியம் (ரூபா.பில்) | 78.51 | 66.25 | 18.5 |
| மொத்தச் சொத்துக்கள் (ரூபா.பில்) | 261.78 | 219.10 | 19.5 |
| மொ.உ.உ யில் ஊடுறுவு % | 1.20 | 1.18 | 1.7 |
| காப்புறுதி அடர்த்தி (ரூபா) | 3,762.14 | 3,207.91 | 17.3 |

**சபையின் செயலாற்றுகை**

| | 2011 | 2010 | மாற்ற % |
|---|---|---|---|
| காப்புறுதியுறுநர் பாதுகாப்பு நிதியம் (ரூபா.பில்) | 1.28 | 1.01 | 26.4 |
| செஸ் வருமானம் (ரூபா.மில்) | 216.84 | 144.67 | 50.0 |
| வருடாந்தக் கட்டணம் (ரூபா.மில்) | 34.58 | 29.19 | 18.5 |

# தலைவரின் அறிக்கை



"காப்புறுதிப் பொருட்களில் மேற்கொள்ளப்படும் புத்தாக்கங்களும் மக்களின் நம்பிக்கையுமே இத்தொழிற்துறையின் வளர்ச்சிக்கான முக்கிய காரணிகள்"

காப்புறுதி தொழிலினை ஒழுங்குபடுத்துவதில் பத்து வருடங்களை இலங்கை காப்புறுதி சபை நிறைவு செய்துள்ளது என்ற வகையில் 2011 ஆம் ஆண்டு ஒரு மைல் கல்லாகும். உறுதியான மற்றும் திறன்மிக்க காப்புறுதித் தொழில் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்புச் செய்கின்றதனால் இத்தொழிலின் நிலையான வளர்ச்சியினை உறுதி செய்வது முக்கியமானதாகும். இலங்கை காப்புறுதி பயன்வலுவான ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை முயற்சிகளை தொடர்ந்து வழங்குகின்றது என்ற வகையில் காப்புறுதி தொழில் மற்றும் காப்புறுதியாளர்கள் இருவரினதும் நன்மைக்காக இதனை நிலையாக வைத்திருப்பது அத்தியாவசியமாகும்.

குறித்த ஆண்டின் போது, 2010 இல் காணப்பட்ட 8 சதவீத வளர்ச்சியினை தொடர்ந்து இலங்கை 8.3 சதவீத சாதகமான பொருளாதார வளர்ச்சியொன்றினை அனுபவித்தது. பொருளாதாரத்தின் இந்த வளர்ச்சியின் மற்றுமொரு அம்சமாக காப்புறுதித் தொழில் 2011 இல் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியினை பதிவாக்கியிருந்தது. முழுமொத்தமாக நோக்குகையில் நீண்டகால காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதிக்கான மொத்த வருமானம் ரூபா 78,512 மில்லியனாக காணப்பட்டதுடன் இதேகாலப்பகுதியின் முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 18.5 சதவீத வளர்ச்சியினை பிரதிபலித்தது. 22 காப்புறுதிக் கம்பனிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும் அவற்றில் 21 கம்பனிகள் மாத்திரமே 2011 ஆம் ஆண்டில் தொழிற்பட்டன. அவற்றில் 3 கம்பனிகள் நீண்டகாலக் காப்புறுதியிலும், 6 கம்பனிகள் பொதுக் காப்புறுதியிலும் 12 கம்பனிகள் கலப்பு காப்புறுதியிலும் ஈடுபட்டன.

இலங்கை காப்புறுதி சபை சரியான பாதையில் பயணிப்பதை உறுதிப்படுத்தும் வகையில், சபையானது தொழிலினதும் பொது மக்களினதும் நம்பிக்கையினை மேலும் உறுதிப்படுத்தும் அதேநேரம் இத்தொழிலின் வளர்ச்சியினை மேம்படுத்துவதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

ஆபத்து அடிப்படை மூலதன மாதிரியின் நீண்டகால பாதை பரீட்சார்த்தம் அடுத்த வருடமான 2012 இல் இடம்பெறவிருக்கின்றது. பூர்வாங்க நடவடிக்கைகள் மற்றும் மதியுரைக்காக உலக வங்கி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு அத்துடன், நிதி வழங்கல் என்பவற்றுக்காக டிலொயிட் டச் டொமட்சு இந்தியா தனியார் நிறுவனத்திற்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வருடத்தின் போது, 100 சதவீத வெளிநாட்டு காப்புறுதி கம்பனியொன்றின் உடமையாகக் காணப்படும் ஓரியன்ட் இன்சுரன்ஸ் லிமிடெட் மற்றும் ஆர்பிக்கோ இன்சுரன்ஸ் லிமிடெட் என்பவற்றிற்கு முறையே நீண்டகால காப்புறுதி வியாபாரத்தினையும் பொது காப்புறுதி வியாபாரத்தினையும் மேற்கொள்வதற்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச நிபுணத்துவம் மற்றும் உள்நாட்டு நிபுணத்துவம் ஆகிய இரண்டும் கலந்த அனுபவம் காப்புறுதித் தொழிலின் வளர்ச்சியினை மேலும் உறுதிப்படுத்தும்.

2011 இன் 3 ஆம் இலக்க காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்திற்கான திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதுடன் 2011 பெப்ரவரி மாதத்திலிருந்து செயற்பாட்டிற்கு வந்தது. இது குறித்த ஆண்டில் இலங்கை காப்புறுதிச் சபையின் மற்றுமொரு அடைவாகக் காணப்பட்டது.

இந்த திருத்தங்கள் காப்புறுதியாளர்கள் மற்றும் திறன்மிக்க பூட்கையாளர்களை பாதுகாப்பதற்கான எமது ஆணையை நிறைவேற்றுவதற்கான குறிப்பிடத்தக்க ஒழுங்குபடுத்துகை மறுசீரமைப்புகளைக் கொண்டுள்ளது. திருத்தங்களுக்கமைவாக சர்வதேச நியமங்களின்படி காப்புறுதிக் கம்பனிகளை பிரிப்பது சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட கட்டாயமான ஒன்றாகும். உரிமமளிக்கப்பட்ட பங்கு பரிவர்த்தனையில் காப்புறுதிக் கம்பனிகளை பட்டியலிடல் மற்றுமொரு திருத்தம் என்பதுடன் பல்வேறுபட்ட கலந்துரையாடல்களின் பின் இது அறிமுகப்படுத்தப்பட்டது. 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சபையின் ஒழுங்குபடுத்தல் நோக்கெல்லையின் கீழ் தற்பொழுது கொண்டுவரப்பட்டுள்ளது.

திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக காப்புறுதியாளர்கள் என்ற வகையில் பதிவு செய்வதற்கான மூலதனக் காப்புறுதி வியாபார வகுப்பொன்றிற்கு 100 மில்லியன் ரூபாவிலிருந்து 500 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. காப்புறுதி தொழில் மற்றும் ஆபத்து என்பவற்றினை பகுப்பாய்வு செய்ததன் பின்னர் கைத்தொழில் தேவைகளுக்கு பொருத்தமான வகையில் ஒழித்துக்கட்டல் அளவு (பொதுக் காப்புறுதி) விதிகள் மற்றும் ஒழித்துக்கட்டல் அளவு (நீண்டகால காப்புறுதி) விதிகளுக்கமைவாக திருத்தப்பட்டுள்ளது.

குறித்த வருடத்தின் போது, பொதுமக்களுக்கிடையில் காப்புறுதி தொடர்பான அறிவினை மேம்படுத்தும் மற்றுமொரு முக்கிய செயற்பாட்டினை நாம் ஆரம்பித்துள்ளதுடன் இதனைக் கருத்திற்கொண்டு காப்புறுதி தொழிலினை மேம்படுத்துவதற்கு காப்புறுதியின் அடிப்படை தொடர்பில் பொதுமக்களை அறிவூட்டுவதற்கான தேவையும் காணப்படுகின்றது. தொடரான செய்தித்தாள் அறிவித்தல்கள், ஊடக அறிக்கைகள் மற்றும் கட்டுரைகள் என்பன பிரசுரிக்கப்பட்டுள்ளன. காப்புறுதியாளர்களின் முறைப்பாடுகள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அதிகாரம் சட்டரீதியான ஏற்பாடுகளின் மூலம் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. எமது பயணம் சரியான திசையில் பயணிப்பதற்கு இத்துறைகளின்பால் சபையானது குறிப்பிடத்தக்களவு அக்கரையினை செலுத்தியுள்ளது.

நாட்டில் ஏற்பட்டு வருகின்ற பொருளாதார மாற்றங்கள் காப்புறுதி தொழிலுக்கு சந்தர்ப்பங்களையும் சவால்களையும் கொண்டு வருகின்றன. இந்த வகையில் இத்தொழிலானது இச்சவால்களை சந்திப்பதற்கான புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதன் பால் கவனம் செலுத்தவேண்டியுள்ளது. காப்புறுதி தொழில் ஆயுட் காப்புறுதி மற்றும் சுகாதாரக் காப்புறுதி உற்பத்திகளை வளர்ந்துவரும் மக்களின் தேவைக்கேற்றவாறு முன்வைப்பதற்கான புதிய உபாயங்களை கண்டறிய வேண்டியுள்ளது.

பொதுமக்கள் நம்பிக்கையின் முக்கியத்துவம் மற்றும் காப்புறுதி பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வு என்பவற்றின் பால் சபையானது மிகுந்த அக்கரை செலுத்தியுள்ளது. இது தொடர்பில் இத்தொழில் துறையின் பங்காளிகள் அனைவரும் இதற்கான ஒத்துழைப்பினை நல்குவார்கள் என நாம் பெரிதும் எதிர்பார்க்கின்றோம்.

சர்வதேச பொருளாதார நெருக்கடிகளிலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில், காப்புறுதி உற்பத்திகளின் ஆழ அகலங்களை உறுதிப்படுத்தும் அதேவேளை, வினைத்திறன் மிக்கதும் பயன்வலுவானதுமான ஆபத்து முகாமை நோக்கம் கொண்ட புதிய ஒழுங்குகளை நாம் ஒழுங்குபடுத்துநர்கள் என்ற வகையில் அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது.

முடிவாக, இலங்கை காப்புறுதிச் சபைக்கு வழங்கிய ஒத்துழைப்பிற்காக நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பீ. ஜயசுந்தர மற்றும் அமைச்சின் தொடர்புடைய அலுவலர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் எனது சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் அவர்கள் வழங்கிய பெறுமதியான ஒத்துழைப்புக்காக எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்வதுடன் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய பதவியினர் அனைவருக்கும் அவர்களது அர்ப்பணத்துடன் கூடிய பங்களிப்புக்காக எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



**இந்திராணி சுகததாஸ**
*தலைவர்*

*2012 ஆகஸ்ட் 30 ஆந் திகதி*

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



"2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான அபிவிருத்திகள் இத்தொழில் துறைக்கு சந்தர்ப்பங்களையும் சவால்களையும் வழங்கும். அறிவார்ந்த ஒழுங்குபடுத்துநர் என்ற எமது வகிபாகத்தின் மீது கவனத்தைக் குவித்து, தேர்ச்சி பெற்ற உற்சாகமான ஊழியர்கள் வினைத்திறன்மிக்க முறையிலும் பயனுறுதிமிக்க முறையிலும் சேவைகளை வழங்கும் ஒரு வெற்றி மனப்பான்மை கொண்ட கலாசாரத்தின் ஊடாக இச்சவால்களை எதிர்கொள்ளுதல். இத்தொழில்துறையிலுள்ள ஆர்வலர்களுடன் நெருக்கமாகச் செயற்படுவதன் ஊடாக வியாபாரங்களுக்கும் நுகர்வோருக்கும் நியாயமானதும் பாதுகாப்பானதுமான தொழில்துறையை வழங்குதல்."

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இந்த வருடம் நாட்டிற்கு, காப்புறுதித் தொழில் மற்றும் காப்புறுதிச் சபைக்கு உண்மையிலேயே குறிப்பிடத்தக்கதொரு வருடமாகும். ஒரு தசாப்தத்தை நிறைவு செய்யும் நிகழ்வைக் கொண்டாடுகின்ற இந்த வருடத்தில் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை வேலைச்சட்டகத்தினை உருவாக்குவதில் நாம் சிறந்த தளத்தினை பெற்றிருப்பதுடன் காப்புறுதி தொழில் தொடர்பான அதிக வகைகூறல் மற்றும் நிலையான தன்மையினை நாம் கொண்டுள்ளோம். இலங்கை காப்புறுதித் தொழிலின் ஒழுங்குபடுத்தல் நிறுவனம் என்ற வகையில் மீளாய்வாண்டின் காலத்தின் போது இத்தொழிலுக்கு வழிகாட்டலையும் நெறிப்படுத்தலினையும் தொடர்ந்து வழங்கி வருகின்றது.

## ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை

ஆபத்தினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வையினை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் மீளாய்வாண்டின் போது சபை இரண்டு பிரதான மைக்கற்களை அடைந்துள்ளதுடன், கருத்திட்ட மதியுரையுடன் நெருக்கமாக பணியாற்றிய வகையில் 2009 இல் ஆரம்பிக்கப்பட்ட ஆபத்து அடிப்படை மூலதன கருத்திட்டத்தின் கட்டங்கள் II மற்றும் III இனை நாம் நிறைவுசெய்துள்ளோம். இதன் விளைவாக தரம் கூடிய அறிக்கைகள் காப்புறுதி தொழிலுக்கு வழங்கப்பட்டன. இக்கருத்திட்டத்தின் மூலம், ஆகக் குறைந்த மூலதன தேவைப்பாடொன்றினை பேணுவதற்கு ஆபத்து அடிப்படை வேலைச்சட்டகமொன்றினை ஏற்பாடு செய்வதன் மூலம் அவற்றினது வியாபார ஆபத்துக்களை பயன்வலுவுள்ள வகையில் முகாமை செய்வதற்கு சந்தை பங்குபற்றுனர்களுக்கு முடியுமாக இருக்குமென சபை எதிர்பார்க்கின்றது.

வருடாந்த நியதிச்சட்ட விபரத்திரட்டுகள், கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் உண்மை அறிக்கைள் என்பவற்றை உரிய காலத்திற்கு சமர்ப்பித்தல் மற்றும் காப்புறுதிக் கம்பனிகள், காப்புறுதி முகவர்களின் உள்ளும் புறமுமான கண்காணிப்புகளின் மூலம் நாம் கண்காணிக்கப்படுவதுடன் அவர்களது செயற்பாடுகள், முறைமைகள், கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் என்பவற்றை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக உறுதிப்படுத்துவதற்கும் அவர்களது ஆபத்து முகாமைத்துவச் செயன்முறையினை மதிப்பீடு செய்வதற்கும் முடியுமாக இருக்கின்றது.

காப்புறுதித் தொழில் மற்றும் நடைமுறை ஒழுங்குபடுத்தல் போக்கின் தேவைப்பாடுகளை ஈடுசெய்யும் வகையில் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டம் சபையினால் திருத்தப்பட்டதுடன். வங்குரோத்து அளவு விதிகள் திருத்தப்பட்டு காப்புறுதியாளர்களினால் செலுத்தப்படும் வருடாந்த மற்றும் பதிவுக் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய மாற்றம் என்ற வகையில் காப்புறுதியாளர்கனின் வகுதிகள் பிரிக்கப்பட்டு அனைத்துக் காப்புறுதியாளர்களும் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் கீழ் உரிமம் அளிக்கப்பட்ட பங்கு பரிவத்த்தணையொன்றில் பட்டியலிடப்படல் போன்ற முக்கிய திருத்தங்கள் மற்றும் இலங்கையில் காப்புறுதித் தொழிலின் மாதிரியினை வடிவமைக்கும் நீண்டகால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் என்பவற்றை குறித்த மீளாய்வு ஆண்டின் கீழ் முறையே ஆப்பிகோ இன்சுரன்ஸ் லிமிடெட் ஓரியன்ட் இன்சுரன்ஸ் போன்ற காப்புறுதியாளர்களுக்கு பதிவு வழங்குவதற்கு சபை தீர்மானித்தது. இந்த வகையில் பதிவு செய்யப்பட்ட காப்புறுதியாளர்களின் எண்ணிக்கை 20 இலிருந்து 22 ஆக அதிகரித்தது. எவ்வாறாயினும் 2009 இலிருந்து செலின்கோ தகாபுல் லிமிடெட் தொடர்ந்து செயற்பட முடியாது தடைவிதிக்கப்பட்டதன் காரணமாக 21 கம்பனிகள் மாத்திரம் செயற்பாட்டில் இருக்கின்றன.

2011 இன்போது காப்புறுதி தரகர்களாக பதிவு செய்வதற்கு கோரும் 11 கம்பனிகளின் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. சபை 5 கம்பனிகளுக்கான பதிவினை வழங்கியுள்ளதுடன் அவற்றுள் இரண்டு கம்பனிகள் நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தினை செய்வதற்கும் இன்னும் மூன்று கம்பனிகள் பொதுக் காப்புறுதி தரகு வியாபாரத்தினை மேற்கொள்வதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டன.

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழில் சட்டத்தின் 98 ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக கோரிக்கை ஒன்றினை தீர்ப்பது தொடர்பான பிணக்கொன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் கோரிக்கையாளரின் விருப்பிற்கேற்ப சபை தீர்மானத்திற்காக பாரப்படுத்தப்படுவதுடன் சபையானது விசாரிப்பதற்கான சந்தர்ப்பத்தினை வழங்கியதன் பின்னரும் அத்தகைய முறைபாடுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரும் பிணக்கு தொடர்பாக கட்டளையொன்றினை ஆக்கும் சபையின் புலனாய்வு தொழிற்பாடானது 2009 இல் தாபிக்கப்பட்டதுடன் 2010 இல் தனியான ஒரு அலகாக செயற்பட்டது. குறுகியதொரு காலப்பகுதியில் காப்புறுதிச் சபை காப்புறுதி கோரிக்கைகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்ப்பதில் பொதுமக்களின் நம்பிக்கையினை பெற்றுள்ளமை பெறப்படும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரிப்பதும் தீர்க்கப்படுவதும் சான்றாகும்.

மீளாய்வாண்டின் போது 280 முறைப்பாடுகள் வெற்றிகரமாக விசாரிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 240 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டுள்ளன. தற்பொழுது நாம் எமது நோக்கெல்லையினை விரிவாக்குவதற்கு காத்திருப்பதுடன் தகமைகள் மற்றும் வயது என்பன தொடர்பான முறைப்பாடுகள் காணப்படுவதுடன் அதற்கு மேலதிகமாக காப்புறுதி செயன்முறையின் அறவீடு தொடர்பான முறைப்பாடுகளும் தீர்க்கப்படுகின்றன.

## பொதுமக்கள் விழிப்புணர்வு

மீளாய்வு வருடத்தின் போது தேசிய மற்றும் கல்விக் கண்காட்சிகள் அத்துடன் வீதிக் காட்சிகள் என்பவற்றில் பங்குபற்றியதன் மூலம் காப்புறுதி தொழிலில் சபையின் மேற்பார்வை, ஒழுங்குபடுத்தல் மற்றும் அபிவிருத்தி பங்களிப்புகள் பொதுமக்களுக்கு விளக்கப்படுத்தப்பட்டன. பாடசாலை மாணவர்களுக்கு காப்புறுதி தொடர்பான பயிற்சி நெறிகளை வழங்கியதன் மூலம் நாம் பயன்பாட்டினை அடைந்து கொண்டோம் இதற்கு மேலதிகமாக செய்தித்தாழ் கட்டுரைகள், நேர்காணல்கள் மற்றும் தகவல்கள் அடங்கிய பத்திரிகை அறிவித்தல்கள் என்பவற்றினையும் "காப்புறுதி ஒன்றினை எவ்வாறு பெற்றுக்கொள்வது" மற்றும் "முன்மொழிவு பத்திரமொன்றினை எவ்வாறு பூரணப்படுத்துவது" என்ற தலைப்பில் பல்வேறு கையேடுகளையும் துண்டுபிரசுரங்களையும் நாம் வெளியிட்டுள்ளோம்.

## மனித வளங்கள்

2011 இன் இறுதியில், 37 பதவியணியினரைக் கொண்டதாக காப்புறுதிச் சபை வளர்ச்சிபெற்றிருந்தது. இதே காலப்பகுதியின்போது காப்புறுதியாளர்களின் எண்ணிக்கை 10 இல் இருந்து 22 ஆகவும் காப்புறுதி தரகர்களின் எண்ணிக்கை 36 இலிருந்து 44 ஆகவும் அதிகரித்தன. மீளாய்வாண்டின் போது சபையானது பதவியணி உறுப்பினர்களுக்கு 25 பயிற்சி நெறிகளில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பத்தினை வழங்கியது.

## எதிர்கால நோக்கு

சர்வதேச பொருளாதார வீழ்ச்சி காணப்பட்ட பொழுதிலும் நாட்டின் காப்புறுதித் துறையானது குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைக் காட்டிய அதேவேளை 2010 இல் காணப்பட்ட மொத்த காப்புறுதி வருமானம் 18.5 சதவீதத்தினால் அதிகரித்தது. 2011 இல் நிண்டகால காப்புறுதி ரூபா 35,181 மில்லியனாகவும் பொதுக் காப்புறுதி ரூபா 43,331 மில்லியனாகவும் அதிகரித்தது.

2011 ஆம் ஆண்டின்போது குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள் காணப்பட்ட அதேவேளை இத்தொழில் சவால்களையும் எதிர்நோக்கியது. இந்த சவால்களை எதிர்நோக்கும் வகையில் எதனையும் சாதிக்கும் திறனுடன் பயன்வலுவான வினைத்திறன் மிக்க ஊழியர் வளங்களையும் ஊக்குவிக்கப்பட்ட திறனையும் கொண்டு ஒழுங்குபடுத்துனர் என்ற வகையில் எமது பங்களிப்பினை தொடர்ந்தும் வழங்குவதில் கண்ணும் கருத்துமாக செயற்பட்டோம். காப்புறுதித் தொழில் அக்கரை செலுத்துனர்களுடன் நெருக்கமாக பணியாற்றும் நாம், வளர்ச்சி மற்றும் உணர்வுபூர்வமான வகையில் நியாயமானதும் பாதுகாப்பானதுமான வியாபார மற்றும் நுகர்வோருக்கு சிறந்த பங்களிப்புக்களை வழங்கி வருகின்றோம்.

2012 இற்கான முன்னுரிமைகள் இனம் காணப்பட்டுள்ளதுடன் ஆகக் கூடிய மூன்று முன்னுரிமைகள் ஆபத்து அடிப்படை மூலதன மாதிரிக்கான பாதை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டதுடன் காப்புறுதியாளர்கள் மற்றும் காப்புறுதி தரகர்களின் நிதி ஸ்திரத்தன்மையினை நோக்காகக் கொண்டுள்ளது. மேலும், காப்புறுதியாளர்கள் மற்றும் திறன் பூட்கையாளர்களின் நலனை பாதுகாக்கும் வகையில் ஒழுங்குபடுத்தல் வேலைச்சட்டகத்தினை உறுதிப்படுத்துவதற்கு கிராமிய சமூதாயத்துடன் கலக்கும் வகையில் குழுக்களுக்கிடையில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

நடுத்தரத்திலிருந்து நீண்டகாலம் வரை காப்புறுதித் தொழிலின் உறுதிப்பாட்டின் மீது நாம் கவனத்தை செலுத்தியுள்ளதுடன் பயன்வலுவான கண்காணிப்பு முறைமையொன்றின் ஊடாக இலங்கையில் காப்புறுதி கைத்தொழிலின் நிதி உறுதிப்பாட்டினை நாம் கண்காணிப்பதனை நோக்காகக் கொண்டுள்ளோம். காப்புறுதி மற்றும் மீள் காப்புறுதிக்கான பாரிய ஒழுங்குப்படுத்தல் வேலைச்சட்டகம், புதிய கண்டுபிடிக்குகளை ஊக்குவிப்பதன் மூலம் காப்புறுதி தொழிலின் அபிவிருத்திக்கு வசதியளித்தல் மற்றும் காப்புறுதி தொடர்பான நிதி பற்றிய அறிவினை அதிகரிப்பதன் ஊடாக காப்புறுதியாளர்களின் நம்பிக்கையினை அதிகரிக்கச் செய்கின்றது.

## முடிவுரை

எமது பத்தாவது ஆண்டு நிறைவு விழாவில் மிக முக்கிய மைக்கல்லாக நாம் அடையப் பெற்றிருப்பது பல்வேறுபட்ட அடைவுகள் என்ற வகையில் சரியான பாதையின்பால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக இவை நிகழ்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த வருடத்தில் எமது செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு அயராத ஒத்துழைப்பினையும் வழிகாட்டல்களையும் வழங்கிய சபையினை நான் நன்றியுடன் பாராட்டுகின்றேன். எமது சபையின் தலைவர் வழங்கிய தலைமைத்துவத்தின் மூலம் நாம் இதனை அடைந்ததாக அவரை பாராட்டுவதுடன் பணிப்பாளர்கள் மற்றும் பதவியினர் 2011 ஆம் ஆண்டில் எமது இலக்குகளை அடைவதற்கு முடியுமான அனைத்து வகையிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்கள் என்பதற்காக அவர்களைப் பாராட்டுகின்றேன்.



**சந்த்ரி குணவர்தன**
*பணிப்பாளர் நாயகம்*

*2012 ஆகஸ்ட் 30 ஆந் திகதி*

# சபை உறுப்பினர்கள்



1
**திருமதி. இந்திராணி சுகததாச**
*தலைவர்*



2
**திரு. எஸ்.ஆர். ஆட்டிகல**
*உறுப்பினர்*



3
**திரு. பி.டி.டபிள்யு ஆனந்த சில்வா**
*உறுப்பினர்*



4
**திரு. டி.கே ஹெட்டியாராச்சி**
*உறுப்பினர்*



5
**திரு. ஜீ.குணவர்தன**
*உறுப்பினர்*



6
**திரு. காமினி கொஹன**
*உறுப்பினர்*



7
**திரு. நவாஸ் ரஜாப்தீன்**
*உறுப்பினர்*

# சபை உறுப்பினர்களின் விபரங்கள்

**(1) திருமதி.இந்திராணி சுகததாச** அவர்கள், 2010 மே மாதத்திலிருந்து சபையின் தலைவராக செயற்படுகின்றார். திருமதி சுகததாச அவர்கள் கொழும்பு மியுசியஸ் கல்லூரியின் பழைய மாணவர் ஒருவர் என்பதுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞனத்தில் பட்டம் பெற்றுள்ள அதேவேளை, அவுஸ்திரேலியா, மொனாஷ் பல்கலைக்கழகததில் முதுமாணி பட்டத்தையும் (எம்பீஏ/எம்பிஏ) பெற்றுள்ளார். இவர் 1990 இல் ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஹேபர்ட் எச் ஹம்பரி கௌரவ விருதினை (முழுமையான) பெற்றுக் கொண்டதுடன் ஒருவருட புலமைப்பரிசில் காலப்பகுதியில் நிவ்யோர்க் சிட்டி பல்கலைக்கழகத்தின் ஹன்டர் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

இவர் கணனி விஞ்ஞானம், ஆள்சார் முகாமைத்துவம் மற்றும் அரசாங்க சேவை முகாமைத்துவத்தில் உயர் தொழில் பயிற்சியினை பெற்றிருந்தார்.

திருமதி சுகததாச 1977 இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து கொண்டதுடன் திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் உதவிச் செயலாளராக தனது தொழிலை ஆரம்பித்த இவர் நிர்வாகத்துறையில் உயர்ந்த நிலை பதவியை அடைந்தார்.

திருமதி சுகததாச அரசாங்கத் துறையில் பிரதான பதவி வகித்தபோது, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர், இலங்கை மகளிர் பணியகத்தின் பணிப்பாளர், பெருந்தோட்ட முகாமைத்துவ தேசிய நிறுவகத்தின் தலைவர், சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் போன்ற சிரேஷ்ட பதவிகளை வகித்துள்ளார்.

அரசாங்கத் துறையில் மூன்று தசாப்தங்களுக்கு அதிகமான காலம் சேவையாற்றிய பின்னர், 2010 இல் பெருந்தோட்டத்துறை அமைச்சின் செயலாளராகவிருந்து இளைப்பாறினார். இளைப்பாறிய பின்னர், இலங்கை காப்புறுதிச் சபை மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு ஆகிய இரண்டினதும் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் 2011 டிசம்பர் வரை பி.ப ஆணைக்குழுவில் சேவையாற்றியுள்ளார்.

அத்துடன் திருமதி சுகததாச அவர்கள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பல்வேறுபட்ட கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்களிலும் கலந்துகொண்டுள்ளார். அவர் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பல நாடுகளில் மாநாடுகளிலும் கலந்துகொண்டுள்ளார்.

**(2) திரு.எஸ்.ஆர்.ஆட்டிகல** அவர்கள் இலங்கை மத்திய வங்கியின் சிரேட்ட பொருளியல் துறை நிபுணராக கடமையாற்றியுள்ளார். அத்துடன் அவர் தேசிய சேமிப்பு வங்கியின் பதில் தலைவராகவும், ஷெல் கேஸ் லிமிடெட்டின் பதில் தலைவராகவும், நிதி, திட்டமிடல் அமைச்சின் அரசிறை கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் கடமையாற்றியதுடன், 2011 ஆம் வருடம் முதல் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றினார்.

அவர் தற்போது திறைசேரி பிரதிச் செயலாளராகவும், இலங்கை வங்கியின் சபை பணிப்பாளராகவும், இலங்கை துறைமுக அதிகாரசபை, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு பணிப்பாளராகவும் கடமையாற்றுகின்றார். விஞ்ஞான பட்டப்பின்படிப்பு கல்வி நிறுவகம், பேராதனைப் பல்கலைக்கழகம், ஆகியவற்றின் சபை அங்கத்தவராகவும், இலங்கை முதலீட்டுச் சபையின் கண்காணிப்பாளராகவும் கடமையாற்றுகின்றார். திரு. ஆட்டிகல அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டதாரியாகவும், ஐக்கிய இராச்சியத்தின் வார்விக் பல்கலைக்கழகத்தின் பொருளியல் உயர் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

**(3) திரு.பி.டீ.டப்ளியு. ஆனந்த சில்வா** அவர்கள் கடந்த 28 வருட சேவையில் மத்திய வங்கியில் அபிவிருத்தி நிதித் திணைக்களம், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மற்றும் வங்கி மேற்பார்வை திணைக்களம் என தனது பங்களிப்பினை நல்கியுள்ளார். அவரின் 28 வருட கால மத்திய வங்கி சேவையில் நிதி திட்டமிடல், வங்கி மேற்பார்வை, நிதியியல் முறைமை உருவாக்கம், வெளிநாட்டு நாணயமாற்றுக் கொள்கை, வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் கொடுப்பனவு மிகுதிகள் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். அவர் முதலாம் தர விஞ்ஞானத்துறை பட்டத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்றதுடன், IOWA பல்கலைக்கழகத்தில் கலை முதுமாணிப் பட்டத்தினையும் ஐக்கிய அமெரிக்காவின் இலிநொயிஸ் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார். அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பகுதி நேர விரிவுரையாளராக இருப்பதுடன், மத்திய வங்கியில் பல உயர்தர பாடநெறிகளை நிறைவுசெய்த நபராகவும் காணப்படுகின்றார்.

திரு. சில்வா அவர்கள், தற்போது இலங்கை கடன் தகவல் பணியகத்தின் தலைவராக கடமையாற்றுவதுடன் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் தலைவராகவும் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தணை ஆணைக்குழுவின் பணிப்பாளராகவும், இலங்கை காப்புறுதி சபையின் பணிப்பாளராககும், அபி வெனுவென் அபி நிதியத்தின் பணிப்பாளராகவும், இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் தர உறுதிப்படுத்தல் சபையில் உறுப்பினராகவும் வெஸ்ட் கோஸ்ட் பவர் தனியார் கம்பனியின் பணப்பாளராகவும் சேவையாற்றி வருகின்றார்.

**(4) திரு.டீ.கே. ஹெட்டியாராச்சி** அவர்கள் தொழில் ரீதியில் சட்டத்தரணி ஒருவராவார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டமாணி (LLB) பட்டதாரியாவார். இவர் 1986 இல் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில்

உதவிப் பதிவாளராக இணைந்து கொண்டதுடன் 1997 இல் கம்பனிகள் பதிவாளர் பதவிக்கு தரமுயர்த்தப்பட்டார். இவர் புதிய கம்பனிகள் சட்டத்தின் கீழ் கம்பனிகள் பதிவாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் உறுப்பினராகஇலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தராதரங்கள் கண்காணிப்புச் சபையின் உறுப்பினராகவும் தொழிற்படுகின்றார்.

**(5) திரு.ஜீ.குணவர்த்தன** 2010 இல் சபைக்கு நியமிக்கப்பட்டார். இவர் ஏற்றுமதியாளர் சங்கம், இலங்கை தாய்வான் நட்புறவு அமைப்பு என்பவற்றின் முன்னால் தலைவராகவும் அமெரிக்க வர்த்தக சமவாயத்தின் முன்னால் பணிப்பாளராகவும் தொழிற்பட்டார். அத்துடன், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் சபை உறுப்பினராகவும் இருந்தார்.

தற்பொழுது பல்வேறுபட்ட தனியார் கம்பனிகள் மற்றும் அமைப்புக்களின் தலைவராகவும் இவர் சேவையாற்றி வருகின்றார். இவர் 1999/2000 இல் "வருடத்தின் தொழில்முயற்சியாளர்" விருதுக்காக தெரிவுசெய்யப்பட்டதுடன், பல வருடங்களாக பாரியளவிலான ஏற்றுமதியாளர்களுக்கான தங்க விருதினையும் பெற்றுள்ளார்.

இவர் 2006 இல் பொஸ்டன் கல்லூரியின் விருது வழங்கும் நிகழ்வில் "உலகில் சிறந்த ஆளுநர்" என்ற விருதினையும் பெற்றுக்கொண்டார்.

திரு. குணவர்த்தன தெஸ்ட்டன் கல்லூரியின் பழைய மாணவர் என்பதுடன் இலங்கை றோயல் விமானப்படையில் இணைந்துகொண்ட இவர் அதன்பின்னர், விமான பொறியியல் தொழிநுட்பவியலாளராகவும் சேவையாற்றினார். தொடர்ந்து பொலிஸ் திணைக்களத்தில் 12 வருடங்கள் சேவையாற்றியுள்ளார். இவர் உலகத்திற்கு கைத்தொழில் கையுரைகளைத் தயாரித்து ஏற்றுமதி செய்யும் பிரதான நிறுவனமாக ஹேன்ஸ் இன்டநேஷன் தனியார் கம்பனியின் ஸ்தாக தலைவராகவும் காணப்பட்டார்.

**(6) திரு.காமினி கொஹொன** 2010 ஜுலையில் சபைக்கு நியமிக்கப்பட்டார். திரு கொஹொன கல்கிஸ்சை புனித தோமஸ் கல்லூரியில் கல்வி கற்றதுடன், கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் எண்ணெய் பாம் துறைகளின் பெருந்தோட்ட முகாமைத்து அனுபவத்தைப் பெற்று விளங்குகின்றார். இவர் சென்ரல் ஹில்ஸ் பிளாண்டேசன்ஸ் கம்பனியின் பிரதான நிறைவேற்று அலுவலராக தொழிற்பட்ட இவர் தற்பொழுது புலதிசி எக்ஸ்போடர்ஸ் தனியார் கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளராக பணியாற்றி வருகின்றார்.

**(7) திரு. மொஹமட் நவாஸ் ரஜாப்தீன்** 2010 இல் சபைக்கு நியமிக்கப்பட்டார். திரு ரஜாப்தீன் சந்தைப்படுத்தல் மற்றும் நுகர்வோர் உறவுகள் தொடர்பான துறையில் அனுபவத்தைப் பெற்றிருக்கின்றார்.

இவர், ஹோட்டல் டிவலப்பர்ஸ் லிமிடெட்டின் தலைவராகவும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பணிப்பாளராகவும், இலங்கை கைத்தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்தின் தலைவராகவும், சார்க் வர்த்தக சம்மேளனத்தின் உப தலைவராகவம் இலங்கையில் நிருமாணக் கைத்தொழில் சமவாயத்தின் தலைவராகவும், ஐக்கிய நாடுகள் சபை கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பின் பணிப்பாளராகவும், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி உலக சம்மேளனத்தின் உதவித் தலைவராகவும் பதவிகளை வகித்து வருகின்றார்.

திரு. ரஜாப்தீன் அவர்கள் தற்பொழுது இலங்கையின் சார்க் அதிஉயர் அமைப்பான சம்மேளனத்தின் உப தலைவராக செயலாற்றுவதுடன் 1984 இலிருந்து ரஜாப்தீன் கம்பனி குழுமத்தின் தலைவராகவும் முகாமைத்துவ பணிப்பாளராகவும் பதவி வகிக்கின்றார்.

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு



**திரு. சந்திரி குணவர்தன**
(பணிப்பாளர் நாயகம்)



**திருமதி. தமயந்தி பெர்னாந்து**
*(பணிப்பாளர் - சட்டம்)*



**திருமதி. தமரி சேணாநாயக்க**
*(பணிப்பாளர் - புலனாய்வு)*



**திரு. பியஸ் பெர்னாந்து**
*(பணிப்பாளர் - நிதி மற்றும் நிருவாகம்)*



**திரு. நிஹால் ராமநாயக்க**
*(பணிப்பாளர் - மேற்பார்வை)*



**திருமதி. சமரி ஏக்கநாயக்க**
*(உதவிப் பணிப்பாளர் - மேற்பார்வை)*



**திரு. ராஜன் நிருபசிங்கம்**
*(உதவிப் பணிப்பாளர் - சட்டம்)*

# ஊழியர் குழாம்



அமர்ந்திருப்பவர்கள்(இடமிருந்து வலம்) : டி.டபிள்யு.சுபுலீ சாரங்க, சியாமலீ அத்தநாயக, ருவினி லியனகே, பிம்சரா விஜேசிங்ஹ, சாரிகா வதுஹெவ, தேசிகா ரத்நாயக, ஹர்சன வன்னிஆரச்சி

நின்றிருப்பவர்கள் (இடமிருந்து வலம்) : லக்ஷ்மன் விஜேசிங்ஹ, தனுஜா அன்ரனி, சரித விக்ரமசிங்ஹ, வீனா தினேகா, மெரினா டயஸ், எச்.பீ.அசங்க, உபேந்திர செனெவிரத்ன

# ஊழியர் குழாம்



அமர்ந்திருப்பவர்கள் (இடமிருந்து வலம்) : சமிந்த லால் குமார, பிரியங்கி டி சில்வா, நயனா அமரசிங்ஹ, ஈ ஸ்ரீ காந்தன், துஷாரி விஜேகுணவர்தன, கோகிலா சிரிவர்தன

நின்றிருப்பவர்கள் (இடமிருந்து வலம்) : லசந்தி தொட்டஹேவ, ஜீ.எச்.இரோஷன், சாமலிகா பீட்டர், சுஜீவ ரணசிங்ஹ, கௌஷலி தயாரத்ன, சமன் சேனாதீர, லக்மால் களுபோவில, சந்திமா கம்புறுகமுவ





# மீளாய்வுகள்


பொது மீளாய்வு 16
புள்ளிவிபர மீளாய்வு 22
தொழிற்பாட்டு மீளாய்வு 40

# பொது மீளாய்வு

## காப்புறுதித்தொழில் ஒழுங்குபடுத்தற் சட்ட நிர்வாகம்

### சட்டவாக்கம்

இலங்கையில் காப்புறுதி தொழிலானது 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழில் ஒழுங்குறுத்துகை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுங்குறுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்றது. (இதனகத்துப் பின்னர். கா.தொ.ஒ.சட்டம் என குறிப்பீடு செய்யப்படும்). கா.ஒ.ச. பிரகடனப்படுத்துவதற்கு முன்னர் காப்புறுதிக் கைத்தொழிலானது 1962 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க காப்புறுதிக் கட்டுப்பாட்டு சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் காப்புறுதிக் கட்டுப்பாட்டாளாரினால் ஒழுங்குறுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து இச்சட்டமானது கா.தொ.ஒ.சட்டத்தின் அறிமுகத்துடன் நீக்கப்பட்டது.

இலங்கை காப்புறுதிச் சபையானது (இதனகத்துப்பின்னர் சபை என குறிப்பீடு செய்யப்படும்) இலங்கையில் காப்புறுதி வியாபாரமானது காப்புறுதி செய்துள்ளவர்களினதும் எதிர்காலத்தில் காப்புறுதி செய்ய எண்ணியுள்ளவர்களினதும் நலன்களை பாதுகாக்கும் பொருட்டு தொழில்வான்மையுடனும் நடைமுறைச்சாத்தியமான வகையிலும் நம்பகத்தன்மையுடன் முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்தி காப்புறுதிக் கைத்தொழிலின் அபிவிருத்தி, மேற்பார்வை மற்றும் ஒழுங்குறுத்துகை நோக்கத்திற்காக கா.ஒ.சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டிருக்கின்றது.

காலத்திற்கு காலம் கா.தொ.ஒ. சட்டத்தில் பல திருத்தங்கள் செய்யப்பட்டிருப்பதோடு காப்புறுதி தொழிலை பலப்படுத்துவதற்கு துணைச் சட்டங்களும் இயற்றப்பட்டிருக்கின்றன. இவை இவ் அறிக்கையின் ஒழுங்குறுத்துகை மீளாய்வில் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

## சந்தைக் கட்டமைப்பு

### காப்புறுதிக் கம்பனிகள்

சந்தைக் கட்டமைப்பு 13 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதில் ஆர்வம் காட்டுகின்ற கம்பனிகள் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனிகளாகக் கூட்டிணைக்கப்பட வேண்டும் என்பதோடு ஏனைய நியதிச்சட்ட தேவைப்பாடுகளை பூர்த்திசெய்ததன் பின்னர் கா.ஒ.சட்டத்தின் கீழ் காப்புறுதியாளர்ளாக பதிவுசெய்தலும் வேண்டும்.

இவ் ஆண்டின் சபையின் கீழ் இருபத்தியிரண்டு காப்புறுதிக் கம்பனிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இருபத்தொரு கம்பனிகள் தற்போது இயங்கிவருவதோடு 2009 இலிருந்து செலின்கோ தகாபுல் லிமிட்டட் பதிவின் மீதான இடைநிறுத்தம் தொடருகின்றது. இரண்டு புதிய காப்புறுதிக் கம்பனிகள் இவ்வாண்டில் பதிவு செய்யப்பட்டன. பொதுக் காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்வதற்கு 2011 திசம்பர் மாதத்தில் தனது செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு வரையறுக்கப்பட்ட ஓரியன்ட் காப்புறுதி நிறுவனம் பதிவுசெய்யப்பட்டது. ஆயுள் காப்பறுதி வியாபாரத்தை மேற்கொள்வதற்கு பதிவுசெய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட ஆபிகோ காப்புறுதி நிறுவனம் 2012 சனவரியில் தனது தொழிற்பாடுகளை ஆரம்பித்தது. பின்வரும் வரைபு 1 காப்புறுதி வியாபார வகைகளை மேற்கொள்வதற்கு பதிவுசெய்யப்பட்டிருக்கின்ற கம்பனிகளை சித்தரிக்கின்றது. இருபத்தி இரண்டு கம்பனிகளில் 12 கம்பனிகள் கூட்டு காப்புறுதி கம்பனிகளாக பதிவுசெய்யப்பட்டு நீண்டகால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொது காப்புறுதி வியாபாரம் ஆகியவற்றை மேற்கொண்டுவருவதோடு 3 கம்பனிகள் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்வதற்கும் 7 கம்பனிகள் பொது காப்புறுதி வியாபாரத்தை செய்வதற்கும் பதிவுசெய்யப்பட்டுள்ளன

*வரைபு* 1

**காப்பறுதியாளர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற காப்புறுதி வியாபாரங்களின் வகைகள்**




### காப்புறுதித் தரகர்கள்

கா.தொ.ஒ.சட்டத்தின் பிரிவு 80 இன் பிரகாரம் இலங்கையில் காப்புறுதித் தரகு வியாபாரத்தில் ஈடுபடுவதில் ஆர்வம் காட்டுகின்ற கம்பனியொன்று 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் கம்பனியொன்றாக கூட்டிணைக்கப்பட்டு ஏனைய நியதிச்சட்ட தேவைப்பாடுகளை பூர்த்திசெய்ததன் பின்னர் சட்டத்தின்கீழ் காப்புறுதி தரகர் ஒருவராக பதிவை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். 2011 ஆம் ஆண்டின் இறுதியளவில் இலங்கையில் 46 காப்புறுதி தரகு கம்பனிகள் ஈடுபட்டிருந்தன. மேற்குறிப்பிட்ட கம்பனிகளில் 35 கம்பனிகள் நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதித் தரகு வியாபாரத்தில் ஈடுபட்டதோடு 11 கம்பனிகள் பொது காப்புறுதித் தரகு வியாபாரத்தில் மட்டும் ஈடுபட்டிருக்கின்றன.

*வரைபு 2*

**தரகர்களினால் மேற்கொள்ளப்பட்ட காப்புறுதி தரகு வியாபாரங்களின் வகைகள்**




### காப்புறுதி முகவர்கள்

கா.தொ.ஒ.சட்டத்தின் பிரதான சட்டமடானது காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதி தரகு கம்பனிகள் போன்றவற்றுக்கான காப்புறுதி முகவர்களாக தொழிற்படுவதற்கு தனிநபர்களுக்கு மட்டும் அனுமதியளித்துள்ளது.

கா.தொ.ஒ.சட்டத்திற்கான திருத்தமானது (2011 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க சட்டத்தினால்) காப்புறுதி முகவர்களாக தனிநபர்கள் தவிர்ந்த ஏனைய நபர்களையும் தொழிற்பட அனுமதிக்கின்றது.

கா.தொ.ஒ.சட்டத்தின் 34 ஆம் பிரிவின் பிரகாரம் காப்புறுதி முகவர்கள், முக்கிய வினியோக ஊடகங்களில் ஒன்றாக திகழ்கின்றனர். இதனூடாக காப்புறுதிக் கம்பனிகளும் காப்புறுதி தரகு கம்பனிகளும். காப்புறுதி வியாபாரத்தை கொள்வனவு செய்கின்றனர்.

காப்புறுதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் இவ்வாண்டுக்காலப்பகுதியில் காப்புறுதி முகவர்களாக ஆட்சேர்க்கப்பட்ட தனிநபர்களின் மொத்த எண்ணிக்கை அண்ணளவாக 11,112 ஆக இருந்ததோடு காப்புறுதி கம்பனிகளினால் 144 காப்புறுதி முகவர்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

2011.டிசம்பர் 31 ஆந் திகதியில், காப்புறுதிக் கம்பனிகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற காப்புறுதி முகவர்களின் மொத்த எண்ணிக்கை அண்ணளவாக 32,651 ஆகக் காணப்பட்டது. காப்புறுதிக் கம்பனிகளில் பதிவு செய்யப்பட்டுள்ள காப்புறுதி முகவர்களின் எண்ணிக்கை வரைபு 3 இல் காட்டப்பட்டுள்ளது.

*வரைபடம் 3*

**2011.12.31 இல் உள்ளவாறு காப்புறுதி கம்பனிகளுடன் பதிவுசெய்துகொண்ட காப்புறுதி முகவர்கள்**




## கம்பனி நிலைமையும் மூலதன மாற்றங்களும்

### காப்புறுதிக் கம்பனிகள்

கம்பனியொன்று பதிவை நாடுவதற்கான ஆகக்குறைந்த மூலதன தேவைப்பாடு இவ்வாண்டுக் காலப்பகுதியில் தலா காப்புறுதி வகுப்பொன்றிற்கு ரூபா 100 மில்லியனிலிருந்து ரூபா 500 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டது.

### ஆபத்து அடிப்படையிலான மூலதனம் (RBC)

கா.தொ.ஒ. சட்டத்தின் கீழ் காப்புறுதி கம்பனிகளுக்கான ஆபத்து அடிப்படையிலான மூலதன மாதிரியொன்றை அறிமுகப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றது.

ஆ.அ. மூலதனத்தின் வெற்றிகரமான அமுலாக்கமானது காப்புறுதிக் கைத்தொழிலுக்கு பின்வரும் நன்மைகளை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது:

- தீர்மானம் எடுத்தலுக்கான அறிவார்ந்த அடிப்படை : ஆபத்து அடிப்படையிலான மூலதனமானது ஆபத்தை முகாமை செய்தல் மற்றும் பரிகாரம் வழங்கலில் சமநிலையான அனுகுமுறையொன்றை வழங்குவதோடு ஆபத்துக்கள் உரிய முறையில் கட்டுப்படுத்துவதன் மூலம் சபைக்கும் வெளியக பங்காளருக்கும வசதியையும் வழங்குகின்றது.
- மேம்படுத்தப்பட்ட உற்பத்தி இலாபத்தன்மை :ஆபத்து அடிப்படையிலான மூலதனமானது ஆபத்தான மற்றும் மூலதன நோக்கான உற்பத்திகளின் மீது நேரடி தாக்கத்தை செலுத்த முடியும். அது அளவு உச்சபடுத்துதல், சரியான விலையிடல் மற்றும் கம்பனிகளுக்கிடையே மேம்படுத்தப்பட்ட உற்பத்தி இலாபத்தன்மைக்கான வாய்ப்பை வழங்க முடியும்.
- மேம்படுத்தப்பட்ட சந்தை கண்ணோட்டம் : ஆபத்து முகாமைத்துவத்திற்கான மேம்படுத்தப்பட்ட புகழ்
- குறைக்கப்பட்ட செலவுகள்: சிறந்த ஆபத்து முகாமைத்துவத்திலிருந்தான தொழிற்பாட்டு வினைத்திறன்களும்.
- சிறந்த நடைமுறை : ஆபத்து மற்றும் மூலதன முகாமைத்துவம். மற்றும் ஆபத்துக்கான குறிப்பான பூரண அனுகுமுறையும்.

*அட்டவணை 1*

**காப்புறுதியாளர்களுக்குக் கிடைத்துள்ள தரப்படுத்தல்கள்**

| காப்புறுதியாளரின் பெயர் | கடன் தரப்படுத்தல் | தரப்படுத்தல் முகவராண்மையின் பெயர் | தரப்படுத்தலுக்கான அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்ட தகுதிறன்கள் | தரப்படுத்தல் திகதி |
|---|---|---|---|---|
| வ/ப இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | AA (lka) | ∴பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிடட் | - தேசிய நீண்டகால தரப்படுத்ததல்<br>- வெளிப்பார்வை: நிலையானது | 2011 யூன் |
| | AA (lka) | ∴பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிடட் | - காப்புறுதியாளர் நிதி ஆற்றல் தரப்படுத்தல்<br>- வெளிப்பார்வை: நிலையானது | 2011 யூன் |
| | AAA | ராம் லங்கா ரேட்டிங்ஸ் லிமிடட் | - நீண்டகால கொடுப்பனவு செலுத்துதல் ஆற்றல்<br>- வெளிப்பார்வை: நிலையானது | 2011 ஆகஸ்ட் |
| | P1 | ராம் லங்கா ரேட்டிங்ஸ் லிமிடட் | - குறுகிய கால கொடுப்பனவு செலுத்துதல் ஆற்றல் | 2011 ஆகஸ்ட் |

| காப்புறுதியாளரின் பெயர் | கடன் தரப்படுத்தல் | தரப்படுத்தல் முகவராண்மையின் பெயர் | தரப்படுத்தலுக்கான அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்ட தகுதிறன்கள் | தரப்படுத்தல் திகதி |
|---|---|---|---|---|
| எச்எ்ன்பீ எசுவரன்சு பிஎல்சி | காப்புறுதியாளர் நிதிசார் பலப்படுத்துகை தரப்படுத்ததல் A (lka)<br><br>தேசிய நீண்டகால தரப்படுத்ததல் A (lka) | ∴பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிடட்<br><br>ராம் லங்கா ரேட்டிங்ஸ் லிமிடட் | கொள்கை வைத்திருப்பவர் மற்றும் தொடர்புடைய கடப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு காப்புறுதியாளர் ஒருவரின் ஆற்றலுடன் தொடர்புடைய அனைத்து கைத்தொழில்கள் மற்றும் கடப்பாடு வகைகளுடன் கொடுக்கப்பட்ட நாடு முழுவதும் சிறந்த கடன் ஆபத்து விடயங்களை நிறைவேற்றுதல் | 2011 மே<br><br>2011 மே |
| ஜனசக்தி இன்சூரன்ஸ் பிஎல்சி | நீண்டகால மற்றும் குறுங்கால கோரிக்கைகள் செலுத்ததல் ஆற்றல் முறையே ஏ மற்றும் p2 | ராம் லங்கா ரேட்டிங்ஸ் லிமிடட் | நிதிசார் கடப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கான போதிய திறனானது அமைப்பானது, பொருளாதார நிலைமைகளில் அல்லது உயர் தரப்படுத்தல் வகுதிகளை விட தொழிற்பாட்டு சூழலில் அமைப்பானது மோசமான மாற்றங்களுக்கு மிகவும் உட்படக்கூடியதாகவும் | 2011 திசெம்பர் |
| வரையறுக்கப்பட்ட கூட்டுறவு காப்புறுதிக் கம்பனி | BB+ | ராம் லங்கா ரேட்டிங்ஸ் லிமிடட் | கோரிக்கைகளைச் செலுத்துவதற்கான ஆற்றல் | 2011 நவம்பர் |
| ஏசியன் எலயன்ஸ் காப்புறுதி பிஎல்சி | BBB- | ராம் லங்கா ரேட்டிங்ஸ் லிமிடட் | நீண்டகால மற்றும் குறுங்கால கோரிக்கை கொடுப்பனவு ஆற்றல் | 2011 நவம்பர் |

சிறந்த நடைமுறை: அபாய, மூலதன முகாமை குறிப்பாக அபாயங்கள் தொடர்பான முழுமையான அனுகுமுறை

சபையானது அனைத்து காப்புறுதிக் கம்பனிகளுக்கும் காப்புறுதியாளரின் நிதிசார் பலம் மற்றும் கோரிக்கைகள் சபையானது அனைத்து காப்புறுதிக் கம்பனிகளுக்கும் காப்புறுதியாளரின் நிதிசார் பலம் மற்றும் கோரிக்கைகள் செய்தல் ஆற்றல் என்பவற்றில் தரமிடலை பெற்றுக்கொள்ளும்படி கோரிக்கையை விடுத்துள்ளது. அதன்பிரகாரம் பின்வரும் காப்புறுதியாளர்கள் தரப்படுத்தலை பெற்றுள்ளனர்.

*வரைபடம் 4*

**பட்டியலிட்ட.∴பட்டியலிடப்படாத காப்புறுதிக் கம்பனிகள் பற்றிய நிலைமை**




காப்புறுதிக் கம்பனிகளுக்கிடையே ஏழு காப்புறுதிக் கம்பனிகள் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டிருக்கின்றன. அவையாவன, செலின்கோ இன்சூரன்ஸ் பிஎல்சி, அவீவா என்டிபீ பில்சி, யூனியன் அசுவரன்ஸ் பிஎல்சி, ஏசியன் எலயன்ஸ் இன்சூரன்ஸ் பீஎல்சி காப்புறுதி பில்சி, எச்எ்ன்பீ அசுவரன்சு பிஎல்சி, அமான தாகாபுல் பீஎல்சி மற்றும் ஜனசக்தி-இன்சூரன்ஸ் பிஎல்சி. என்பனவாகும்.

2011 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க காப்புறுதிக் த்தொழில ஒழுங்குறுத்துகை (திருத்தச்) சட்டமானது (இதனகத்துப்பின்னர் "திருத்தச்சட்டம் என குறிப்பீடுசெய்யப்படுகின்ற) திருத்தச்சட்டத்தின் ஐந்து ஆண்டுக் காலப்பகுதிக்குள் பங்கு பரிவர்த்தனை மீதான தற்போதுள்ள காப்புறுதியாளர் பட்டியலிடப்படவேண்டுமென தேவைப்படுத்துகின்றது. கூட்டு காப்புறுதிகம்பனிகள் ஆதலால் திருத்தச்சட்டத்தன. அமுலாக்கத்திகதியிலிருந்து நாலு வருடங்களினுள் தமது வியாபாரத்தை இரண்டு பகுதிகளாக செயற்பட வேண்டும்.

சபையானது பிரித்தலுடன் தொடர்புடைய சாத்தியமான சவால்களை அடையாளங்காண்பதற்கும் அவற்றுக்கான தீர்வுகளை அடையாளங்காண்பதற்ம் இலங்கை காப்புறுதி சங்கத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது.

திருத்தச்சட்டம் அமுலுக்கு வந்ததன் பின்னர் பதிவுசெய்யப்பட்ட புதிய காப்பறுதி கம்பனியொன்று சபையினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு மூன்று வருட காலப்பிரிவினுள் பங்கு பரிவர்த்தனை மீது பட்டியலிடப்படுவதற்கு தேவைப்படுத்துகின்றது.

2012 ஏப்பிரல் 19 ஆம் திகதியன்று பரிவர்த்தனை கட்டுப்பாட்டு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1231/14 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் காப்புறுதி கம்பனிகளால் வெளிநாட்டு உரிமையாண்மை பங்கேற்பானது 100 வீதம் அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. வரையறுக்கப்பட்ட அலியன்ஸ் லங்கா காப்புறுதி, வரையறுக்கப்பட்ட லங்கா எலியன்ஸ் ஆயுள் காப்புறுதி நிறுவனங்கள் 100 வெளிநாட்டு உரிமையாண்மை பங்கேற்பை கொண்டுள்ளன. அவை எலியன்ஸ் எஸ்ஈ இன் துணை நிறுவனங்களாகும்.

## காப்புறுதி கம்பனிகளிடமிருந்து செஸ் வரியொன்றை அறவிடல்

கா.தொ.ஒ.சட்டததின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் கொள்கைவைத்திருப்பாளர் பாதுகாப்பு நிதியமொன்றின் உருவாக்கத்திற்கு செஸ் வரியொன்றின் அறவிடுதலுக்கு கௌரவ நிதி அமைச்சரினால் கட்டளையொன்று செய்யப்பட்டது, 2002 யூலை 9 ஆம் திகதிய 1244/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலினால் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த தேறிய தவணை தொகையின் 0.2 வீதமும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த தேறிய தவணை தொகையின் 0.4 வீதமும் கொள்கை வைத்திருப்பாளர் பாதுகாப்பு நிதியத்திற்கு வைப்புச்செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. காப்புறுதியாளரிடமிருந்து செஸ் வரியை திரட்டுவதானது 2003 சனவரியில் ஆரம்பிக்கப்பட்டதோடு 2011 ஆம் ஆண்டுக்கு திரட்டப்பட்ட செஸ் வரி ரூபா 217 மில்லியன்கலாகும்.

## காப்புறுதியுறுநர் பாதுகாப்பு நிதியம்

காப்புறுதி கம்பனிகளிடமிருந்து திரட்டப்பட்ட செஸ்வரி, காப்புறுதி கைத்தொழில் ஒழுங்குறுத்துகை சட்டத்தின் 103 ஆம் பிரிவின் பிரகாரம் தாபிக்கப்பட்ட காப்புறுதியுறுநர் பாதுகாப்பு நிதியத்திற்கு வைப்பிலிடப்பட்டிருக்கின்றது. இந்த நிதியமானது நன்மையளிக்கத்தக்கதான ஏனையவற்றுக்கிடையில் பின்வரும் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட முடியும்.

அ) பொதுமக்களிடையே காப்புறுதி கைத்தொழில் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஏற்பட்ட செலவினத்தை தீர்த்தல் காப்புறுதிக் கைத்தொழிலினை விருத்தி செய்வதில் ஏற்பட்ட ஏனைய செலவீனங்களை தீர்த்தல்: மற்றும்

ஆ) சபை அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்து, நிறைவேற்றி புரிவதில் ஏற்பட்ட செலவுகளை தீர்த்தல்

காப்புறுதியுறுநருக்கும் எதிர்காலத்தில் காப்புறுதி செய்ய உள்ளவர்களுக்கும் பாதுகாப்பு நிதியத்தின் வரவுமீது இருக்கின்ற தொகையானது அரசாங்க பிணையங்களில் முதலிடப்படுகின்றது. 2011 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்தில் உள்ள திரட்டிய தொகை ரூபா 1.279 பில்லியனாகும் இது ரூபா 1.012 பில்லியனிலிருந்து 26.38 வீத அதிகரிப்பாகும் (31.12.2010).

## காப்புறுதித் தீர்வை

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் எந்தவொரு வகுப்பு தொடர்பிலும் தற்போது எந்த தீர்வைகளும் இல்லை. மோட்டார் காப்புறுதி, தீக் காப்புறுதி, தொழிலாளர்கள் நட்டஈட்டுக் காப்புறுதி

*அட்டவணை 2*




என்பவற்றுக்கு இருந்த தீர்வைகள் முறையே 2002, 2005 மற்றும் 2007 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தீர்வைகள் நீக்கப்பட்டன.

## வரிவிலக்களிப்புக்கள்

2011 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் காப்புறுதி வியாபாரமொன்றில் தரகு அல்லது நட்டஈடு என்ற அடிப்படையில் ஏதாவது உள்ளுர் காப்பறுதி கம்பனியினால் மீள்காப்புறுதியிலிருந்து பெறப்படுகின்ற சேவைகள் (2011 சனவரி 01 ஆம் திகதி முதல்) சேர் பெறுமதி வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றது. இந்த வரி விலக்களிப்பானது காப்புறுதி கைத்தொழில் சார்பில் சபையினால் செய்யப்பட்ட பல்வேறு சமர்ப்பிப்புக்களின் பின்னர் பெறப்பட்டது.

## வெளிநாட்டு காப்புறுதி - பயணம், சுகாதாரம் மற்றும் பொறுப்புடமை காப்புறுதி

கா.தொ.ஒ. சட்டத்தின் 101 ஆம் பிரிவின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு காப்புறுதியாளர் சுகாதார அல்லது பயண காப்புறுதியை நேரடியாக அல்லது மறைமுகமாக வைப்பதற்கு இலங்கையில் எந்தவொரு நபருக்கும் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. கா.தொ.ஒ.சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படாவிட்டாலும் சரியே. பதிவுசெய்யப்பட்ட காப்புறுதியுறுநர் தமது பணிகளை நிறைவேற்றுகின்போது எழுகின்ற பொறுப்புக்கள் தொடர்பில் தமது பணிப்பாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பொறுப்பு காப்புறுதி காப்பை பெற்றுக்கொள்வதற்கு வெளிநாட்டில் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட அல்லது பதிசெய்த காப்புறுதியாளர் ஒருவரிடமிருந்து மேலதிக அங்கீகாரம் வழங்கப்பட்டது அத்தகைய காப்புறுதியாளர் கா.தொ.ஒ.சட்டத்தின் கீழ் இலங்கையில் பதிவுசெய்யப்படாவிட்டாலும் ஏதாவது கோரிக்கைக்கான வதிவிட தரப்பினர் ஒருவருக்கு செலுத்தப்படவுள்ள அத்தகைய காப்புக்கள் தொடர்பில் ஏதாவது நடவடிக்கைகள் வெளிநாட்டு நாணயத்தில் நாட்டுக்குள் கொண்டுவரப்படும்.

## சட்டத்தின் பிரயோகத்திற்கான விதிவிலக்குகள்

கா.தொ.ஒ.சட்டத்தின் ஏற்பாடுகள் 1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை, 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபன சட்டம் மற்றும் 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூக காப்புறுதி சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சமூக காப்புறுதி சபை போன்றவற்றுக்கு பிரயோகிக்கப்படமாட்டாது.

## தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் (தே.கா.ந.நி.)

2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது (தே.கா.ந.நி.சட்டம்) காப்புறுதி கைத்தொழில் ஒழுங்குறுத்துகை சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தினால் சபையின் நோக்கெல்லையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

தே.கா.ந.நி.சட்டத்தின் பிரகாரம் தே.கா.ந.நி நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் பேணப்பட்டு வருகின்ற வேலைநிறுத்தம், கலகம், சிவில் அமைதியின்மை மற்றும் பயங்கரவாத நிதியத்திற்கு உள்ளீர்க்கப்பட்டது. தே.கா.ந.நி. சார்பில் வேலைநிறுத்தம், கலகம், சிவில் அமைதியின்மை மற்றும் பயங்கரவாத ஆபத்துக்களுக்கு எதிராக காப்புறுதி காப்புகளை வழங்குகின்ற காப்புறுதி கம்பனிகள் தே.கா.ந.நிதியத்திற்கு திரட்டப்பட்ட தவணைப் பணங்களை மீள அனுப்புவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றன.

பொதுக் காப்புறுதிக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளும் பொறுப்புக்களின் 20 வீதத்திற்குக் மேற்படாத ஒரு தொகையை தேசிய காப்புறுதியுறுநர் நம்பிக்கை நிதியத்தில் மீள் காப்புறுதி செய்ய வேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் கௌரவ நிதி, திட்டமிடல் அமைச்சரினால் கட்டளையொன்று விடுக்கப்பட்டுள்ளது.

## ஏனைய தொடர்புடைய விடயங்கள்

### வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றம் (வீ.பா.தே.ம)

வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றமானது போக்குவரத்து அமைச்சின் நோக்கெல்லையின் கீழான மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. மோட்டார் காப்புறுதியை வழங்குகின்ற ஒவ்வொரு காப்புறுதியாளரும் வீதிப் பாதுகாப்பு நிதியத்திற்காக 1 வீத மூன்றாந் தரப்பு காப்புறுதி கட்டணங்களை பங்களிப்புச்செய்ய தேவைப்படுத்தப்படுகின்றார். சபையானது வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

### நிறுவன இடைத்தொடர்பு ஒழுங்குபடுத்தற் சபை

நிறுவன இடைத்தொடர்பு ஒழுங்குபடுத்தற் சபை இலங்கை மத்திய வங்கியினால் தாபிக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரினால் தலைமைதாங்கப்படுகின்ற இந்த உயர் மட்ட குழுவானது நிதிச் சந்தைகளின் முறையான விருத்திக்கு பொருத்தமான கொள்கை வழிகாட்டல்கள் வடிவமைக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு அமைக்கப்பட்டதோடு முழு நிதிசார் முறைமையின் நலன்சார்பாக அனைத்து ஒழுங்குறுத்துகை முகவராண்மைகளும் ஒருங்கிணைந்து தகவல்களை பரிமாறிக்கொள்கின்றன. சபை நிறுவன இடைத்தொடர்பு ஒழுங்குபடுத்தற் சபை பிரதிநிதித்துவப்படுத்தகின்றது.

### இலங்கை காப்புறுதிச் சங்கம் (இ.கா.ச)

இலங்கை காப்புறுதிச் சங்கமானது 1969 இல் தாபிக்கப்பட்டதோடு கா.கை.ஒ.சட்டத்தின் கீழ் பதிவுசெய்த ஒவ்வொரு காப்புறுதிக் கம்பனியும் அங்கத்துவத்தை பெற தகுதியானவையாகும். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தவிர்ந்த அனைத்து காப்புறுதிக் கம்பனிகளும் இலங்கை காப்புறுதிச் சங்கத்தின் அங்கத்தவர்களாக இருக்கின்றன. சங்கமானது சபையுடன் நெருங்கிய தொழில் உறவை பேணி வருகின்றது.

இலங்கை காப்புறுதிச் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவானது தமது சம்பந்தப்பட்ட துறைகள் தொடர்பான வியங்கள் தொடர்பில் நிறைவேற்றுக் குழுவுக்கு சிபாரிசுகளை செய்கின்ற ஆயுள் காப்புறுதி மன்றம், பொதுக் காப்புறுதி மன்றம், நிதி மற்றும் காப்புறுதிக் கணிப்பீட்டு உப குழுக்கள் ஆகியவற்றினால் உதவியளிக்கப்பட்டு முழுதுமளாவிய முகாமைத்துவத்திற்கு பொறுப்பாகவுள்ளது.

இலங்கை காப்புறுதிச் சங்கத்தினது பிரதான நோக்கங்கள்:-

இலங்கையில் காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி வியாபாரத்தில் கொடுக்கல்வாங்கல்களை செய்கின்ற அதன் உறுப்பினர்களின் பொதுவான நலன் மற்றும் நலனோம்புகை மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட பொதுமக்களில் தாக்கம் செலுத்துகின்ற அனைத்து விடயங்களிலும் உசாவுகைகள் மற்றும் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை பெற்றுவற்கு ஏற்றவகையில் அனைத்து காப்புறுதி வழங்குநர்களையும் ஒன்றாக கொண்டுவருதல்.

காப்புறுதி வியாபாரத்தில் சீரான, சிறந்த நடைமுறைகள் மற்றும் உயர் விழுமிய தராதரங்களை பேணி ஊக்குவிப்பதன் மூலம் காப்புறுதி செய்த மக்களின் நம்பிக்கையை விருத்தி செய்து அறிவூட்டுவதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விளக்கங்களை வழங்கி சட்டத்தை கண்காணித்தலும்.

இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் காப்புறுதி நடைமுறைகளையும் உத்திகளையும் மீளாய்வுசெய்து பரீட்சித்தலும் தேவையாயின் தற்போதுள்ள கொள்கைகள்/ அல்லது தீர்வைகளுக்கு திருத்தம் அல்லது மாற்றத்தை கொண்டுவற்தன் பின்னர் அவர்களது சிபாரிசுகளை செய்தலும்

கல்வி மற்றும் பயிற்சியினூடாக காப்புறுதித் துறையில் தொழில்வாண்மைத்தன்மையை ஊக்குவித்து, சிறப்பான முறையில் உதவியளித்து மேம்படுத்துவதும் இந்நோக்கத்திற்காக வகுப்புகள், மாநாடுகள், கருத்தரங்குகள், மன்றங்கள், உசாவுகைகள், செயலமர்வுகள் மற்றும் கூட்டங்களை ஏற்பாடுசெய்தலும்.

### இலங்கை காப்புறுதித் தரகர்கள் சங்கம் (இகா.த.ச)

இலங்கை காப்புறுதியாளர் தரகர்கள் சங்கமானது (இகா.த.ச) சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற ஒரேயொரு காப்புறுதி தரகர்கள் சங்கமாகும். கா.தொ.ஒ.சட்டதின் 79 ஆம் பிரிவின் பிரகாரம் காப்புறுதி தரகர்களாக பதிவை நாடுகின்ற ஒவ்வொரு

விண்ணப்பதாரியும் சபையினால் காப்புறுதி தரகர் ஒருவராக பதிவை செய்ய முன்னர் இந்த சங்கத்தின் அங்கத்துவத்தை பெறுவது கட்டாயமானதாகும். அங்கத்தவர்கள் இலங்கை காப்புறுதித் தரகர்கள் சங்கம் (இகா.த.ச) பின்பற்றப்படுகின்ற நடத்தைக் கோவையொன்றுக்கு உட்பட்டவர்களாக இருப்பர்.

அங்கத்தவர்கள் இலங்கை காப்புறுதியாளர் தரகர்கள் சங்கம் (இகா.த.ச) பின்பற்றப்படுகின்ற நடத்தைக் கோவையொன்றுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருப்பர்.

இலங்கை காப்புறுதித் தரகர்கள் சங்கத்தின் பிரதான நோக்கங்களாக:

பொதுமக்களுக்கு காப்புறுதி தரகர்களின் பங்களிப்பை பற்றி விழப்புணர்வை ஏற்படுத்துவது

அங்கத்தவர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தி உயர் மட்டதிலான திறன் மற்றும் தொழில்வாண்மையை ஏற்படுத்துதல்

2011.12.31ஆம் திகதியிலுள்ளவாறு பிரதான நிதி நிறுவனங்களின் சொத்துக்கள் தொடர்பான பரம்பலை வரைபடம் 12 பிரதிபலிக்கின்றது.

***வரைபடம் 12***

**பிரதான நிதி நிறுவனங்களின் சொத்துக்கள் தொடர்பான பரம்பல் - 2011**



## காப்புறுதிக் கம்பனிகள் தொடர்பான பங்குதாரர்களின் மொத்த நிதிகள்

2011.12.31ஆம் திகதியிலுள்ளவாறு காப்புறுதியாளர்களுக்கிடையிலான பங்குதாரர்களின் நிதி தொடர்பான பரம்பலை அட்டவணை 12 பிபரிக்கின்றது. இதன் பிரகாரம் வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், சிலிங்கோ இன்சுரன்ஸ் பீஎல்சீ மற்றும் அவிவா என்டீபீ இன்சுரன்ஸ் பீஎல்சீ ஆகிய மூன்று குறிப்பான காப்புறுதியாளர்கள் தொடர்பான பங்குதாரர்களின் நிதியானது துறையின் மொத்த பங்குதாரர்கள் நிதியின் மூன்றில் இரண்டு மடங்கை விடவும் அதிகமாகவுள்ளது (70.72 சதவீதம்).

*அட்டவணை 12*

| காப்புறுதியாளர்கள் | 2010 (அ) | | 2011 (ஆ) | | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த பங்குதாரர்களின் நிதிகள் ரூபா. '000 | % | பங்கு மூலதனம் ரூபா. '000 | மொத்த ஒதுக்கம் ரூபா. '000 | மொத்த பங்குதாரர்களின் நிதிகள் ரூபா. '000 | % |
| AAIPLC | 1,560,860 | 3.95 | 1,062,500 | 183,131 | 1,245,631 | 2.40 |
| AIL | - | - | 503,000 | - | 503,000 | 0.97 |
| AILL | 599,255 | 1.52 | 250,000 | 430,780 | 680,780 | 1.31 |
| ALILL | 140,654 | 0.36 | 492,499 | (269,955) | 222,544 | 0.43 |
| ANDBIPLC | 2,907,477 | 7.35 | 300,000 | 3,030,326 | 3,330,326 | 6.42 |
| ATPLC | 134,508 | 0.34 | 1,250,001 | (508,662) | 741,339 | 1.43 |
| CIL | 196,157 | 0.50 | 536,669 | (321,203) | 215,466 | 0.42 |
| CILL | 428,594 | 1.08 | 500,000 | (40,061) | 459,939 | 0.89 |
| CIPLC | 7,415,916 | 18.76 | 1,324,822 | 7,428,994 | 8,753,816 | 16.87 |
| COICL | 613,963 | 1.55 | 563,409 | 225,249 | 788,658 | 1.52 |
| CTL | - | | - | - | - | - |
| HNBAPLC | 1,016,340 | 2.57 | 1,171,875 | 437,841 | 1,609,716 | 3.10 |
| JIPLC | 2,701,755 | 6.83 | 1,496,000 | 1,479,041 | 2,975,041 | 5.73 |
| LICLL | 329,700 | 0.83 | 373,000 | 62,200 | 435,200 | 0.84 |
| LOLCICL | 203,352 | 0.51 | 300,000 | (62,305) | 237,695 | 0.46 |
| MBSLICL | 140,446 | 0.37 | 779,487 | (386,756) | 392,731 | 0.75 |
| OIL | - | - | 750,000 | (16,261) | 733,739 | 1.41 |
| PIL | 219,356 | 0.55 | 550,000 | 44,593 | 594,593 | 1.15 |
| SLICL | 18,138,985 | 45.88 | 6,000,000 | 18,609,429 | 24,609,429 | 47.43 |
| SSRS | 262,395 | 0.66 | 314,215 | 55,742 | 369,957 | 0.71 |
| UAPLC | 2,524,790 | 6.39 | 388,433 | 2,601,236 | 2,989,669 | 5.76 |
| **மொத்தம்** | **39,534,503** | **100** | **18,905,910** | **32,983,359** | **51,889,269** | **100** |

*(அ) மீளக் கணக்காய்வு செய்யப்பட்ட புள்ளிவிபரங்கள்*
*(ஆ) மாற்றமடையக்கூடிய சார்ந்த புள்ளிவிபரங்கள்*

**குறிப்பு :**

1. *வேண்டப்பட்ட பூரணமான தகவல்கள் இலங்கை காப்புறுதிச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் மேற்படி பகுப்பாய்வானது தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்களை உள்ளடக்கவில்லை.*
2. *சீ.ரீ.எல். ஆனது 2009 ஆகஸ்ட் 5ஆம் திகதியிலிருந்து காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதிலிருந்து தடுக்கப்பட்டது. இக் கம்பனியானது 2010.12.31 மற்றும் 2011..12.31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான கணக்காய்வு நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கவில்லை.*

### காப்புறுதித் தரகுக் கம்பனிகள் தொடர்பான செயலாற்றுகை

2011ஆம் ஆண்டுக் காலத்தில், 2010ஆம் ஆண்டில் செயற்பட்ட நாற்பத்திரண்டு தரகுக் கம்பனிகளின் செயலாற்றுகையுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு காப்புறுதிச் சந்தையில் செயற்பட்ட நாற்பத்தி ஆறு காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் செயலாற்றுகை முன்னேற்றமொன்றைப் பிரதிபலிக்கின்றன. நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி ஆகிய இரண்டு வியாபாரங்கள் தொடர்பிலும் 2011ஆம் ஆண்டுக் காலத்தில் காப்புறுதித் தரகுக் கம்பனிகளால் ஈட்டப்பட்ட பதியப்பட்ட மொத்தத் தவணைப்பணம் ரூபா. 10,489 மில்லியனாகும் (2010 இல் இது ரூபா. 9,560 மில்லியன்). இத்தொகையானது ஒட்டுமொத்தமாகப் பதியப்பட்ட மொத்தத் தவணைப் பணம் தொடர்பில் 13.36 (2010: 14.42%) சதவீதமாகும். காப்புறுதித் தரகர்களால் ஈட்டப்பட்ட ஒட்டுமொத்த பதியப்பட்ட மொத்தத் தவணைப் பணத்தொகையில், ரூபா. 296 மில்லியன் (2010 இல் ரூபா. 243 மில்லியன்) தொகையானது நீண்டகாலக் காப்புறுதி வியாபாரத்தின் மூலம் பெறப்பட்டதோடு இது நீண்டகாலக் காப்புறுதி தொடர்பான மொத்தமாகப் பதியப்பட்ட மொத்தத் தவணைப் பணத்தின் 0.84 (2010: 0.78%) சதவீதமாகும். எஞ்சிய ரூபா. 10,193 மில்லியன் தொகையானது பொதுக் காப்புறுதி வியாபாரம் மூலம் பெறப்பட்டதோடு இது பொதுக் காப்புறுதி தொடர்பில் மொத்தமாகப் பதியப்பட்ட தவணைப்பணத்தின் 23.52 (2010: 26.54%) சதவீதமுமாகும்.

2011 ஆம் ஆண்டில் பதியப்பட்ட மொத்தத் தவணைப் பணம் தொடர்பில் பத்தொன்பது காப்புறுதித் தரகுக் கம்பனிகள் ரூபா. 100 மில்லியனுக்கும் கூடுதலாகப் பங்களித்துள்ளதோடு, அட்டவணை 13 இல் பட்டியலிடப்பட்டவாறு பதியப்பட்ட மொத்தத் தவணைப்பணம் தொடர்பில் ரூபா. 9,825 மில்லியனைப் பதிந்துள்ளன. மேற்படி பத்தொன்பது காப்புறுதித் தரகுக் கம்பனிகளினதும் பங்களிப்பானது 2011ஆம் ஆண்டிற்காக ஈட்டிய அனைத்து காப்புறுதித் தரகுக் கம்பனிகளினதும் பதியப்பட்ட மொத்தத் தவணைப்பணத்தின் 93.66 சதவீதமாகும்.

*அட்டவணை 13*

**காப்புறுதித் தரகுக் கம்பனிகளால் ஈட்டப்பட்ட பதியப்பட்ட மொத்தத் தவணைப் பணம் - 2011**

| | பதியப்பட்ட மொத்தத் தவணைப் பணம் (ரூபா. ‘000) | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | தரகுக் கம்பனியின் பெயர் | நீண்டகாலம் | | பொது | | மொத்தம் | |
| | | (ரூபா. ‘000) | % | (ரூபா. ‘000) | % | (ரூபா. ‘000) | % |
| 1 | ஏ.டீ.இஸட். காப்புறுதித் தரகர் (பிறை) லிமிடட் | 5,191 | 1.75 | 240,111 | 2.36 | 245,302 | 2.34 |
| 2 | ஏய்கன் ஸ்பென்ஸ் காப்புறுதித் தரகர் (பிறை) லிமிடட் | 991 | 0.33 | 331,115 | 3.25 | 332,106 | 3.17 |
| 3 | அல்பின்கோ காப்புறுதித் தரகர் (பிறை) லிமிடட் | 379 | 0.13 | 407,711 | 4.00 | 408,090 | 3.89 |
| 4 | அஸட்லைன் காப்புறுதித் தரகர் (பிறை) லிமிடட் | - | - | 693,406 | 6.80 | 693,406 | 6.61 |
| 5 | சீஎப் காப்புறுதித் தரகர் (பிறை) லிமிடட் | 22 | 0.01 | 1,182,254 | 11.60 | 1,182,275 | 11.27 |
| 6 | வர்த்தக காப்புறுதித் தரகர் (பிறை) லிமிடட் | 78,263 | 26.42 | 1,460,833 | 14.33 | 1,539,096 | 14.67 |
| 7 | டெல்மெஜ் காப்புறுதித் தரகர் (பிறை) லிமிடட் | 6,482 | 2.19 | 693,143 | 6.80 | 699,625 | 6.67 |
| 8 | எஸ்ஸஜீ கரீம்ஜீ அன் கோ (பிறை) லிமிடட் | 6,140 | 2.07 | 270,365 | 2.65 | 276,505 | 2.64 |
| 9 | பைனலி காப்புறுதித் தரகர் (பிறை) லிமிடட் | 6,875 | 2.32 | 1,115,613 | 10.94 | 1,122,488 | 10.70 |
| 10 | க்ளோபல் காப்புறுதிச் சேவைகள் (பிறை) லிமிடட் | - | - | 472,998 | 4.64 | 472,998 | 4.51 |
| 11 | கைத்தொழில் மற்றும் வர்த்தக காப்புறுதித் தரகர் (பிறை) லிமிடட் | 1,852 | 0.63 | 413,142 | 4.05 | 414,994 | 3.96 |
| 12 | நேஷன்ஸ் காப்புறுதித் தரகர் (பிறை) லிமிடட் | 8,431 | 2.85 | 605,404 | 5.94 | 613,835 | 5.85 |
| 13 | புரோகெயர் காப்புறுதித் தரகர் (பிறை) லிமிடட் | 1,235 | 0.42 | 147,051 | 1.44 | 148,286 | 1.41 |
| 14 | புரடெக்ஷன்ஸ் அன் அஸ்யுரன்ஸ் காப்புறுதித் தரகர் (பிறை) லிமிடட் | 399 | 0.13 | 617,683 | 6.06 | 618,082 | 5.89 |
| 15 | ரிலையன்ஸ் காப்புறுதித் தரகர் (பிறை) லிமிடட் | 3,395 | 1.15 | 151,564 | 1.49 | 154,959 | 1.48 |
| 16 | செனரத்ன அசோசியேட்ஸ் லிமிடட் | 11,066 | 3.74 | 241,612 | 2.37 | 252,678 | 2.41 |
| 17 | ஸ்ரடஜிக் காப்புறுதித் தரகர் (பிறை) லிமிடட் | 825 | 0.28 | 244,950 | 2.40 | 245,775 | 2.34 |
| 18 | சண் காப்புறுதித் தரகர் லங்கா (பிறை) லிமிடட் | 116,863 | 39.46 | 120,953 | 1.19 | 237,816 | 2.27 |
| 19 | செனித் காப்புறுதித் தரகர் (பிறை) லிமிடட் | 2,020 | 0.68 | 164,304 | 1.61 | 166,324 | 1.59 |
| | **உப மொத்தம்** | **250,429** | **84.55** | **9,574,213** | **93.93** | **9,824,642** | **93.66** |
| | **ஏனைய காப்புறுதித் தரகுக் கம்பனிகள் (27)** | **45,753** | **15.45** | **618,703** | **6.07** | **664,456** | **6.34** |
| | **மொத்தம்** | **296,182** | **100** | **10,192,916** | **100** | **10,489,098** | **100** |

2002 ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித் தரகுக் கம்பனிகள் ஈட்டிய பதியப்பட்ட மொத்தத் தவணைப் பணம் தொடர்பில் வரைபடம் 13 விபரிக்கின்றது.

***வரைபடம் 13***

**காப்புறுதித் தரகுக் கம்பனிளால் ஈட்டப்பட்ட பதியப்பட்ட மொத்தத் தவணைப்பணம் - 2002 முதல் 2011 வரை**




| | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதியப்பட்ட மொத்த தவணைப் பணம் (ரூ.மில்) - நீண்டகாலம் | 50 | 76 | 88 | 103 | 144 | 158 | 195 | 188 | 243 | 296 |
| பதியப்பட்ட மொத்த தவணைப் பணம் (ரூ.மில்) - பொது | 2,765 | 3,573 | 4,117 | 5,208 | 6,028 | 7,393 | 8,781 | 8,698 | 9,317 | 10,193 |
| தரகர்களின் பங்களிப்பு - பதியப்பட்ட மொத்த தவணைப் பணத்தின் சதவீதம் | 13.88 | 15.11 | 14.22 | 14.26 | 14.34 | 14.55 | 15.43 | 15.44 | 14.42 | 13.36 |

## காப்புறுதிக் கம்பனிகளின் சுருக்கப் பெயர்கள்

| | | |
|---|---|---|
| AAIPLC | : | ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸ் பீஎல்சீ |
| AIL | : | ஆர்பிகோ இன்சுரன்ஸ் லிமிடட் |
| AILL | : | எலையன்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட் |
| ALILL | : | எலையன்ஸ் லைப் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட் |
| ANDBIPLC | : | அவிவா என்டீபீ இன்சூரன்ஸ் பீஎல்சீ |
| ATPLC | : | அமானா தகாபுல் பீஎல்சீ |
| CIL | : | சார்ரிஸ் இன்சூரன்ஸ் லிமிடட் |
| CILL | : | கன்டினென்டல் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட் |
| CIPLC | : | சிலிங்கோ இன்சூரன்ஸ் பீஎல்சீ |
| COICL | : | கூட்டுறவு காப்புறுதிக் கம்பனி லிமிடட் |
| CTL | : | சிலிங்கோ தகாபுல் லிமிட். |
| HNBAPLC | : | எச்என்பீ. அஸ்யுரன்ஸ் பீஎல்சீ |
| JIPLC | : | ஜனசக்தி இன்சூரன்ஸ் பீஎல்சீ |
| LICLL | : | லைப் இன்சுரன்ஸ் கோபரேஷன் (லங்கா) லிமிடட் |
| LOLCICL | : | எல்ஓஎல்சீ இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட் |
| MBSLICL | : | எம்.பீ.எஸ்.எல். இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட் |
| NICL | : | தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிடட் |
| NITF | : | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் |
| OIL | : | ஓரியன்ட் இன்சுரன்ஸ் லிமிடட் |
| PIL | : | பீபிள்ஸ் இன்சூரன்ஸ் லிமிடட் |
| SLICL | : | இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் லிமிடட். |
| SSRS | : | சீமாசஹித சணச ரக்ஷண சமாகம |
| UAPLC | : | யூனியன் அஸ்யுரன்ஸ் பீஎல்சீ |

# தொழிற்பாட்டு மீளாய்வு

## கண்காணிப்பு தொடர்பான மீளாய்வு - 2011

### காப்புறுதிக் கம்பனிகள்

### 1. சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற விபரத்திரட்டுக்கள் தொடர்பான மீளாய்வு

**வருடாந்த நியதிச்சட்ட வருமானங்கள், நிதிசார் கணக்காய்வுக் கூற்று மற்றும் காப்புறுதிக் கணிப்பீட்டாளர் அறிக்கைகள்**
காப்புறுதிக் தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், சகல காப்புறுதியாளர்களும் தமது வருடாந்த நியதிச்சட்ட வருமானங்கள் மற்றும் நிதிசார் கணக்காய்வுக் கூற்றுகள் ஆகியவற்றை குறித்த நிதியாண்டு நிறைவையடுத்து வருகின்ற ஆறு மாதங்களினுள் சபைக்குச் சமர்ப்பிப்பதற்கு வேண்டப்படுகின்றனர். மேலும், நீண்டகால காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற காப்புறுதியாளர்கள் தமது காப்புறுதிக் கணிப்பீட்டாளர்களின் அறிக்கையையும் மற்றும் வருடாந்த நியதிச்சட்டப்படியான வருமானங்களுடனான நீண்டகால காப்புறுதி நிதியம் தொடர்பான சாராம்சம் ஒன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

சபையானது வருமானங்கள் உரியவேளையில் சமர்ப்பிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதோடு, அவை கா.கை.ஒ.சட்ட ஏற்பாடுகளுக்கும் ஏனைய விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் இசைவாகவும் துல்லியமாகவும் இருக்கின்றனவா என்பதையும் பரீட்சிக்கின்றது. இதன்போது நியதிச்சட்ட தேவைப்பாடுகளிலிருந்தான விலகல்களையும் சபை அடையாளம் கண்டதோடு, அவை தொடர்பில் சம்பந்தப்பட்ட கம்பனிகளுக்கு குறிப்பிட்ட காலக்கெடுவினுள் நிவர்த்தி செய்யுமாறும் பணிக்கப்பட்டன. இவை தவிர, வருமானங்கள் தொடர்பான இம் மீளாய்வின் போது சபையினால் இனங்காணப்பட்ட பிரதான விடயங்கள் தொடர்பில் கூட்டங்களிலும் மற்றும் சம்பந்தப்பட்ட கம்பனிகளின் அமைவிடத்திலான கண்காணிப்பின் போதும் எடுத்துரைக்கப்பட்டன.

**காலாண்டு ரீதியான வருமானங்கள்**
சகல காப்புறுதியாளர்களும் தத்தமது காலாண்டு வருமானத்தை ஒவ்வொரு காலாண்டினதும் இறுதி நாற்பத்தைந்து தினங்களினுள் சபைக்கு சமர்ப்பிப்பதற்குமாறு கா.தொ.ஒ.சட்டத்தின் ஏற்பாடுகள் மூலம் வேண்டப்படுகின்றனர். சபையானது 2011ஆம் ஆண்டின் நான்கு காலாண்டுகளுக்குமாக சகல காப்புறுதியாளர்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு வருமானங்களை, அவர்களின் காலாண்டுச் செயலாற்றுகை மற்றும் நிதிசார் நிலைமை ஆகியனவற்றை மதிப்பிடும் நோக்கில் மீளாய்வு செய்தது.

ஒவ்வொரு காப்புறுதியாளர்களினதும் கட்டுப்பண வருமானம், உத்தரவாத இலாபம் அத்துடன் நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி ஆகிய இரண்டுக்குமான நிகர இலாபம் போன்றவற்றின் அடிப்படையிலான அவர்களின் காலாண்டு ரீதியான செயலாற்றுகைகள் தொடர்பில், காப்புறுதித் துறை முழுதுமளாவிய செயலாற்றுகையினை அறிந்துகொள்ளுமுகமாக விரிவானதொரு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆண்டின் முழுக் காலாண்டுகளுக்குமான ஒவ்வொரு காப்புறுதியாளர்களினதும் செயலாற்றுயினைத் தீர்மானிக்கும் வகையில் அவர்களின் செயலாற்றுகை விகிதங்கள் கணிப்பிடப்பட்டதோடு, அவற்றின் இலாபத்தன்மை, செலவினம் மற்றும் கோரிக்கைகள் போன்றனவும் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இவை முன்னைய காலாண்டு செயலாற்றுகை விகிதங்களுடன் ஒப்பீட்டாய்வும் செய்யப்பட்டன.

ஒவ்வொரு காப்புறுதியாளர்களதும் காலாண்டு முடிவின் போதான நிதிசார் நிலைப்பாடானது; அவர்களின் சொத்து, பொறுப்பு போன்றவற்றின் நிலைப்பாடுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலமும் திரவத் தன்மைக்கும் மூலதன ஏற்புக்குமான விகிதங்களைக் கணிப்பிடுவதன் மூலமும் அவதானிக்கப்பட்டன. காலாண்டு வருமானங்களை மீளாய்வு செய்கின்ற போது அவதானிக்கப்பட்ட இணக்கப்பாடின்மைகள்.·. முரண்பாடுகள்/ தவறுகள் ஆகியன சம்பந்தப்பட்ட கம்பனிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதோடு, குறிப்பிட்ட காலத்தினுள் அவற்றை நிவர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

**மாதாந்த வருமானங்கள்**
2011ஆம் ஆண்டுக்காலத்தில், சபையானது மூன்று காப்புறுதியாளர்களின் மாதாந்த வருமானங்கள் தொடர்பில், அவர்களின் நிதிசார் நிலைப்பாடுகளையும் மற்றும் அவர்களின் வியாபார செயற்பாடுகளையும் கூர்ந்தாயும் நோக்கில் நெருக்கமாகவும் தொடர்ச்சியாகவும் மீளாய்வு செய்தது. அத்தகைய கம்பனிகள் ஒவ்வொரு மாத முடிவை அடுத்து வருகின்ற பதினைந்து நாட்களினுள் அவர்களின் மாதாந்த வருமானங்களை சபை விடுத்த பணிப்புரைகளின் பிரகாரம் சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்டன. மீளாய்வின் போது அவதானிக்கப்பட்ட இணக்கப்பாடின்மைகள் / முரண்பாடுகள் சம்பந்தப்பட்ட கம்பனிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதோடு, அவற்றை நிவர்த்த செய்வதற்காகவும் வேண்டப்பட்டனர்.

### 2. கடன்தீர் எல்லை விதிமுறைகளுடனான இணக்கப்பாட்டினைக் கண்காணித்தல்

காப்புறுதித் துறையில் இடம்பெற்று வருகின்ற மேம்பாடுகளைக் கருத்திற்கொண்டு, கடன்தீர் எல்லை (நீண்டகாலக் காப்புறுதி) விதிமுறைகள்-2002 மற்றும் கடன்தீர் எல்லை (பொதுக் காப்புறுதி) விதிமுறைகள்-2004 ஆகியன தொடர்பில் 2011இல் சபை திருத்தங்களை மேற்கொண்டது. கடன்தீர் எல்லை (பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி வியாபாரங்கள்) திருத்த விதிமுறைகள்-2011 ஆனது 2011 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவதோடு, இதன் ஏற்பாடுகளின் பிரகாரம், சகல காப்புறுதியாளர்களும் இரு வகுப்பு காப்புறுதி வியாபாரங்கள் தொடர்பிலும் குறைந்தபட்சம் தேவையான கடன்தீர் எல்லைகளை எப்போதும் பேணுமாறு வேண்டப்படுகின்றனர். அதற்கிணங்க, சபையானது கடன்தீர் எல்லை விதிமுறைகளின் வரிசையில் புதிய அறிக்கையிடும் வடிவங்களை வரைவுசெய்ததோடு, அவை சகல காப்புறுதிக் கம்பனிகளுக்கும் விநியோகிக்கப்பட்டன.

சென்ற ஆண்டுகளைப் போன்றே, 2011 இலும் சகல காப்புறுதியாளர்களதும் நீண்டகால மற்றும் பொது ஆகிய இரண்டு காப்புறுதி வியாபாரங்களுக்கான கடன்தீர் எல்லைகளை சபையானது ஆழமாகக் கண்காணித்தது. அனைத்து காப்புறுதியாளர்களும் தத்தமது கடன்தீர் எல்லை கணிப்பீடுகளை, தமது மாதாந்த/ காலாண்டு ரீதியான வருமானங்கள் மற்றும் வருடாந்த நியதிச்சட்ட ரீதியான வருமானங்கள் ஆகியவற்றுடன் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். இது சம்பந்தப்பட்ட கடன்தீர் எல்லை விதிமுறைகளின் பிரகாரம் கணிப்பிடப்பட்டுள்ளமையை சபை உறுதிசெய்தது. கடன்தீர் எல்லை தொடர்பான தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யாத காப்புறுதியாளர்கள் அல்லது தெளிவின்றிய கடன்தீர் கணிப்பீடுகளை சமர்ப்பித்த காப்புறுதியாளர்கள் தமது குறைபாடுகளை குறிப்பிட்ட காலத்தினுள் நிவர்த்தி செய்வதற்கு வேண்டப்பட்டனர்.

### 3. காப்புறுதித் துறைக் கண்காணிப்பிற்கான அபாய உணர்வு குறைந்த மூலதன மாதிரி

2009 இல், இலங்கையில் காப்புறுதித் துறையில் அபாய உணர்வு குறைந்த மூலதனப் பரிபாலன முறையொன்றை உலக வங்கி மற்றும் முதல் முன்னெடுப்பு ஆகியவற்றின் உதவியுடன் சபை மேற்கொண்டது. அபாய உணர்வு குறைந்த மூலதனப் பரிபாலன முன்மொழிவு தொடர்பில் உதவியை வழங்குவதற்காக உலக வங்கி மற்றும் முதல் முன்னெடுப்பு என்பவற்றினால் டெலாயிட் டுஷ் டோஹ்மட்சா இந்தியா (பிரை) லிமிடட் நியமிக்கப்பட்டது. சபையானது இக்கருத்திட்டத்தின் மூலம் அதன் கண்காணிப்புச் செயன்முறைகளை மேம்படுத்துவதற்கு உத்தேசித்துள்ளதோடு,

இது குறைந்தபட்ட மூலதனத் தேவைப்பாடுகளை பேணுவதற்குரிய இடர் அடிப்படையிலான வேலைச்சட்டகம் ஒன்றை வழங்குவதன் மூலம், சந்தைப் பங்காளர்கள் தமது வியாபார இடர்களை வினைத்திறன்மிக்க முறையின் எதிர்கொள்வதற்கு வழிவகுக்கும்.

இக்கருத்திட்டத்தின் முதற்கட்டமாக, சம்பந்தப்பட்ட விடயங்களை இனங்காண்பதற்கும் மற்றும் இலங்கையின் காப்புறுதிச் சந்தை தொடர்பில் புரிந்துணர்வொன்றை வழங்குவதற்குமான சந்தை மதப்பீட்டு அறிக்கையானது 2010ஆம் ஆண்டில் நிறைவுசெய்யப்பட்டது. இவ் அறிக்கையானது காப்புறுதித் துறையில் செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது எதிர்காலத்தில் தாக்கம் செலுத்தும் வாய்ப்புள்ள மேலதிக அடிப்படைக் காரணிகள் மற்றும் வளர்ச்சிப் பிரமாணங்கள் தொடர்பிலும் சுட்டிக்காட்டுகிறது.

இக்கருத்திட்டத்தின் இரண்டாவது கட்டமானது 2011 பெப்ரவரியில் காப்புறுதித் துறைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதான பண்புசார் அறிக்கையாகும். இது இடர் அடிப்படையிலான மூலதன வேலைச்சட்டகக் கட்டமைப்பு மற்றும் அதன் விரிவான கோட்பாடுகள் ஆகியன தொடர்பான முன்மொழிவுகளைக் கொண்டுள்ளது. இலங்கையின் காப்புறுதித் துறை தொடர்பான தனித்துவக் கட்டமைப்பிற்குப் பொருத்தமான இடர் காரணிகளை இனங்கண்டு அவற்றை வரையறை செய்வவதே இவ் அறிக்கையின் நோக்கமாகவிருந்தது.

அளவுசார் அறிக்கையானது 2011 ஒக்டோபரில் காப்புறுதித் துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டதோடு, இதில் விபரிக்கப்பட்டுள்ள பல்வேறு வகை இடகளுக்கான மூலதன சாட்டுதல்களை இனங்கண்டு அவற்றை பொருத்தமாக அளவிடுகின்றது. மேலும் இவ் அறிக்கையானது காப்புறுதியாளர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விலை மதிப்பீட்டு முறையியலிலுள்ள மாற்றங்களையும் சுட்டிக்காட்டியது. சபையானது அளவுசார் அறிக்கையின் காப்புறுதித் துறைக்கு அறிமுகம் செய்வதற்கான முன்வைப்புரை ஒன்றை உலக வங்கியின் கருத்திட்டத் தலைவர், டெலாயிட் இந்தியா இன் ஆலோசகர்கள், காப்புறுதியாளர்களின் பிரதிநிதிகள், வெளியக கணக்காய்வாளர்கள், காப்புறுதிக் கணிப்பீட்டாளர்கள் மற்றும் சபையின் பணியாட்தொகுதியினர் ஆகியோரின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்தது. மேற்படி இரு அறிக்கைகள் தொடர்பான தமது கருத்துக்களை சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பமும் துறை சார் பங்களிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டன.

வரைபு செய்யப்பட்ட விதிமுறைகளை பூர்த்தி செய்தல், இ.கா. சபையின் பணியாட்தொகுதியினருக்கான பயிற்சித் திட்டங்களை நடாத்துதல் மற்றும் வீதிச் சோதனையை 2012 இல் ஆரம்பித்தல் போன்றன தொடர்பாக உலக வங்கியின் ஆலோசகர்களுடன் மேலதிக கலந்தாராய்வுகள் இடம்பெற்று வருகின்றன.

## 4. புதிய உரிமங்களை வழங்கல்

ஒரியன்ட் காப்புறுதி லிமிடட் மற்றும் ஆர்பிகோ காப்புறுதி லிமிடட் ஆகியவற்றின் நிதிசார் நிலைமைகள், 2011ஆம் ஆண்டிற்காக அவர்களைப் பதிவுசெய்வதற்கு முன்னர் சபையினால் மதிப்பிடப்பட்டது. மேற்படி கம்பனிகளால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை, குறிப்பாக வியாபார திட்டங்கள் மற்றும் நிறுவனக் கட்டமைப்புகள் தொடர்பான விபரம், முன்கணிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள், கம்பனியின் வெளியக கணக்காய்வாளர்களால் மூலதனத்தை உறுதிப்படுத்தி வழங்கப்படுகின்ற சான்றிதழ்கள், மீள்காப்புறுதி மற்றும் கடன் தரப்படுத்தல் விபரங்கள் போன்ற ஆவணங்களை சபை மீள்பரிசீலனை செய்தது. அதனைத் தொடர்ந்து மேற்படி ஆவணங்கள் சபையின் தேவைப்பாடுகளை பூரணப்படுத்துவதனால் ஒரியன்ட் காப்புறுதி லிமிடட் மற்றும் ஆர்பிகோ காப்புறுதி லிமிடட் ஆகியவற்றுக்கான பதிவுகள் வழங்கப்பட்டன.

## 5. முதலீட்டுக் குறிப்பீடுகளுடனான இணக்கப்பாட்டினை கண்காணித்தல்

**அரசாங்க பிணையங்களிலுள்ள முதலீடுகள்**

காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் (கா.தொ.ஒ.சட்டம்) 25ஆம் பிரிவின் பிரகாரம், சகல காப்புறுதியாளர்களும் தொழில்நுட்ப ஒதுக்கம் தொடர்பில் (பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்கானது) 20 சதவீதத்திற்கும் குறையாத சொத்துக்களையும், நீண்டகால காப்புறுதி நிதியம் தொடர்பில் (நீண்டகால காப்புறுதி வியாபாரத்திற்கானது) 30 சதவீதத்திற்கும் குறையாத சொத்துக்களையும் அரச பிணையங்களில் பேணிவரல் வேண்டும். சகல காப்புறுதியாளர்களும் மேற்படி காப்புறுதிக் கைத்தொழிற்துறை ஒழுங்குறுத்துகைச் சட்ட ஏற்பாடுகளுக்கு இசைவாக சொத்துக்களைக் கொண்டுள்ளனரா என்பதை 2011ஆம் ஆண்டின் சகல காலாண்டுகள் தொடர்பிலும் சபை கண்காணித்ததோடு, மாதாந்த கண்காணிப்பின் கீழான காப்புறுதியாளர்கள் தொடர்பில் அவை முன்வைக்கின்ற திரும்பல்களை மீளாய்வு செய்வதன் மூலம் மாதாந்த முடிவிலும் கண்காணித்தது. மேலும், திரும்பல்கள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அரசாங்க பிணையங்களிலுள்ள உரிய முதலீடுகளையும் மற்றும் அத்தகைய முதலீடுகளது தலைப்பு மற்றும் உரித்துடைமை ஆகியவற்றையும் உறுதிப்படுத்தும் நோக்கில், சபையானது ஒவ்வொரு காப்புறுதியாளர் தொடர்பிலும் அறிக்கையிடுகின்ற ஒவ்வொரு காலப்பகுதியின் முடிவிலுள்ளவாறாக இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்படுகின்ற வைப்புக் கூற்றினை மீளாய்வுசெய்தது. அரசாங்க பிணையங்களிலுள்ள முதலீடுகள் தொடர்பில் மேற்படி இணக்கப்பாட்டினைக் கொண்டிராத நிறுவனங்களுக்கு அது சம்பந்தமான உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

**தீர்மானங்களின் பிரகாரத்திலான ஏனைய முதலீடுகள்**

காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள 2011 மார்ச்சு 01ஆம் திகதிய தீர்மானம் 1 இல் (2011 ஒக்டோபர் 20 இல் திருத்தப்பட்டது) குறிப்பிடப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட்ட சொத்துக்களில் தொழில்நுட்ப ஒதுக்கம் மற்றும் நீண்டகால காப்புறுதி நிதியம் போன்றன தொடர்பில் சம அளவு சொத்துக்களை முதலீடுசெய்யுமாறு சகல காப்புறுதியாளர்களும் வேண்டப்படுகின்றனர். காப்புறுதிக் கம்பனிகள் மேற்படி தீர்மானம் 1 இற்கு அமைய இணங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கில் அவர்களின் முதலீடுகளை சபை கண்காணித்ததோடு, அவ்வாறு இணங்கமுறாத பட்சத்தில், அதற்கான உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஆலோசனையும் வழங்கியது.

## 6. அமைவிடத்திலான கண்காணிப்புகள்

2011ஆம் ஆண்டுக்காலத்தில், மூன்று அமைவிடத்திலான கண்காணிப்புக்களை காப்புறுதிக் கம்பனிகளின் அமைவிடங்களுக்குச் சென்று மேற்கொண்டதோடு நிறுவனத்தின் செயற்பாடுகள், முறைமைகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பன தொடர்பில் காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் ஏற்பாடுகளுடனான அவர்களின் இணக்கப்பாடுகளை மதிப்பிடும் வகையில் மீளாய்வையும் மேற்கொண்டது. இதன்போது மேம்பாடுகள் தேவைப்பட்ட விடயப் பிரதேசங்கள் தொடர்பில் சில பரிந்துரைகளையும் சபை வழங்கியதோடு, அவர்களின் இடர் மதிப்பீட்டுச் சுருக்கத்தையும் மீளாய்வு செய்தது. சபையானது இந்த இடர் மதிப்பீட்டுச் சுருக்கத்தினை வருடாந்தம் ஆவணம் செய்வதோடு, காப்புறுதியாளர்கள் தொடர்பான நிறுவன அமைப்புசார் கட்டமைப்பும் உரித்துடைமையும், வியாபார சுயவிபரம், சிரேஷ்ட முகாமைத்துவக் கட்டமைப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம், கோரிக்கைகளை நிர்வகித்தல், இடர் முகாமைத்துவத் தொழிற்பாடு போன்ற பல்வேறு தகவல்களையும் திரட்டிப் பெறுகின்றது.

### 7. தகவல்களை இலங்கை மத்திய வங்கியிடம் சமா்ப்பித்தல்

காப்புறுதித் துறையின் செயலாற்றுகையினை அறிந்துகொள்ளுமுகமாக, 2011இன் ஒவ்வொரு காலாண்டுக்குமான காப்புறுதியாளா்களின் கட்டுப்பண வருமானம், இலாபத் தன்மை, திரவத் தன்மை, மூலதனம் மற்றும் அவா்களின் ஸ்திரத் தன்மை போன்றவற்றை சபை விரிவாக பகுப்பாய்வு செய்தது. முழுதுமளாவிய காப்புறுதிக் கைத்தொழில் துறையின் செயலாற்றுகையினை உறுதி செய்யும் நோக்கில் காப்புறுதியாளா்களால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் செயலாற்றுகை விகிதங்கள் கணிப்பிடப்பட்டன. காப்புறுதிக் கைத்தொழிலின் நிதிசாா் செயலாற்றுகை மற்றும் நிதிசாா் நிலைப்பாடு என்பன தொடா்பான தகவல்கள் ஒவ்வொரு காலாண்டிற்குமாக இலங்கை மத்திய வங்கியின் நிதித்துறை முறைமை உறுதித்தன்மைப் பிரிவிற்கு சமா்ப்பிக்கப்பட்டன.

### 8. மீள்காப்புறுதி ஏற்பாடுகள் தொடா்பான மீளாய்வு

சகல காப்புறுதியாளா்களும் காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஆண்டுதோறும் தமது மீள்காப்புறுதி உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கான சான்றிதழ்களின் பிரதிகளை சபைக்கு சமா்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனா். காப்புறுதியாளா்கள் போதுமான மீள்காப்புறுதி உள்ளடக்கத்தைப் பெற்று அவா்களின் காப்புறுதி இடா்களை மட்டுப்படுத்துகின்றனரா என்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் அத்தகைய ஆவணங்களை சபை கவனமாக ஆராய்ந்தது. காப்புறுதி நிறுவனங்கள் ஏனைய பல்வேறு மீள்காப்புறுதியாளா்களுடனான மீள்காப்புறுதி ஏற்பாட்டொழுங்குகளில் ஈடுபடும் போது, காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் பிரிவு 31(1) இன் கீழ் சபையினால் வழங்கப்பட்ட நெறிமுறைகளுடன் இசைந்து செயற்படுவதற்கு வேண்டப்படுகின்றனா்.

### 9. சுற்றுநிருபம் 18 இன் பிரகாரம் வருடாந்தம் இரு இணக்கப்பாட்டுச் சான்றிதழைச் சமா்ப்பித்தல்

சகல காப்புறுதியாளா்களும் சுற்றுநிருபம் 18 இன் பிரகாரம் தமது ஒவ்வொரு அரையாண்டுக்குமான இணக்கப்பாட்டுச் சான்றிதழை; வருடாந்தம் பெப்ருவரி 15ஆம் திகதி மற்றும் ஆகஸ்ட் 15ஆம் திகதி ஆகிய தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னரோ சபைக்குச் சமாப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனா். சகல காப்புறுதியாளா்களும் காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் ஏற்பாடுகளுடனான இணக்கம், சபையின் நெறிமுறைகளுக்கமைய அங்கீகரிக்கப்பட்ட மீள்காப்புறுதியாளா்களுடனான உடன்பாட்டு மற்றும் விருப்பத்தோ்வுடைய மீள்காப்புறுதி ஏற்பாடுகளைக் கொண்டுள்ளமை, கடன்தீா் திறன் எல்லை விதிகளுடனான இணக்கம், குறைந்தபட்ச முதலீட்டுத் தேவையை நிறைவேற்றுகின்றமை மற்றும் பொதுக் காப்புறுதிக் கொள்கைக்கான கட்டுப்பண உத்தரவாதத்துடனான இணக்கம் போன்றவற்றை உறுதிப்படுத்தும் நோக்கில், 2011ஆம் ஆண்டுக் காலத்தினுள் காப்புறுதியாளா்களால் சமா்ப்பிக்கப்பட்ட இணக்கப்பாட்டுச் சான்றிதழை சபை மீளாய்வு செய்தது.

## காப்புறுதித் தரகா்கள்

### 1. காலாண்டு ரீதியான விபரத்திரட்டுக்கள், இடைக்கால நிதிக் கூற்றுக்கள் மற்றும் நிதிசாா் கணக்காய்வுக் கூற்றுக்கள் ஆகியன தொடா்பான மீளாய்வு

காப்புறுதித் தரகா்களால் சமா்ப்பிக்கப்படுகின்ற காலாண்டுகளுக்கான திரும்பல்கள், இடைக்கால நிதிக்கூற்றுக்கள் மற்றும் நிதிசாா் கணக்காய்வுக் கூற்றுக்கள் ஆகியன தொடா்பான மீளய்வுச் செயற்பாடானது நிறுவனங்களுக்கு வெளியிலிருந்தான கண்காணிப்பு தொடா்பில் பிரதானமானமானதாகும். 2010 பெப்ரவரி 25ஆம் திகதிய 1642/16 (முதலாம் அட்டவணை) ஆம் இலக்க வா்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சகல காப்புறுதித் தரகா்களும் ஒவ்வொரு காலாண்டுக்குமான தமது திரும்பல்களைச் சமா்ப்பிப்பதற்கும் மற்றும் அந்தந்த காலாண்டு முடிவின் இறுதி 45 நாட்களினுள் தமது இடைக்கால நிதிக்கூற்றுக்களைச் சமா்ப்பிப்பதற்கும் வேண்டப்படுகின்றனா். சகல காப்புறுதி தரகா்களும் 2011ஆம் ஆண்டுக்காலத்தில் சமா்ப்பித்த திரும்பல்களை சபை மீளாய்வு செய்ததோடு இதன்போது அறியப்பட்ட பிரச்சினைகள் (உதாரணமாக - முழுமையற்ற தகவல்கள், பிழையான கணிப்பீடுகள், மாறுபட்ட வடிவங்கள், முரண்பாடுகள் போன்றன) சம்பந்தப்பட்ட காப்புறுதித் தரகா்களின் கவனத்திற்கு, அதனைத் திருத்தியமைக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்டது.

காப்புறுதித் தரகா்கள் தமது நிதிசாா் கணக்காய்வுக் கூற்றுக்களை சம்பந்தப்பட்ட நிதியாண்டின் முடிவிலிருந்து ஆறு மாதங்களினுள் சமா்ப்பிப்பதற்கு வேண்டப்படுகின்றனா். இவ்வாண்டுக் காலத்தில் காப்புறுதித் தரகா்களின் நிதிசாா் நிலைப்பாடுகளையும் செயலாற்றுகைகளையும் அறிந்துகொள்ளும் நோக்கில் அவா்களால் சமா்ப்பிக்கப்பட்ட கணக்காய்வுக் கூற்றுக்களை சபை மீளாய்வு செய்தது.

### 2. கட்டுப்பணத் திரட்டல்களைக் கண்காணித்தல்

காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் 89ஆம் பிரிவின் பிரகாரம், காப்புறுதியாளா்கள் சாா்பில் காப்புறுதித் தரகா்களால் சேகரிக்கப்படுகின்ற கட்டுப்பணங்கள், அவை சேகரிக்கப்பட்டு இரண்டு வாரங்களினுள் சம்பந்தப்பட்ட காப்புறுதியாளா்களுக்கு அனுப்பப்படல் வேண்டும். காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்துடனான காப்புறுதி தரகா்களின் இணக்கப்பாடுகள் தொடா்பில், அவா்களின் காலாண்டு திரும்பல்கள் மற்றும் அமைவிடத்திலான கண்காணிப்புகள் என்பவற்றின் மூலம் சபை ஆழமாக கண்காணித்தது. மேற்படி தேவைப்பாடுகளுடன் இணக்கமுறாத காப்புறுதித் தரகா்களுக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### 3. அமைவிடத்திலான கண்காணிப்புகள்

காப்புறுதித் தரகா்கள், சபையின் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க தமது காப்புறுதித் தரகு வியாபாரத்தினை முன்னெடுக்கின்றனரா என்பதை மதிப்பிடும் நோக்கில் அவா்களின் இடங்களுக்குச் சென்று பதினொரு கண்காணிப்புக்களை 2011ஆம் ஆண்டுக் காலத்தினுள் சபை மேற்கொண்டது. இதன்போது அவதானிக்கப்பட்ட இணக்கப்பாடின்மைகள் தொடா்பில், அவற்றை குறிப்பிட்ட காலத்தினுள் நிவா்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள் சம்பந்தப்பட்டோருக்கு வழங்கப்பட்டன.

### 4. உரிமங்களைப் புதுப்பித்தல்

காப்புறுதித் தரகா்களின் 2012ஆம் ஆண்டுக்கான வருடாந்த உரிமங்களை புதுப்பிக்கும் போது, அவா்களது நிதிசாா் கணக்காய்வுக் கூற்று மற்றும் காலாண்டு திரும்பல்கள் ஆகியவற்றை மீள்பரிசீலனை செய்ததன் மூலம் அவா்களின் நிதிசாா் நிலைமையினை சபை மதிப்பீடுசெய்தது.

### 5. புதிய உரிமங்கள் வழங்கல்

இவ் ஆண்டுக் காலத்தில், புதிதாக உரிமம் பெறுவதற்காக விண்ணப்பித்த பதினொரு புதிய காப்புறுதித் தரகா்கள் தொடா்பில், அவா்களது நிதிசாா் நிலைப்பாடுகளை மதிப்பிடும் நோக்கில் அவா்களின் வியாபாரத் திட்டங்கள், நிதிசாா் கணக்காய்வுக் கூற்றுக்கள், நிகர மூலதன நிலைமைகள் போன்ற அம்சங்களை சபை மீள்பரிசீலனை செய்த அதேவேளை, சபையின் தேவைப்பாடுகளை பூா்த்தி செய்திருந்த ஐந்து காப்புறுதி தரகா்களுக்கு புதிய உரிமத்திற்கான பதிவுகள் வழங்கப்பட்டன.

## ஒழுங்குறுத்துகை தொடர்பான மீள்பரிசீலனை

### காப்புறுதி நிறுவனங்களை பதிவுசெய்தல்

சபையானது இவ்வாண்டுக் காலப்பகுதியில் ஆர்பிகோ இன்சுரன்ஸ் லிமிடட் மற்றும் ஓரியன்ட் இன்சுரன்ஸ் லிமிடட் ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கும் முறையே நீண்டகால காப்புறுதி வியாபாரக் காப்புறுதியாளருக்கும் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரக் காப்புறுதியாளருக்குமான பதிவுகளை புதிதாக வழங்கியது.

இதனால், பதிவுசெய்யப்பட்ட காப்புறுதியாளர்களின் எண்ணிக்கையானது 2010ஆம் ஆண்டின் 20 இலிருந்து 2011ஆம் ஆண்டில் 22ஆக உயர்வடைந்தது.

பின்னிணைப்பு I : காப்புறுதிச் சபையில் தம்மைப் பதிவுசெய்துள்ள காப்புறுதி நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் அவற்றின் வகுப்பு/அவர்கள் முன்னெடுப்பதற்கு அனுமதிக்கப்பட்ட காப்புறுதி வியாபார வகுப்புகள் போன்ற தகவல்களைக் கொண்டுள்ளது.

### காப்புறுதி தரகு நிறுவனங்களைப் புதிதாகப் பதிவுசெய்தலும் மற்றும் அந் நிறுவனங்களின் பதிவை புதுப்பித்தலும்

புதிதாக காப்புறுதித் தரகு நிறுவனமாக பதிவுசெய்துகொள்வதற்கான 11 விண்ணப்பங்கள் இவ் ஆண்டுக்காலத்தில் சபைக்கு கிடைக்கப்பெற்றன. இவற்றில் 5 நிறுவனங்களுக்கு புதிதாக பதிவு வழங்கியதோடு, இதில் இரண்டு நிறுவனங்களுக்கு நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி ஆகிய இரண்டுக்குமான காப்புறுதி தரகு வியாபாரத்தை முன்னெடுப்பதற்கும், ஏனைய மூன்று நிறுவனங்களுக்கு பொதுக் காப்புறுதி தரகு வியாபாரத்தை முன்னெடுப்பதற்குமாக பதிவுகள் வழங்கப்பட்டன.

2012ஆம் ஆண்டிற்காக தமது பதிவினைப் புதுப்பிக்குமுகமாக 41 காப்புறுதி தரகு நிறுவனங்களிடமிருந்தான விண்ணப்பங்கள் இவ்வாண்டில் சபைக்கு கிடைத்ததோடு அவற்றில் 40 தரகு நிறுவனங்களுக்கே அனுமதியளிக்கப்பட்டன. இவ் அனுமதிகள் யாவும் பதிவு புதுப்பித்தல் தொடர்பில் காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்திருந்தமையை அடிப்படையாகக் கொண்டே வழங்கப்பட்டன.

வோலங்கா இன்சுரன்ஸ் சேவிசஸ் (பிரை) லிமிடட் நிறுவனமானது 2011.12.31ஆம் திகதிக்கு முன்னமே காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் 80(2)ஆம் பிரிவுடன் இணக்கமுறத் தவறியமையின் காரணத்தால், அதன் காப்புறுதி தரகுச் சேவை தொடர்பான நடவடிக்கைகள் 2012 ஜனவரி 01ஆம் திகதி முதல் தடைசெய்யப்பட்டன. மேற்படி சட்டத்தின் 80(2)ஆம் பிரிவானது, (i) காப்புறுதித் தரகராகவிருக்கும் ஒருவர் காப்புறுதிக் கம்பனியொன்றின் ஒரு பங்குதாரராகவிருப்பதிலிருந்தும் (ii) ஒரு காப்புறுதித் தரகு நிறுவனத்தின் ஒரு பணிப்பாளர் அல்லது பிரதான அலுவலர் அல்லது கூட்டிணைந்த, துணை நிறுவனம் ஒன்றின் பணிப்பாளர் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி அல்லது காப்புறுதி தரகுக் கம்பனியொன்றில் முதலீடுசெய்துள்ள நிறுவனம் ஆகியோர் எந்தவொரு காப்புறுதி நிறுவனத்தின் பணிப்பாளராக, பங்குதாரராக அல்லது ஊழியராக இருப்பதிலிருந்து தடைசெய்கிறது.

பின்னிணைப்பு II : காப்புறுதிச் சபையில் தம்மைப் பதிவுசெய்துள்ள காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் வகுப்பு/அவர்கள் முன்னெடுப்பதற்கு அனுமதிக்கப்பட்ட காப்புறுதித் தரகு வியாபார வகுப்புகள் போன்ற தகவல்களைக் கொண்டுள்ளது.

### அமுலாக்க நடவடிக்கை

#### காப்புறுதி நிறுவனங்கள்

**இடைநிறுத்தங்கள்**

சபை இவ் ஆண்டுக் காலத்தில் எந்த நிறுவனத்தையும் புதிதாக இடைநிறுத்தம் செய்யவில்லை. எனினும், சிலிங்கோ தகாபுல் லிமிடட் மீதான இடைநிறுத்தமானது தொடர்ந்தும் உள்ளது.

**பணிப்புரைகள்**

சபையானது காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் 57ஆம் பிரிவின் பிரகாரம், பொதுக் காப்புறுதி வியாபாரம் மற்றும் நீண்டகாலக் காப்புறுதி வியாபாரம் என்பவற்றின் கடன்தீர் நிலைமை பற்றிய, முறையே நிறுவனத்தின் வெளியக கணக்காய்வாளரின் சான்றிதழ் மற்றும் காப்புறுதி கணிப்பீட்டாளரின் சான்றிதழ் ஆகியவற்றைச் சபைக்குச் சமர்ப்பிக்குமாறு கம்பனியொன்றுக்கு பணிப்புரை வழங்கியது.

மேலும், சபையானது மற்றுமொரு காப்புறுதிக் கம்பனிக்கு அதன் வியாபார நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட மாதத்திலிருந்து ஒவ்வொரு மாதாந்த அடிப்படையிலான திட்டமிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானத்தினதும் செலவினங்களதும் பெறுபேற்று ஒப்பீட்டாய்வொன்றைச் சமர்ப்பிக்குமாறும் பணிப்புரை வழங்கியது.

யாராயினும் ஒரு காப்புறுதியாளரின் காப்புறுதி சார் நடவடிக்கைகள் பொது மக்களுக்கு அல்லது தேசிய நலனுக்கு அல்லது காப்புறுதியுடையோரின் நலனுக்கு தீங்கான முறையில் அமைதல் அல்லது காப்புறுதியாளரின் நலனுக்கு பாதகமாக அமைதல் போன்ற தன்மைகளில் இடம்பெறுமாயின், அதுபோன்ற சந்தர்ப்பத்தில் அக்காப்புறுதியாளர்களுக்கு பணிப்புரை வழங்குவதற்கான அதிகாரத்தை காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் 57ஆம் பிரிவானது சபைக்கு வழங்குகிறது.

இவை தவிர, ஏற்கனவே சபையினால் பணிப்புரைகள் வழங்கப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் அப்பணிப்புரைகளை ஏற்று நடந்துள்ளனரா என்பதை உறுதிசெய்யும் நோக்கில், அக் கம்பனிகள் தொடர்பில் நெருக்கமான மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்புகளை சபை மேற்கொண்டது.

#### காப்புறுதித் தரகுக் கம்பனிகள்

**எச்சரிக்கைகள்**

காப்புறுதி தரகுக் கம்பனியொன்று, காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் 89ஆம் பிரிவின் பிரகாரம் இசைவுறத் தவறியமையினால் மேற்படி சட்டத்தின் 84(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையானது அக்கம்பனிக்கு எச்சரிக்கைக் கடிதமொன்றை வழங்கியுள்ளது.

காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் 89ஆம் பிரிவானது, காப்புறுதிக் கம்பனிகள் சார்பில் தாம் சேகரித்த காப்புறுதிக் கட்டுப்பணங்களை இரண்டு வாரங்களுக்களினுள் அனுப்புமாறு காப்புறுதித் தரகுக் கம்பனிகளைப் பணிக்கின்றது.

காப்புறுதி தரகுக் கம்பனியொன்றுக்கு குறைந்தது 3 பல்வேறு தடவைகளில் சபையால் எச்சரிக்கைகள் வழங்கப்பட்டிருப்பின், அக்கம்பனிக்கான பதிவு புதுப்பித்தலை இடைநிறுத்துவதற்கு, இரத்துச் செய்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான அதிகாரத்தை காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் 84(1)(ஈ) ஆம் பிரிவானது சபைக்கு வழங்குகிறது.

## ஒழுங்குறுத்துகை / ஆலோசனை நடவடிக்கைகள்

(1) காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் 84(1)(இ)(ii) ஆம் பிரிவு மற்றும் அதன் திருத்தமானது காப்புறுதி தரகுக் கம்பனியின் பணிப்பாளர் ஒருவர் அல்லது பிரதம நிறைவேற்று அலுவலர் ஒருவர், காப்புறுதிக் கம்பனியின் ஒரு பணிப்பாளராக அல்லது பங்குதாரராக அல்லது ஒரு ஊழியராகவிருப்பதைத் தடைசெய்கின்றது. 2011ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் 51ஆம் பிரிவின் பிரகாரம், பதிவுசெய்யப்பட்ட காப்புறுதித் தரகுக் கம்பனியொன்றின் பணிப்பாளராக அல்லது பிரதம நிறைவேற்று அலுவலராக பணியாற்றும் ஒருவர் காப்புறுதிக் கம்பனியொன்றிலும் ஒரு பணிப்பாளராக அல்லது பங்குதாரராக அல்லது ஒரு ஊழியராகப் பணியாற்றும் பட்சத்தில், வைத்துள்ள பங்குகளை விற்றுத் தீர்ப்பதற்கான அல்லது அத்தகைய பணிப்பாளர் பதவியையோ அல்லது ஊழியர் பதவியையோ கைவிடுவதற்கான நியாயமான கால எல்லையொன்று 2011 ஆகஸ்ட் 12ஆம் திகதியிலிருந்து மூன்று மாதங்கள் வரை வழங்குவதற்குச் சபை தீர்மானித்தது. மேற்படி கால எல்லையானது பல்வேறு கோரிக்கைகளுக்கு இணங்க 2011.12.31ஆம் திகதிவரை கால நீடிப்புச் செய்யப்பட்டது.

(2) நிதி, திட்டமிடல் அமைச்சானது 2010.06.09ஆம் திகதியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 1929 (2010) உட்பட, ஈரான் இஸ்லாமிய குடியரசுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையினால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் சம்பந்தமான ஆவணங்களை சபைக்கு அனுப்பியுள்ளது. மேற்கூறப்பட்ட தீர்மானத்தின் 21வது உறுப்புரையானது காப்புறுதி வியாபாரம் தொடர்பான விடயங்கள் மீது நேரடியாக செல்வாக்குச் செலுத்துகின்றமை அவதானிக்கப்பட்டது.

இதற்கிணங்க சபையானது, அங்கத்துவ கம்பனிகள் இணக்கப்பாட்டினை ஏற்றுநடக்க வேண்டிய முக்கியத்துவம் தொடர்பில் மேற்படி தடைகளைச் சுட்டிக்காட்டி இலங்கை காப்புறுதிச் சங்கத்திற்கு தெரிவித்துள்ளது.

(3) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி ஒன்று வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கான அனுமதியைப் பெறும் நோக்கில் செலாவணிக் கட்டுப்பாட்டாளரை அணுகிய சந்தர்ப்பத்தில், அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்கள் மூலம் காப்புறுதி/மீள்காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கான திட்டத்தை அவர்கள் கொண்டுள்ளமை தெளிவாகியமையினால், செலாவணிக் கட்டுப்பாட்டார் அக் கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பில் சபையின் கவனத்தை ஈர்த்துள்ளார். இது சம்பந்தமாக காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் சட்டரீதியான ஏற்பாடுகள் தொடர்பிலான ஆய்வின் அடிப்படையில், மேற்சொல்லப்பட்ட கம்பனி திட்டமிட்டுள்ள வியாபாரமானது காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் குறியிலக்கின் கீழ் வருகின்ற விடயமல்லவென சபை தீர்மானித்ததோடு, அதனை கட்டுப்பாட்டாளருக்கும் அறிவித்தது.

(4) ஒரு காப்புறுதி நிறுவனமானது தனது கிளை அலுவலகங்களுக்கு வருகை தருகின்ற மக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் தமது காப்புறுதி வியாபாரத்தின் தற்போதைய அளவை அதிகரிக்கும் நோக்கோடு, தனது வாடிக்கையாளர்களுக்கு பணத்தைச் செலுத்துவதற்கும் மற்றும் / அல்லது அவர்களிடமிருந்து கொடுப்பனவைச் சேகரிப்பதற்குமாக ஏனைய நிறுவனங்களுடன் (தொலைபேசி கம்பனிகள், வங்கிகள், பணப் பரிமாற்ற முகவரகங்கள் போன்றவற்றுடன்) இணைந்து அதன் கிளை அலுவலகங்கள் மூலமாக தமது நடவடிக்கையினை மேற்கொள்வதற்கான அனுமதியை சபையிடம் கோரியது. மேற்படி தீர்மானமானது, காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் 12(4)ஆம் பிரிவில் உள்ளடங்கவில்லை என்ற காரணத்தால், அத்தகைய அனுமதிகளை வழங்க முடியாதுள்ளது என அக்கம்பனிக்கு சபை அறிவித்தது.

காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் 12(4)ஆம் பிரிவின் பிரகாரம், கா.கை.ஒ.சட்டத்தின் கீழ் பதிவுசெய்துள்ள எந்தவொரு நபரும் காப்புறுதி வியாபாரம் தவிர்ந்த எந்தவொரு வியாபாரத்தையும் மேற்கொள்ள முடியாது. மாறாக, சபையின் எழுத்து மூல அனுமதியை முன்னதாகக் கொண்டுள்ள காப்புறுதியாளர் ஒருவர், கா.கை.ஒ.சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நோக்கத்திலான காப்புறுதி வியாபாரத்துடன் தொடர்புடைய அல்லது அதனைச் சார்ந்த நிதிச் சேவைகள் தொடர்பான வியாபாரத்தை மேற்கொள்ளலாம்.

(5) உயர் ஆபத்துமிக்க குறிப்பிட்ட பிரதேசங்களில் பயணிக்கின்ற வர்த்தக கப்பல்கள் தொடர்பில் ஏற்படக்கூடிய இடர்களை ஈடுசெய்வதற்கான காப்புறுதித் தீர்வுகளை வழங்குகின்ற நிறுவனமாகிய இன்டர்நெஷனல் மெரிரைம் நிறுவனமானது வெளிநாட்டு காப்புறுதியாளர்களிடமிருந்து "கடத்தல் மற்றும் கப்பம் கோரல் தொடர்பான காப்புறுதி உள்ளடக்கம்" ஒன்றைப் பெறுவதற்காக, இத்தகைய காப்புறுதியை உள்நாட்டு காப்புறுதிக் கம்பனிகள் எதுவும் வழங்காத காரணத்தால், அதற்கான அனுமதியை சபையிடம் கோரியது. சபையானது இவ்விடயம் சம்பந்தமாக விசாரித்து அதற்கான அனுமதியை, கா.கை.ஒ.சட்டத்தின் 101(2)ஆம் பிரிவின் பிரகாரம் இரண்டு வருடங்களுக்கு வழங்குவதற்கு தீர்மானித்தது.

கா.கை.ஒ.சட்டத்தின் 101(2) ஆம் பிரிவின் பிரகாரம், வெளிநாட்டுக் காப்புறுதியாளர்களுடன் காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்வதற்காக வேண்டுகின்ற எந்தவொரு கோரிக்கைக்குமான அங்கீகாரத்தை வழங்கும் போது, சபையானது காப்புறுதித் துறையினதும் தேசத்தினதும் நலன் தொடர்பான அரசாங்கக் கொள்கைகளைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

(6) மற்றுமொரு காப்புறுதிக் கம்பனியானது தனது அலகு இணைந்த நிதியங்களை வெளிநாட்டு முதலீடுகளில் முதலீடு செய்தல் தொடர்பிலான கோரிக்கையை முன்வைத்தது. தீர்மானம் 1 இன் பிரகாரம் "ஏதேனும் அந்நிய அரசாங்கத்தால் அல்லது அந்நிய நாட்டு மத்திய வங்கியினால் கடன் பிணைகள் வழங்கப்பட்டு அல்லது அதற்கான முழு உத்தரவாதமளிக்கப்பட்டு அவை வர்த்தக சாதனத்திற்கான முதலீட்டுத் தர மதிப்பீட்டினைக் கொண்டிருத்தல்" தவிர தொழில்நுட்ப ஒதுக்கங்களிலிருந்தான அல்லது நீண்டகால காப்புறுதி நிதியத்திலிருந்தான ஏனைய அனைத்து முதலீடுகளும் இலங்கைக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாகவிருக்க வேண்டுமென சபை அவர்களுக்கு பதிலளித்தது. மேலும், நீண்டகால காப்புறுதி நிதியத்தினுள் இடம்பெறாத அலகு இணைந்த நிதியமொன்றின் ஏதேனும் சொத்து வெளிநாட்டுச் சொத்துக்களில் முதலீடு செய்யப்படலாம், 2005 ஒக்டோபர் 12ஆம் திகதிய 1414/19ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காப்புறுதிச்சபைத் தீர்மானங்கள்-2005 இன் தீர்மானம் 4 உடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற

கா.கை.ஒ.சட்டத்தின் 25(3)ஆம் பிரிவின் பிரகாரம் இதற்கான சபையின் விசேட அங்கீகாரம் பெறப்படுகிறது.

(7) கணக்கீட்டு நிறுவனமொன்று, உலகம் முழுவதுமுள்ள அதன் அனைத்து நிறுவனங்களுக்குமாக வெளிநாட்டு காப்புறுதி நிறுவனமொன்றிடமிருந்தான தொழில்முறை சார்ந்த காப்பீட்டு உள்ளடக்கத்தைப் பெறுவதற்காக அதன் தாய் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கோரிக்கை ஒன்றை மேற்கொண்டது. சபையானது மேற்படி நிறுவனத்தின் உலகளாவிய ஏற்பாடுகளை அங்கீகரித்து, இலங்கையின் தொழில்முறைசார் காப்புறுதி உள்ளடக்க நடைமுறைக்கு ஏற்ப ஒரு வெளிநாட்டு காப்புறுதியாளருக்குச் சார்பான காப்புறுதிக் கட்டுப்பணத்தை அனுப்புவதற்கான அங்கீகாரத்தை கா.கை.ஒ.சட்டத்தின் 101(2)ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கியது.

(8) பல்வேறு நாடுகளிலுமுள்ள தனது துணை நிறுவனங்களிலுள்ள திடகார்த்திடமான இடர் முகாமைத்துவ நுட்பங்களைப் பின்பற்றியதான உலகளாவிய காப்புறுதி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை அமுல்படுத்தி வருகின்ற பிராந்திய தொலைத்தொடர்பாடல் இயக்குனர் நிறுவனமொன்று, உலகளாவிய அனைத்து ஒப்புதலின்றிய காப்புறுதிக் கொள்கைகள் தொடர்பிலும் நேரடியான ஈடுபாட்டிற்கான சபையின் அனுமதியை வேண்டியது. குழுக்காப்புறுதி ஏற்பாடுகளின் கீழ் காப்புறுதியைப் பெறுவதற்காக கா.கை.ஒ.சட்டத்தின் பிரிவு 101(2)இன் பிரகாரம் ஏனைய நிறுவனத்திற்கு ஏற்கனவே சபை அங்கீகாரம் வழங்கிய காரணத்தால், கா.கை.ஒ.சட்டத்தின் பிரிவு 101(2)இன் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்பட்டதோடு, இத்தகைய அங்கீகாரமானது பிராந்திய தொலைத்தொடர்பாடல் இயக்குனர் நிறுவனமானது உள்நாட்டுக் குழுவின் துணைக் கம்பனியாகவிருக்கும் வரை மாத்திரமே செல்லுபடியாகும் எனும் நிபந்தனையின் கீழ் வழங்கப்பட்டது.

(9) மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் நாணயச் சபையினால் பெயர் குறிப்பிடப்பட்டிருந்து அத்தகைய அலுவலக தத்துவத்தின் பிரகாரம் சபையில் பணியாற்றியுள்ளமையானது, 2011ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் 31அ பிரிவினால் சொல்லப்படுகின்ற தகைமையின்மைக்குட்படுகின்றதா என தெளிவுபடுத்துமாறும் அத்தகைய ஒருவர் காப்புறுதி நிறுவனம் ஒன்றின் பணிப்பாளராகவிருப்பதிலிருந்து தவிர்க்கப்பட வேண்டுமெனவும் காப்புறுதிக் கம்பனி ஒன்று சபையைக் கோரியது. கா.கை.ஒ.சட்டத்தின் 31அ பிரிவானது, அதன் 2ஆம் அட்டவணையின் பந்தி (ஆ) உடன் சேர்த்து வாசிக்கப்படுவதன் பிரகாரம், காப்புறுதி நிறுவனம் ஒன்றின் பணிப்பாளராக யாரேனும் ஒருவர் நியமிக்கப்படுவதற்கு, தெரிவுசெய்யப்படுவதற்கு அல்லது பெயர்குறிப்பிடப்படுவதற்கு முன்னரான 3 வருட காலங்களினுள் எவ்வேளையிலாவது அத்தகைய நபர் சபையின் உறுப்பினராக அல்லது ஊழியராக சேவையாற்றியிருப்பின், அத்தகைய உறுப்பினர் அல்லது ஊழியர் காப்புறுதி நிறுவனம் ஒன்றின் ஒரு பணிப்பாளராக நியமிக்கப்படவோ, தெரிவுசெய்யப்படவோ அல்லது பெயர்குறிப்பிடப்படவோ அதற்கான தகைமையற்றவராவார். சபையிடம் வினாத்தொடுத்த காப்புறுதி நிறுவனத்திற்கு இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டது.

(10) மற்றுமொரு காப்புறுதிக் கம்பனியானது, இஸ்லாமிய ஷரிஆ கோட்பாட்டின் அடிப்படையிலான செயற்பாட்டினைப் பேணும் நோக்கில் தனது கம்பனியினுள் தனியான தகாபுல் எனும் பிரிவொன்றை ஆரம்பிப்பதற்காக சபையின் அங்கீகாரத்தைக் கோரியது. சபையானது அக்கம்பனியின் வேண்டுகோளைப் பரிசீலனை செய்த பின்னர், மேற்படி நடவடிக்கையானது கா.கை.ஒ.சட்டத்தின் கீழ் சபையினால் முன்வைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதில் சிரமங்கள் ஏற்பட வழிவகுக்கலாம் என்ற காரணத்தால் அது அனுமதிக்கப்பட முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது.

(11) கடனீட்டுப் பத்திரத்திலிருந்தான (ஆயுள் நிதியம் தொடர்பான முதலீடு) ரூபா. 100 மில்லியனை நிதிசார் நிறுவனம் ஒன்றின் வாக்குப் பங்குகளுக்கு மாற்றுவதற்கும் மேலும் அதனை கீழுள்ள நிபந்தனைகளுடன் ஆயுள் நிதியம் ஒன்றின் முதலீடொன்றாகவிருக்குமாறு பேணுவதற்குமாக காப்புறுதிக் கம்பனி ஒன்றினால் சபையிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை சபை நிராகரிக்கவில்லை.

- பங்குகள் பங்குப் பரிவர்த்தனையில் ஒரு தடவை பட்டியலிடப்பட்டதும் காப்புறுதிக் கம்பனியால் மேற்படி தொகை ஆயுள் நிதியத்தின் முதலீடொன்றாக கருதப்படல்; மேலும்
- காப்புறுதிக் கம்பனியானது சபையினால் முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் கடன்தீர் எல்லை விதிகள் ஆகியவற்றுடன் இணங்கிச் செயற்படல்.

(12) தமது உடன்படிக்கை ஏற்பாடுகளிலுள்ள ZEP-RE தொடர்பான மீள்காப்புறுதி பிணையத்தை பயன்படுத்துவதற்கான அங்கீகாரத்தை மற்றுமொரு காப்புறுதிக் கம்பனியானது சபையிடம் கோரியது. இது தொடர்பில் ZEP-RE இற்கான பிணையம் தொடர்பான தரப்படுத்துகையானது "ஏ.எம். சிறந்த தரப்படுத்துகை முகராண்மை" யினால் வழங்கப்பட்டுள்ளதாலும், தங்க ஒதுக்கு தரப்படுத்துகையானது அதனை நியம தரத்தோடு பேணுகின்ற கென்ய நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளதாலும் மற்றும் ஏழை மக்கள் "பாதுகாப்பான தரப்படுத்துகை மட்டங்கள்" இனுள் இடம்பெறாததாலும் மேற்படி கோரிக்கையினை சபை நிராகரித்தது.

(13) 2011ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஏற்பாடுகளுக்கமைவாக காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து பணிப்பாளர்களின் நியமனத்திற்காக அனேக விண்ணப்பங்களை சபை இவ் ஆண்டுக் காலத்தில் பெற்றுள்ளது.

(14) சந்தையில் காணப்படுகின்ற சகல காப்புறுதித் தயாரிப்புகள் தொடர்பான தரவுத்தளம் ஒன்றை ஒருங்கமைத்துத் தயாரிக்கும் பணியினை சபை மேற்கொண்டுவருவதோடு, இது தொடர்பில் காப்புறுதியாளர்களிடமிருந்து பரீட்சையமான விடயங்கள் மற்றும் சகல காப்புறுதி தயாரிப்புகள் சம்பந்தமான விபரங்கள் ஆகியன வேண்டப்பட்டுள்ளன. மேலும், கா.கை.ஒ.சட்டத்தின் புதிய ஏற்பாடுகளுக்கமைய அண்ணளவாக 40 காப்புறுதித் தயாரிப்புகள் சபையிடம் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

## ஒழுங்குறுத்துகை சீர்திருத்தங்கள்

### 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்திற்கான திருத்தங்கள்

2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்திற்கான திருத்தச் சட்டமூலமானது 2011 ஜனவரி மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அதற்கிணங்க, பிரதான சட்டவாக்கம் 2011 பெப்ரவரி 11ஆம் திகதியிலிருந்து பயனுறும் வகையில் 2011ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க கா.கை.ஒ.சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டது. பின்வருவன அவற்றுள் குறிப்பிடத்தக்க திருத்தங்களாகும்:

- சபையின் ஒரு உறுப்பினராகவிருந்த இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அவர்கள் கம்பனிகள் பதிவாளர் நாயகம் அவர்கள் மூலம் பதிலீடுசெய்யப்பட்டார்.

- இழப்புச் சீராக்கிகளாக நபர்களைப் பதிவதற்கான ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

- இரு வகையான காப்புறுதி வியாபாரங்களையும் (நீண்டகால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம்) மேற்கொள்கின்ற கம்பனிகள் இவ்விரு வியாபாரங்கள் தொடர்பிலும் இரண்டு தனியான கம்பனிகளாக, திருத்தச் சட்டம் அமுலுக்கு வருகின்ற திகதியிலிருந்து 04 வருட காலத்தினுள், தனித்து தொழிற்படுவதற்கு வேண்டப்படுகின்றனர்.

- திருத்தச் சட்டத்திலுள்ளவாறு தனித்துச் செயற்படுவதற்கான தேவைப்பாட்டினை தற்போது திருப்திசெய்கின்ற காப்புறுதியாளர்களும் மற்றும் ஏனைய காப்புறுதியாளர்களும், திருத்தச் சட்டம் அமுலாகும் திகதியிலிருந்து 5 வருட காலத்தினுள், 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனையொன்றின் பட்டியலில் இடம்பெறுவதற்கு வேண்டப்படுகின்றனர்.

- ஒரு காப்புறுதியாளராக தன்னைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் ஒரு கம்பனிக்கு ஒரு வகைக் காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்வதற்கே அனுமதியளிக்கப்படும், மேலும் தன்னை ஒரு காப்புறுதியாளராக பதிவுசெய்து கொண்ட திகதியிலிருந்து மூன்று வருட காலத்தினுள், 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனையொன்றின் பட்டியலில் இடம்பெற்றிருக்க வேண்டும்.

- காப்புறுதிக் கம்பனியின் பணிப்பாளர்கள், குறிப்பான அதிகாரிகள் மற்றும் பிரதான அலுவலர்கள் ஆகியோர், நியமனங்களுக்குரிய பொருத்தமான பிரமாணங்களைப் பூர்த்திசெய்திருக்க வேண்டப்படுவதோடு, அத்தகைய கம்பனியின் சபையில் இடம்பெறுவதற்கும் வேண்டப்படுகின்றனர்.

- கூட்டுத்தாபனங்கள் தம்மைக் காப்புறுதி முகவர்களாக பதிவுசெய்தல் தொடர்பில், அது சம்பந்தமான பதிவுப் பிரமாணத்திற்கான விதிமுறைகள் இடம்பெற்றதும், அதற்கான தகுதியைக் கொண்டிருப்பர்.

- பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளினதும் மற்றும் தரகுக் கம்பனிகளினதும் மூலதனத்தை அவற்றின் பதிவுக்குப் பின்னரும், அவை தொடர்பான விதிமுறைகள் மூலம் அதிகரிக்கச் செய்வதற்கான அதிகாரத்தை சபை கொண்டுள்ளது.

- தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது திருத்தச் சட்டம் அமுலுக்கு வரும் தினத்தில், சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்டதொரு காப்புறுதியாளராக இடம்பெறும் என நம்பப்படுகிறது.

### விதிமுறைகளுக்கான திருத்தங்கள்

2004 மே 17ஆம் திகதிய 1341/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதான கடன்தீர் எல்லை (பொதுக் காப்புறுதி) விதிமுறைகளையும் மற்றும் 2002 செப்டம்பர் 24ஆம் திகதிய 1255/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதான கடன்தீர் எல்லை (நீண்டகால காப்புறுதி) விதிமுறைகளையும் சபை திருத்தியமைத்தது. சபையின் கடன்தீர் எல்லை விதிமுறைகள், உலகளாவிய ரீதியிலான காப்புறுதித் துறை தொடர்பான மாறுபடுகின்ற தேவைப்பாடுகள் மற்றும் வர்த்தக விவகாரங்கள் தொடர்பான மாறுபடுகின்ற போக்குகள் ஆகியவற்றை எதிர்கொள்ளுமுகமாக இவை மீளமைக்கப்பட்டன. இத் திருத்தங்கள் 2011 மார்ச்சு 18ஆம் திகதிய 1697/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு 2011 ஏப்ரல் 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்தன. இது சம்பந்தமான மேலதிக திருத்தங்கள் தொடர்பில் பரிசீலிக்கப்படுகின்றன.

காப்புறுதியாளராக தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் ஒருவர் தொடர்பில் எடுத்துரைக்கப்பட்ட மூலதனமானது, ஒரு வகைக் காப்புறுதி வியாபாரத்திற்கு ரூபா. 100 மில்லியன் இலிருந்து ரூபா. 500 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டது. காப்புறுதி தரகர்களுக்கான பதிவுக் கட்டணமானது, ஒரு வகைக் காப்புறுதி வியாபாரத்திற்கு ரூபா. 50,000/- இலிருந்து ரூபா. 100,000/- வரை அதிகரிக்கப்பட்டது.

இத்திருத்தங்கள் 2011 ஜுன் 24ஆம் திகதிய 1711/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டன.

காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குறுத்துகைச் சட்டத்தின் 78(1) ஆம் பிரிவானது, காப்புறுதியாளர்களும் மற்றும் தரகர்களும் தமது காப்புறுதி முகவர்களாக நபர்களை நியமிப்பதற்கு அவர்களை அனுமதிக்கும் நோக்கில் 2011ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டது. இதன்படி, நிறுவனங்களைப் பதிவுசெய்வதற்கான தேவைப்பாடுகள் தொடர்பிலான விதிமுறைகள் சபையினால் வரையப்பட்டுள்ளதோடு, சம்பந்தப்பட்ட ஆலோசனைச் செயற்பாடுகளும் இடம்பெற்றன. "வங்கிக் காப்புறுதி ஏற்பாடுகள்" தற்போது சிறப்பாக இடம்பெறுவதைக் கருத்திற்கொண்ட இலங்கை மத்திய வங்கியானது இது தொடர்பில் அதன் கருத்தினையும் சபைக்கு வழங்கியுள்ளது.

2011ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க கா.தொ.ஒ. (திருத்தச்) சட்டத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட VIIIA பகுதியானது, "இழப்பு சீராக்கிகள்" இற்காக, அதன்சார்பில் மேற்கொள்ளப்பட்ட விதிமுறைகள் மூலம் நபர்களை பதிவுசெய்வதற்காக சபைக்கு அதிகாரமளிக்கிறது. ஏனைய நாடுகளிலுள்ள இழப்பு சீராக்கி நபர்களைப் பதிவுசெய்வதற்கான தேவைப்பாடுகளை சபை மீளாய்வுசெய்துள்ளதோடு, இலங்கையிலுள்ள இழப்பு சீராக்கி நபர்களைப் பதிவுசெய்வதற்கான தேவைப்பாடுகள் தொடர்பான விதிமுறைகளை வரைவுசெய்யும் நடவடிக்கையிலும் சபை ஈடுபடுகிறது.

தற்போதைய காப்புறுதிக் கம்பனிகளின் காப்புறுதி வியாபார வகை ஒன்றுக்கான மூலதனத்தை ரூபா. 500 மில்லியன் வரை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை சபை மேற்கொண்டுவருகிறது.

### தீர்மானங்களுக்கான திருத்தங்களும் புதிய தீர்மானங்களின் அறிமுகமும்

2002 ஒக்டோபர் 30ஆம் திகதிய தீர்மானம்-1 ஆனது, அரசாங்க பிணையங்களில் குறைந்தபட்சம் வேண்டப்படுகின்ற தொகையினை முதலீடு செய்த பின்னர், நீண்டகால காப்புறுதி வியாபார நிதியம் தொடர்பிலும் மற்றும் தொழில்நுட்ப ஒதுக்கம் தொடர்பிலும் எஞ்சுகின்ற சொத்துக்களை முதலீடுசெய்வதில் பின்பற்றப்படவேண்டிய விதம் பற்றி எடுத்துரைக்கின்றது. 2002 ஒக்டோபர் 30ஆம் திகதிய தீர்மானம்-1 இன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அத்தகைய முதலீட்டுப் பிரமாணங்களின் எல்லையை சபை விரிவுபடுத்தியுள்ளது. அத்தகைய திருத்தங்கள் 2011 மார்ச் மற்றும் ஒக்டாபர் மாதங்களில் நடைமுறைக்கு வந்தன.

2011ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் 15ஆம் பிரிவானது பிரதான சட்டவாக்கம் தொடர்பான 35ஆம் பிரிவை நீக்கியதன் காரணத்தால், "கட்டுப்பணங்கள் அவை செலுத்தப்பட வேண்டிய திகதியிலிருந்து 60 நாட்களில் செலுத்தப்படல் வேண்டும்" என எடுத்துரைக்கின்ற 2002 ஒக்டோபர் 30ஆம் திகதிய தீர்மானம்-3 ஆனது நீக்கப்பட்டுள்ளது.

2011 பெப்ரவரி 01ஆம் திகதிய தீர்மானம்-9 ஆனது நீக்கப்பட்டு 2011.07.12ஆம் திகதிய 9ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் பதிலீடுசெய்யப்பட்டது. இதன்படி, காப்புறுதி தரகுக் கம்பனிகளுக்கான பதிவு புதுப்பித்தல் கட்டணமானது பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது:

(அ) 2010 பெப்ருவரி 25ஆம் திகதிய 1642/16ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற திரும்பல்களில் குறிப்பிட்டவாறு யாதேனுமொரு காப்புறுதி தரகுக் கம்பனியியானது, கா.கை.ஒ.சட்டத்தின் 83ஆம் பிரிவின் பிரகாரம் தமது பதிவினைப் புதுப்பிப்பதற்குரிய திகதிக்கு உடனடி முன்னதாகவுள்ள நான்கு காலாண்டுகளுக்குமான அக்கம்பனியின் தரகு வருமானமானது ரூபா. 3 மில்லியன் அல்லது 3 மில்லியனைவிடக் குறைவாகவிருக்கும் பட்சத்தில், ஒரு காப்புறுதி தரகு வியாபார வகைக்கான பதிவு புதுப்பித்தல் கட்டணம் ரூபா. 30,000.00 ஆகும்.

(ஆ) 2010 பெப்ருவரி 25ஆம் திகதிய 1642/16ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற திரும்பல்களில் குறிப்பிட்டவாறு யாதேனுமொரு காப்புறுதி தரகுக் கம்பனியியானது, கா.கை.ஒ.சட்டத்தின் 83ஆம் பிரிவின் பிரகாரம் தமது பதிவினைப் புதுப்பிப்பதற்குரிய திகதிக்கு உடனடி முன்னதாகவுள்ள நான்கு காலாண்டுகளுக்குமான அக்கம்பனியின் தரகு வருமானமானது ரூபா. 3 மில்லியனைவிட உயர்வாகவிருக்கும் பட்சத்தில், ஒரு வகைக் காப்புறுதி தரகு வியாபாரத்திற்கான பதிவு புதுப்பித்தல் கட்டணம் ரூபா. 50,000.00 ஆகும்.

மேலுள்ள பெறுமானமானது ஆரம்பத்தில் ரூபா. 25,000.00 ஆகவிருந்ததோடு பின்னர் அதிகரிக்கப்பட்டது.

2002 ஒக்டோபர் 30ஆம் திகதிய தீர்மானாம்-10 ஆனது, காப்புறுதி தரகர்களால் அதன் காப்புறுதி முகவர்களுக்குச் செலுத்தப்படுகின்ற அதிகபட்ச தரகுப் பணத்தை ஒரு காப்புறுதியாளரால் ஒரு முகவருக்கு செலுத்தப்படுகின்ற தரகுப் பணத்தின் அதிகபட்ச எல்லையாக அமைவதனைத் தீர்மானிப்பதற்காக திருத்தப்பட்டது.

கா.கை.ஒ.சட்டத்தின் 49(ஆ) ஆம் பிரிவின் கீழ் சபையால் மேற்கொள்ளப்பட்ட 2011 மே 31ஆம் திகதிய தீர்மானம்-12 ஆனது காப்புறுதியாளர்களின் காலாண்டு திரும்புகை வடிவத்தை அறிமுகம் செய்கிறது. திரும்பல்களானது கடன்தீர் எல்லை விதிமுறைகளுக்கான திருத்தங்களுக்கேற்ப மீளமைக்கப்பட்டதோடு, அது 2011 ஏப்ரல் முதலாம் தினத்திலிருந்து நடைமுறைக்கு வந்தது.

கா.தொ.ஒ.சட்டத்தின் 33ஆ(1)ஆம் பிரிவின் கீழ் சபையால் மேற்கொள்ளப்பட்ட 2011 மே 31ஆம் திகதிய தீர்மானம்-13 ஆனது "நபர் ஒருவரை ஒரு காப்புறுதியாளரின் பணிப்பாளராக நியமிப்பதற்கு, தெரிவுசெய்வதற்கு அல்லது பெயர் குறிப்பிடுவதற்கான அங்கீகாரத்தை சபையிடமிருந்து கோருதல் தொடர்பில் சபைக்கு அறிவித்தல்" செய்தலுடன் சம்பந்தப்பட்டதாகும்.

### ஒழுங்குவிதிகள் தொடர்பான திருத்தங்கள்

காப்புறுதியாளர்களின் பதிவுக்கட்டணம் மற்றும் வருடாந்தக் கட்டணம் தொடர்பில் 2005 ஒக்டோபர் 12ஆம் திகதிய 1414/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைத் திருத்தியமைக்கும் வகையிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு வகை காப்புறுதி வியாபாரத்திற்கான பதிவுக் கட்டணமானது ரூபா. 250,000.00 இலிருந்து ரூபா. 500,000.00 இற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. ரூபா. 100,000.00 ஆகவிருந்த ஒவ்வொரு காப்புறுதி வியாபார வகைக்குமான வருடாந்தக் கட்டணமானது, முதலாவது கலண்டர் ஆண்டுக்கு ரூபா. 1,000,000.00 எனவும்; இரண்டாவது கலண்டர் ஆண்டு ஆரம்பத்தின் பின்னரான ஆண்டுகளுக்கு ரூபா. 200,000.00 எனவும், அல்லது முன்னைய நிதியாண்டின் நீண்டகால/பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பில் பதியப்பட்ட மொத்த கட்டுப்பணத்தின் 0.05 சதவீதமானது 0.075 எனவும் மாற்றப்பட்டுள்ளதோடு; இவற்றில் எப்பெறுமானம் உயர்வானதோ அது ஏற்புடையதாகவிருக்கும்.

### சபையினால் வழங்கப்பட்ட பணிபுரைகள்

ஒரு காப்புறுதிக் கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட திரும்பல்கள் தொடர்பில், கா.தொ.ஒ.சட்டத்தின் 57ஆம் பிரிவின் பிரகாரம் சபையானது அக்கம்பனிக்கு அறிவுரை வழங்கியது.

### காப்புறுதிக் கைத்தொழிலின் ஒழுங்குறுத்துகைச் செயற்பாட்டினை விரிவாக்கம் செய்து, வலுப்படுத்தி மற்றும் அதனைக் கண்காணிப்பதன் மூலம் அத்துறை தொடர்பான பொது மக்களின் (காப்புறுதியுடையோர்கள் மற்றும் திறமையான காப்புறுதியுடையோர்கள்) நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

- பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் காப்புறுதிக் கைத்தொழில் சம்பந்தமான செய்திக் குறிப்புகளை தேசிய பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- காப்புறுதிக் கைத்தொழில் தொடர்பில் மற்றும் துறைசார்ந்த பிரதானமான விபரங்கள் தொடர்பிலான பிரயோகிக்கத்தகு சட்டங்கள் தொடர்பில் ஏற்படுகின்ற மீள்திருத்தங்கள் சபையின் இணையத் தளத்தில் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படுகின்றன.

- பதிவு புதுப்பித்தல் சம்பந்தமான திருத்தங்கள் மற்றும் தொடர்புபட்ட ஏனைய விடயங்கள் தொடர்பிலான பயிற்சிப் பட்டறையொன்றை காப்புறுதி தரகுக் கம்பனிகளின் சகல பிரதான உத்தியோகத்தர்களுக்கும் சபை நடாத்தியது.

## புலனாய்வுசார் மீளாய்வு

இச்சட்டத்தின் 98ஆம் பிரிவின் பிரகாரம், கோரிக்கை ஒன்றுக்கு விண்ணப்பிக்கின்ற நபரின் வேண்டுதற்கமைவாக அக் கோரிக்கைப் பணத்தைச் செலுத்துதலிலுள்ள சர்ச்சை தொடர்பாக சபையின் தீர்மானத்திற்காக சபைக்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும். கோரிக்கை மேற்கொண்ட நபருக்கு சார்பாக அல்லது அத்தகைய கோரிக்கையானது பொருத்தமானதா என ஆராய்வுசெய்த பின்னர், சபையானது அத்தகைய சர்ச்சை தொடர்பில் தனது தீர்மானத்தை தெரிவிக்கும்.

மீளாய்வு ஆண்டுக் காலத்தில் இடம்பெற்ற அத்தகைய 213 முறைப்பாடுகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 1

| பொது | எண். | ஆயுள் | எண். | முகவர் சம்பந்தமானவை | எண். |
|---|---|---|---|---|---|
| வாகனம் | 76 | மருத்துவமனை | 17 | வேலைவாய்ப்பு தொடர்பாவை | 05 |
| கடல்சார்ந்தது | 01 | மரணம் | 12 | தகைமை | 04 |
| தீ அபாயம் | 22 | அங்கவீனம் | 05 | சட்டவிரோத கையாடல் பொது | 13 |
| கடன் காப்பீடு | 01 | காலம் கடந்தவை | 17 | | |
| கொள்ளைச் சம்பவம் | 03 | உள்ளடக்கம் நீக்கப்பட்ட / புதுப்பிக்கப்படாத கொள்கை | 05 | | |
| செயலாற்றுகை/முன் கொடுப்பனவுகள் | 05 | முதிர்வுகால நன்மைகள்/ ஒப்புவிக்கப்பட்ட பெறுமதி | 10 | | |
| ஊழியர்கள் இழப்பீடு | 02 | ஏனைய - கடன்கள் | 02 | | |
| வெள்ளம் | 02 | கட்டுப்பண மீளளிப்புகள் | 04 | | |
| ஆதனம் தொடர்பான சேதங்கள் | 04 | | | | |
| ஈமைக்கிரிகைச் செலவினம் (பி.ஏ.எப்.ஐ) | 01 | | | | |
| தனிநபர் விபத்துக் காப்பீடு | 01 | | | | |
| எதிர்பார விளைவினால் ஏற்படும் இழப்பு | 01 | | | | |

*வரைபு 1*

மீளாய்வாண்டில் கிடைத்த முறைப்பாடுகள் கம்பனி அடிப்படையில்



***அட்டவணை 2***

இப்பிரிவினால் முறைப்பாடுகளும் உறுதிப்படுத்தல்களும் பின்வரும் வடிவில் வகைப்படுத்தப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு:

| முறைப்பாட்டின் தன்மை | குறிப்புக்கள் |
|---|---|
| ஆயுட் காப்புறுதி கோரிக்கைகளுடன் தொடர்புடைய விடயங்கள் | இவ்வகையில் உசாப்பட்ட விடயங்களில் அதிகமானவை காப்புறுதிக் கொள்கையினைப் பெறுகின்ற போது தகவல்களை வெளிப்படுத்தாமையுடன் தொடர்புடையவையாகும். புலன்விசாரணைப் பிரிவு, தீர்மானமொன்றை எடுக்கின்ற போது மருத்துவ நிபுணர்களிடமிருந்து உறுதிப்படுத்தல்களைப் பெறுவது அடங்கலாகத் தொடர்புடைய அனைத்துத் தகவல்களையும் ஆராயும். |
| மோட்டார் காப்புறுதிக் கோரிக்கைகள் | இவ்வகையில், கணக்குளில் செய்யப்பட்ட கழிப்பீடுகளை வெளிப்படுத்தாமை, உரிய காலத்தில் தவணைக் கட்டணங்களைச் செலுத்தாமை, உத்தரவாதக் காலம், நீதிமன்றங்களில் வழக்குகள் காணப்படுகின்றமை, நிகழ்வுக்கும் விபத்தும் இடையில் பொருத்தப்பாடு காணப்படாமை, போதிய உள்ளடக்கத்தைக் கொண்டிராத தகவல்களும் கொள்கைகளும் நிறுத்திவைக்கப்படுதல் என்பன கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவதற்கான காரணங்களாகவுள்ளன. மோட்டார் கோரிக்கைகளைத் தீர்க்கின்ற போது புலனாய்வு அறிக்கை, மதிப்பீட்டு அறிக்கைகள் உள்ளிட்ட ஆவணங்கள் இப்பிரிவினால் முழுமையாகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. அத்துடன் தேவைப்படுமிடத்து மோட்டார் வாகன நிபுணர்களின் சேவையும் பெறப்படுகின்றது. |
| தீவிபத்துக் காப்புறுதிக் கோரிக்கைகள் | காப்புறுதி செய்யப்பட்டவர்களின் நேரடியாக மற்றும்/அல்லது மறைமுகமான தொடர்பு காரணமாக அதிகமான கோரிக்கைகள் நிராகரிக்கப்படுகின்றன. அதனால், காப்புறுதி செய்தவர் வேண்டுமென்றே செய்தமையைக் காட்டும் சாட்சிகளையும் காப்புறுதி செய்தவரின் நேரடி மற்றும்/அல்லது மறைமுகத் தொடர்பினையும் பகுப்பாய்வு செய்வோம். |
| முகவர்களின் தகைமைகள், அவற்றுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பான பிரச்சினைகள் | முகவர்களின் தகைமைகள் விடயத்தில் சபையானது சான்றிதழ்களின் உண்மைத் தன்மையையும் அவற்றின் அதிகார பூர்வத்தன்மையையும் உறுதிப்படுத்தும் |
| கப்பல் காப்புறுதிக் கோரிக்கைகள் | பொதுவாக இவ்வகைகளில் ஒரு சில முறைப்பாடுகளே கிடைக்கப் பெறுகின்றன. இப்பிரிவு, ஒரு தீர்மானத்தை எடுக்கின்ற போது தொடர்புடைய ஆவணங்களை முழுமையாகப் பகுப்பாய்வு செய்கின்றது. |
| திருட்டு காப்புறுதிக் கோரிக்கைகள் | |
| போக்குவரத்துக் காப்புறுதிக் கோரிக்கைகள் | |
| முற்பணக் கொடுப்பனவுகள் மற்றும் செயலாற்றுகைப் பிணைகள் | |
| இயற்கை அனர்த்தக் காப்புறுதிக் கோரிக்கைகள் | |
| இலத்திரனியல் உபகரணங்கள் | |
| கடன் பாதுகாப்பு | |
| கைமாற்றல்கள் | |
| ஏனையவை (PAFI கொள்கை/ வியாபாரிகள் கூட்டு) | |

பொது மக்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதனைத் தொடர்ந்து இப்பிரிவு கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை கடந்த நான்கு வருட காலத்தில் அதிகரித்துள்ளன.

மீளாய்வு ஆண்டுக்காலத்தில், 213 முறைப்பாடுளை வெற்றிகரமாக விசாரித்துள்ளதோடு, 240* முறைப்பாடுகள் தொடர்பில் முறைப்பாட்டாளர்களுக்குத் திருப்திகரமான முறையில் தீர்க்கப்பட்டன.

***வரைபு 2***




***வரைபு 3***




*மூஇவ் எண்ணிக்கையில் 2010ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு செல்லப்பட்ட முறைப்பாடுகளும் அடங்கும்

## சந்தை அபிவிருத்தி மற்றும் வெளியக தொடர்புகள்

### குறிக்கோள்

விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் தொடர்பிலான சபையின் குறிக்கோள் யாதெனில், காப்புறுதி விடயம், காப்புறுதித் துறை மற்றும் அதன் சமீபகால அபிவிருத்திகள் என்பன தொடர்பான அறிவினை மேம்படுத்தலாகும்.

### கண்காட்சியிலான பங்கேற்பு

2011 பெப்ரவரி 4ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை மொனராகலை, புத்தலவில் தொடர்ந்தும் ஐந்தாவது வருடமாக இடம்பெற்ற "தயட்ட கிருளை" தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சியில் சபை பங்கேற்றதோடு அதில் தனக்கென காட்சிக்கூடம் ஒன்றையும் அமைத்திருந்தது. இது காப்புறுதி தொடர்பிலான அறிவையும் மற்றும் சபையின் பொறுப்புகள் மற்றும் தொழிற்பாடுகளையும் மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கானதொரு அரிய வாய்ப்பாகவிருந்தது. எமது காட்சிக் கூடமானது ஆர்வமிக்க சுமார் 10,000 மக்களின் கவனத்தை ஈர்த்தது.



### வீதி நிகழ்ச்சி

2011 ஒக்டோபர் 22ஆம் திகதி கொழும்பிலுள்ள இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு நிலையத்தில் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு ஏற்பாடுசெய்த வீதி நிகழ்ச்சியான "முதலீட்டுத் தினம்" நிகழ்வில் அவர்களின் வேண்டுதற்கிணங்க சபை பங்கேற்றது.



## வெளியிட்டப்பட்ட கையேடுகள் 2011






## பிரசுரங்கள்

காப்புறுதித் தயாரிப்புகளை கொள்வனவு செய்வதா இல்லையா என்பது தொடர்பில் மக்கள் தீர்மானம் எடுப்பதற்கு உதவக்கூடிய வகையிலான, காப்புறுதி தொடர்பான எண்ணக்கரு மற்றும் ஏனைய பிரதான அம்சங்களைப் பற்றி எளிதாக பொதுமக்கள் உணர்ந்துகொள்ளும் நோக்கில் மீளாய்வு ஆண்டில் பல்வேறு பிரசுரங்களை சபை வெளியிட்டு விநியோகித்தது.

பின்வரும் பத்திரிகை விளம்பரங்கள், ஊடக அறிவித்தல்கள் மற்றும் ஊடக வெளியீடுகளை சபை வெளியிட்டது:

(அ) சுதந்திர தினத்தன்றைய டெய்லி நியூஸ், தினமின மற்றும் தினகரன் போன்ற பத்திரிகைகளுடன் வெளிவருகின்ற "சுதந்திர தினம் / தேசத்திற்கு மகுடம்" எனும் தலைப்பிலான இணைப்புகளில் விளம்பரங்களை பிரசுரித்தமை.

(ஆ) ஊடக அறிவித்தல்கள் -

- பொதுமக்களுக்கான பிரதானமான அறிவித்தல் - "காப்புறுதித் திட்டப் படிவங்கள்"
- பொதுமக்களுக்கான அறிவித்தல் - "பதிவுசெய்யப்பட்டுள்ள காப்புறுதிக் கம்பனிகளின் பெயர்ப்பட்டியல்"
- பொதுமக்களுக்கான அறிவித்தல் - "பதிவுசெய்யப்பட்டுள்ள காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் பெயர்ப்பட்டியல்"
- "டெயிலி மிரர் வியாபாரம்" எனும் பிரசுரப் பகுதியின் 10ஆவது வருட நிகழ்வையொட்டி டெயிலி மிரர் செய்திப் பத்திரிகையின் விசேட அம்சத்தில் ஊடக அறிவித்தல் செய்தமை.

(இ) ஊடக வெளியீடுகள் -

- தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் இ.கா.சபையின் பங்களிப்பு பற்றிய ஊடக வெளியீடு.
- "காப்புறுதி ஒழுங்குறுத்துநர் கைத்தொழில் தேவைகளை பூர்த்திசெய்கின்றார்" தொடர்பான ஊடக வெளியீடு.
- "2010ஆம் ஆண்டுக் காலத்தில் காப்புறுதித் துறையின் செயலாற்றுகை" தொடர்பான ஊடக வெளியீடு.
- "இலங்கைக் காப்புறுதிச் சபையின் 10வது ஆண்டுநிறைவு" தொடர்பான ஊடக வெளியீடு.
- "இ.கா.சபையின் புதிய பணிப்பாளர் நாயகத்தின் நியமனம்" தொடர்பான ஊடக வெளியீடு.
- "2011இன் முதல் அரையாண்டுக்காலத்திற்கான காப்புறுதிக் கைத்தொழில் செயலாற்றுகை" தொடர்பான ஊடக வெளியீடு.
- "காப்புறுதிக் கைத்தொழிலுக்கான அபாய உணர்வு குறைந்த மூலதன விதிமுறை" தொடர்பான ஊடக வெளியீடு.

(ஈ) துண்டுப்பிரசுரங்கள் -

- காப்புறுதித் திட்டப் படிவம்
- காப்புறுதி உள்ளடக்கம்

## ஊடக நேர்காணல்

டெயிலி மிரர் பத்திரிகையின் வியாபாரப் பகுதிப் பதிப்பாசிரியரின் வேண்டுதலின் பேரில், அப்பத்திரிகையுடனான நேர்காணல் ஒன்றை எமது புதிய பணிப்பாளர் நயகத்துடன் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

## ஏனைய செயற்பாடுகள்

### 1) காப்புறுதி முகவர்கள் தொடர்பான தரவுத்தளம்

கா.கை.ஒ.சட்டத்தின் 78(1) மற்றும் (2) ஆகிய பிரிவுகளின் பிரகாரம், சகல காப்புறுதிக் கம்பனிகளும் தமது தனிப்பட்ட இணையத் தளங்களில் அவர்களது முகவர்கள் பற்றிய தகவல்களை சபையானது பெறக்கூடிய வகையில் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்பட்ட தரவுத்தளத்தைப் பேணுவதற்கு வேண்டப்படுகின்றனர். இத்தரவுத்தளங்கள் எம்.டி.ஈ.ஆர். இன் உதவியுடன் பாவனையாளருக்கு இலகுவானமுறையில் மேலும் நவீனப்படுத்தப்பட்டன.

### (2) காப்புறுதிக் கொள்கைகள் தொடர்பான ஆவணம்

2011ஆம் ஆண்டின் கா.கை.ஒ.சட்டத்தின் இலக்கம் 3இன் பிரகாரம், மீளாய்வு ஆண்டுக்காலத்தில் காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்தான முப்பத்தாறு (36) புதிய காப்புறுதிக் கொள்கைகள் சபைக்கு கிடைக்கப்பெற்றன. காப்புறுதிக் கொள்கையுடையோர்களின் நலன்கள் போதுமானளவு பாதுகாக்கப்படுகின்றனவா என்பதைப் பரிசோதிக்கும் நோக்கில் ஒவ்வொரு காப்புறுதியாளர்களும் அவர்களால் விநியோகிக்கப்படவுள்ள சகல காப்புறுதிக் கொள்கை படிவங்களையும் அதனை விநியோகிப்பதற்கு முன்னர் சபையிடம் ஆவணப்படுத்துவதற்கு வேண்டப்படுகின்றனர்.

இவ் உத்தேசிக்கப்பட்ட தயாரிப்புகளைப் பரிசீலித்ததன் பின்னர், சில தயாரிப்புகள் தொடர்பில் மேம்பாடுகள் தேவையாகவுள்ளமையை சபை பரிந்துரை செய்தது.

### (3) பொதுமக்கள் ஆலோசனைகள்

மீளாய்வு ஆண்டில், காப்புறுதித் துறைசார்ந்த தகவல்களையும் மேலும் காப்புறுதியுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பிலான ஏதும் முறைப்பாடுகள் இருப்பின் அவற்றையும் பொதுமக்கள், காப்புறுதியுடையோர் மற்றும் ஏனைய பங்கீட்டாளர்கள் ஆகியோரிடமிருந்து கோரும் வகையிலான நடவடிக்கைகளை சபை மேற்கொண்டது.

## நிர்வாகம் தொடர்பான மீளாய்வு

### மனிதவளம்

ஒரு நிறுவனத்தின் வெற்றியானது பெருமளவு தங்கியிருப்பது அந்நிறுவனத்தின் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்ற மக்களின் திறமையிலேயே ஆகும். அந்தவகையில், மனிதவளமே எமது சபையின் வெற்றிமிக்க உபாயமுறையின் பிரதான முதுகெலும்பு என நாம் நம்புகிறோம்.

சபையானது, இலங்கையில் காப்புறுதித் துறையானது சகல பிரியமுடைய காப்புறுதிக் கொள்கையுடையோர்களின் ஆற்றல்களைப் பாதுகாக்கும் வகையில் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்தலுடன் தொடர்புபட்ட முழுதுமளாவிய குறிக்கோள்களையும் பெறுதலை நோக்கிய அதன் கடமையினை நிறைவேற்றுவதற்குத் தேவையான தொழிற்பாடுகளை அடையாளப்படுத்தும் வகையிலான நிறுவனக் கட்டமைப்பை ஸ்தாபிக்கின்றது.

தேவைப்பட்ட பதவிகளை உரிய வேளையில் ஆட்சேர்ப்புச் செய்வதன் மூலம் மனித வளங்களை வலுப்படுத்தும் நோக்கிலான முன்னெடுப்புக்களை மீளாய்வு ஆண்டின் போது சபை மேற்கொண்டது. 2011 டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறு இலங்கைக் காப்புறுதிச் சபையின் பலமிக்க பணியாட்தொகுதியினரின் மொத்த எண்ணிக்கை 37 ஆகவிருந்ததோடு, இவர்களில் 11 பேர் நிறைவேற்றுத்தரம் சாராதோர்களாவர்.

### பயிற்சியளிப்பு

தொடர்ச்சியாக மாற்றமடையும் வெளிச் சூழல் மற்றும் காப்புறுதி ஒழுங்குபடுத்துகையுடன் தொடர்புடைய விடயங்களும் சபை தனது ஊழியர்களுக்கு கட்டமைக்கப்பட்ட பயிற்சியில் கவனம் செலுத்துவதை வேண்டிநிற்கின்றன. எதிர்பார்க்கப்படும் வியாபாரத் தேவைப்பாடுகளையும் நீண்ட காலச் சவால்களையும் எதிர்கொள்வதற்கான தனிப்பட்ட ஆற்றல்கள் விடயத்தில் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டது. சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு மட்டுமன்றி நிறைவேற்றுத் தரத்திலுள்ளவர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்காகவும் சபை நிதி ஒதுக்கீடுகளைச் செய்தது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

2011 ஆம் ஆண்டில் 12 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. 18 ஊழியர்களுக்கு உள்நாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களும் 6 ஊழியர்களுக்கு உயர்கல்விக்கான அனுசரணையும் வழங்கப்பட்டன.

இவை தவிர அனைத்து ஊழியர்களுக்குமான வருடாந்த வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சியும் மீளாய்வாண்டில் சபையினால் நடாத்தப்பட்டது.

2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற மொத்த பயறிசிக்கான செலவுகளை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| வகை | 2010 (ரூபா.) | 2011 (ரூபா.) |
|---|---:|---:|
| உள்நாட்டுப் பயிற்சி | 1,648,253 | 1,668,837 |
| வேளிநாட்டுப் பயிற்சி | 2,792,679 | 3,087,200 |

### பொதுநலன்

சபையின் குறிக்கோள்களை அடைவதற்கான உயர்ந்த அறநெறியுடைய மற்றும் ஆக்கம் மிக்க பணியாட்தொகுதியொன்றைப் பேணும் நோக்கில் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் பணியாட்தொகுதியினர் மற்றும் அவர்களின் குடும்பத்தினருடான வருடாந்த உபசார ஒன்றுகூடல் ஒன்று இடம்பெற்றது. பணியாட்தொகுதியினருக்கான உள்ளக மற்றும் வெளியக மருத்துவத் திட்டங்கள், காப்புறுதி உள்ளடக்கங்கள் மற்றும் நிதிசார் உதவித் திட்டங்கள் என்பன போன்ற பொதுநல நன்மைகளும் இவ்வாண்டுக் காலத்தில் வழங்கப்பட்டன.

## நிதிசார் மீளாய்வு

### காப்புறுதிக் கொள்கையுடையோருக்கான பாதுகாப்பு நிதியம்

கா.கை.ஒ.சட்டத்தின் பிரகாரம், காப்புறுதிக் கொள்கையுடையோரின் நிதியத்திற்காக சேகரிக்கப்படுகின்ற, அச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நோக்கத்திற்கும் உடனடியாகத் தேவைப்படாத எந்தவொரு பணமும் (செஸ்) கவனமான முறையில் சிறந்த வருவாயை ஈட்டுவதற்காக சபையினால் முதலீடு செய்யப்பட வேண்டும். அதன் பிரகாரம் இவ் ஆண்டுக் காலத்தில் அத்தகைய நிதிகளை உரியவாறு இ.கா.சபையானது முதலீடு செய்ததோடு, பின்வரும் வரைபடமானது செஸ் சேகரிப்பு மற்றும் ஈட்டப்பட்ட முதலீட்டு வருமானம் ஆகியவற்றை விபரித்துக் காட்டுகிறது.

*வரைபடம் 1*

**செஸ் வருமானமும் முதலீட்டு வருமானமும் 2007 - 2011 (ரூபா. மில்லியன்களில்)**




கடந்த ஐந்து வருடங்களுக்கான செஸ் வருமானம் தொடர்பான வளர்ச்சியை மேலுள்ள வரைபடம் 1 தெளிவுறுத்துகின்றது. 2010 இல் வட்டி வீத வீழ்ச்சி காரணமாக முதலீட்டு வருமானமானது 2009 ஐ விட 2010இல் குறைவடைந்துள்ள போதிலும் 2007 தொடக்கம் 2009 வரை சீரான அதிகரிப்பொன்றைக் காட்டியுள்ளது. எனினும், 2011இல் முதலீட்டு வருமானமானது மீண்டும் ஒரு சாதகமான போக்கைக் காட்டியுள்ளது. இதற்கு செஸ் வருமானமானது 2010 இன் 145 மில்லியனிலிருந்து 2011இல் 217 மில்லியனுக்கு சுமார் 50 சதவீத அதிகரிப்பைக் காட்டியமையே காரணமாகும்.

காப்புறுதிக் கொள்கையுடையோர் பாதுகாப்பு நிதியத்தின் பெறுமதியானது கடந்த ஐந்து வருடங்களில் அதிகரித்துள்ளதோடு அதனை பின்வரும் வரைபடம் தெளிவாகக் காட்டுகிறது.

*வரைபடம் 2*

**காப்புறுதிக் கொள்கையுடையோரின் பாதுகாப்பு நிதியத்தின் பெறுமதி 2007-2011 ஆண்டுக்காலம் (ரூபா. மில்லியன்)**




*வரைபடம் 3*

**டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறு காப்புறுதிக் கொள்கையுடையோரின் பாதுகாப்பு நிதியம் தொடர்பான சொத்துக்களின் தொகுப்பை கீழுள்ள வரைபடம் விபரிக்கின்றது**




## சபையின் வருமானம்

சபையின் முழுவதுமளாவிய வருமானமானது பின்வரும் வழிவகைகள் மூலம் கிடைக்கப் பெறுகின்றன.

- காப்புறுதி மற்றும் காப்புறுதித் தரகுக் கம்பனிகளிடமிருந்தான பதிவுக் கட்டணங்கள்
- காப்புறுதிக் கம்பனிகளிடமிருது அறவிடப்பட்ட வருடாந்தக் கட்டணம்

- காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் வருடாந்த பதிவு புதுப்பித்தல் கட்டணம்
- மிகை நிதியங்களை முதலீடு செய்வதன் மூலமான வட்டி வருமானம்

2007 தொடக்கம் 2011 வரை கிடைக்கப்பெற்ற முழுவதுமளாவிய வருமானத்தை பின்வரும் வரைபடம் விளக்கிக் காட்டுகிறது.

## சபையின் செலவினங்கள்

*வரைபடம் 4*

**2007-2011 காலத்திற்கான சபையின் வருமான வழிவகைக் கூறாய்வு**




சபையின் மொத்தச் செலவானது 2007 ஆம் ஆண்டிலிருந்த 2011ஆம் ஆண்டு வரை அதிகரித்துள்ளன. வருமானத்தற்கும் செலவினத்திற்கும் இடையிலான பற்றாக்குறையானது, கா.கை.ஒ.சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க காப்புறுதிக் கொள்கையுடையோரின் பாதுகாப்பு நிதியத்திலிருந்து நிதியளிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் வரைபடமானது 2007-2011 வரையான சபையின் மொத்தச் செலவினத்தைக் குறித்துக் காட்டுகிறது.

*வரைபடம் 5*

**2007-2011 வரையான சபையின் மொத்தச் செலவினங்கள் (ரூபா. மில்லியன்)**





# நிதிசார் தகவல்கள்


ஐந்தொகை 56
வருமான, செலவுக் கூற்று 57
ஒதுக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பான கூற்று 58
காசுப் பாய்ச்சல் கூற்று 59
காப்புறுதியுறுநர் பாதுகாப்பு நிதியம் 60
கணக்கீட்டுக் கொள்கைகள் 61
நிதிக் கூற்றுக்கள் மீதான குறிப்புக்கள் 63

# ஐந்தொகை

**2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு**

| | குறிப்பகள் | 2011 திகதி உள்ள்வாறு ரூ. | 2010 திகதி உள்ள்வாறு ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் | 1 | 12,368,886 | 16,818,661 |
| கொள்கை வைத்திருப்போர் பாதுகாப்பு நிதியமும். - வாடகை - மின்சார வைப்புகள் | 2 | 8,728,590 | 8,728,590 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பொருட்பட்டியல்கள் | 3 | 183,131 | 312,131 |
| கொள்கை வைத்திருப்போர் பாதுகாப்பு நிதியமும்.- முதலீடுகள் மற்றும் ஏனையவை | 2 | 1,270,526,277 | 1,003,081,520 |
| ஏனையநடைமுறைச் சொத்துக்கள் | 4 | 8,028,124 | 7,211,191 |
| அரசாங்க பிணையங்களில் முதலீடுகள் | | - | 5,000,000 |
| காசும் காசு சமனிகளும் | 5 | 185,159 | 1,606,284 |
| **மொத்த செத்துக்கள்** | | 1,300,020,167 | 1,042,758,377 |
| **ஒதுக்ககளும் பொறுப்புகளும்** | | | |
| ஒதுக்குகள் | | | |
| திரட்டிய நிதியம் | 6 | - | - |
| கொள்கை வைத்திருப்போர் பாதுகாப்பு நிதியமும் | 7 | 1,279,254,867 | 1,011,810,110 |
| **பொறுப்பக்கள்** | | | |
| **நடைமுறையல்லா பொறுப்பகள்** | | | |
| கொடை | 8 | 12,368,887 | 15,906,644 |
| ஓய்வூதிய நன்மை கடப்பாடுகள் | 9 | 1,833,909 | 1,444,533 |
| கடன்களுக்கான வட்டி | 10 | - | 361,872 |
| | | 14,202,796 | 17,713,049 |
| **நடைமுறைப்பொறுப்பகள்** | | | |
| முற்பணப் பெறுகை | | 1,400,018 | 2,350,018 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புகள் | 11 | 5,162,486 | 10,122,632 |
| கடன்களுக்கான வட்டியின் தற்போதைய அளவு | 10 | - | 762,569 |
| | | 6,562,504 | 13,235,219 |
| **மொத்த ஒதுக்ககளும் பொறுப்புகளும்** | | 1,300,020,167 | 1,042,758,377 |

இலங்கை காப்பறுதிசபையின் உறுப்பழினர்கள் இந்த நிதிசார் கூற்றுகளின் தயாரிப்புக்கும் முன்வைப்பிற்கும் பொறுப்பாக உள்ளனர்.

மேற்படி நைந்தொகையானது கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் பக்கம் 61-68 காணப்படுகின்ற குறிப்பக்களுக்கு இயைந்ததாக

வாசிக்கப்படவுள்ளது.

**இந்திராணி சுகததாச**
*தலைவர்*

**டி. விதானகமஆராச்சி**
*உறுப்பினர்*

இலங்கை கொழும்பு
01, மார்சு 2012

# வருமானச் செலவுக் கூற்று

| **2011 திசம்பர் 31 ஆம் திகதியன்றுமடிவடைந்த ஆண்டுககான வருமான செலவினக் கூற்று** | **குறிப்பகள்** | **முடிவடைந்த ஆண்டு 2011 ரூபா.** | **முடிவடைந்த ஆண்டு 2010 ரூபா.** |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| வருமானம் | 12 | 40,498,544 | 31,496,975 |
| அரசாங்க கொடைகள் | | - | - |
| கொடை அங்கீகரிப்பு | 8 | 6,040,348 | 7,520,440 |
| வட்டி வருமானம் | | 144,873 | 3,064,491 |
| ஏனைய வருமானம் | 13 | 415,246 | 224,167 |
| **மொத்த வருமானம்** | | 47,099,011 | 42,306,073 |
| குறைக்க: | | | |
| **செலவினம்** | | | |
| பதவியினர் செலவுகள் | 20 | 36,063,408 | 28,974,292 |
| தொழில்சாார் கட்டணங்கள் | 21 | 1,619,785 | 1,076,189 |
| தொழிற்பாட்டு செலவினங்கள் | 22 | 36,567,718 | 41,190,501 |
| நிதிசார் சேவை கல்விநிலையமொன்றை தாபிப்பதற்கான பங்களிப்பு | | 99,514 | 242,115 |
| மொத்த செலவினம் | | 74,350,425 | 71,483,097 |
| **வரிக்கு மன்னரான தேறிய பற்றாக்குறை** | 14 | (27,251,414) | (29,177,024) |
| கொள்கை பைப்பா பாதுகாப்பு நிதியத்தின் நிதியத்திற்கான மாற்றம் | 7 | 27,262,344 | 30,472,838 |
| வரிவிதிப்பு | 15 | (10,930) | (1,295,814) |
| வரிக்குப் பின்னரான தேறிய பற்றாக்குறை | | - | - |
| ஆண்டுக்கான தேறிய மிக | | - | - |

பக்கம் 61-68 களில் காணப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகள் குறிப்புகள் கணக்கீட்டு கொள்கைகளின் முக்கிய பகுதியொன்றை உருவாக்ககின்றன.

# இலங்கை காப்புறுதிச் சபை

| 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒதுக்ககளில் மாற்றங்கள் பற்றிய கூற்று | முடிவடைந்த ஆண்டு 2011 ரூபா. | முடிவடைந்த ஆண்டு 2010 ரூபா. |
|---|---|---|
| **திரட்டிய நிதியம்** | | |
| வருட ஆரம்பத்தில் நிலுவை | - | 67,828,254 |
| ஆண்டில் செய்யப்பட்ட சீராக்கம் | - | (67,828,254) |
| ஆண்டுக்கான தேறிய மிகை(குறை) | - | - |
| வருட இறுதியல் நிலுவை | - | - |

க்கம் 61-68 களில் காணப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகள் குறிப்புகள் கணக்கீட்டு கொள்கைகளின் முக்கிய பகுதியொன்றை உருவாக்ககின்றன.

# காசுப்பாய்ச்சல் கூற்று

| 2011 திசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த | குறிப்பு | 2011<br>ரூபா. | 2010<br>ரூபா. |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிரந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| காலத்திற்காக தேறிய அதிகரிப்பு(குறைவு) | | - | - |
| தேய்மானத்திற்கான சீராக்கல்கள் | | 6,237,563 | 8,220,340 |
| ஓய்வூதஜய நன்மைக்கான ஏற்பாடு | | 703,074 | 568,362 |
| நீக்கம் மீதான இலாபம் / நட்டம் | | (172,023) | - |
| கொடையின் அங்கீகரிப்பு | | (6,040,348) | (7,520,440) |
| வருமான வரி | | 10,930 | 1,295,814 |
| வட்டிவருமானம் | | (144,873) | (3,064,491) |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்ரான தேறிய அதிகரிப்பு | | 594,323 | (500,415) |
| தொழிற்படு மூலதனத்தின் மாற்றம் | | | |
| பொருட் பதிவேடுகளில்(அதிகரிப்பு) குறைப்பு | | 129,000 | (63,210) |
| பெறத்தக்கவைகளில்(அதிகரிப்பு) குறைப்பு | | (824,969) | 10,990,533 |
| முற்பண பெறுகைகளில் (அதிகரிப்பு) குறைப்பு | | (950,000) | 476,416 |
| அட்டுறுக்கள் மற்றும் கடன்பட்டோரின் (அதிகரிப்பு) குறைப்பு | | (5,284,774) | 5,878,612 |
| ஊ தொழிற்பாட்டு செலவுகளில் பயன்படுத்தப்பட்ட காசுப்பாய்ச்சல் | | (6,930,743) | 17,282,351 |
| தொழிற்பாட்டு செலவுகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் | | (6,336,420) | 16,781,936 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிரந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | | | |
| அரசாங்க முறிகளில் முதலீடு | | 5,000,000 | (22,646,824) |
| வட்டி வருமானம் | | 152,910 | 6,638,036 |
| சொத்து பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் விற்பனையிலிரந்தக வருமானம் | | 886,826 | - |
| சொத்து பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் கொள்வனவு | | (2,502,591) | (1,478,079) |
| முதலீட்டு செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | | 3,537,145 | (17,486,867) |
| **நிதிசார் செயற்பாடுகளிவிருந்தன காசுப்பாய்ச்சல்** | | | |
| கொள்கை வைத்திருப்போர் நிதியத்திலிருந்தான மூலதன மாற்றம் | | 2,502,591 | 1,478,079 |
| நிதிசார் குத்தகைகளில் அதிகரிப்பு | | (1,124,441) | (740,581) |
| நிதியடல் செயற்பாடுகளிலிருந்தக தேறி காசுப்பர்ய்ச்சல்கள் | | 1,378,150 | 737,498 |
| காசும் காசு சமனிகளில் தேறிய அதிகரிப்பு (குறைவு) | | (1,421,125) | 32,567 |
| வருட ஆரம்பத்தில் காசும் காசு சமனிகளும் | | 1,606,284 | 1,573,717 |
| வருட இறுதியில் காசும் காசு சமனிகளும் | | 185,159 | 1,606,284 |
| வங்கி மற்றும் கையிலுள்ள காசு | 5 | 185,159 | 1,606,284 |

மேற்படி நைந்தொகையானது கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் பக்கம் 61-68 காணப்படுகின்ற குறிப்பக்களுக்கு இயைந்ததாக வாசிக்கப்படவுள்ளது.

# காப்புறுதியுறுநர் பாதுகாப்பு நிதிய காசுப் பாய்ச்சல் கூற்று

**2011 திசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த காசுப்பாய்ச்சல் கூற்று**

| | குறிப்பு | 2011 ரூபா | 2010 ரூபா |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ய்சல்** | | | |
| கொள்கை வைத்திருப்போர் பாதுகாப்பு நிதியம் தேறிய அதிகரிப்பு | | 267,444,757 | 256,736,567 |
| தொழிற்படு மூலதன மாறற்ங்களுக்கு மன்னரான தேறிய அதிகரிப்பு | | 267,444,757 | 256,736,567 |
| தொழிற்படு மூலதனத்தின் மாறற்ம் | | | |
| (அரசாங்க பிணையங்கள் மீதான பெறத்தக்க வட்டியின் அதிகரிப்பு(குறைப்பு) | | (8,377,361) | 19,821,348 |
| செஸ் பெறுகைகளின் அதிகரிப்பு(குறைப்பு) | | (13,985,183) | 3,636,910 |
| வாடகை வைப்புகளின் அதிகரிப்பு(குறைப்பு) | | - | (996,474) |
| செஸ் நிதியத்திலிருந்து மாற்றப்படத்தக்க தொகையின் அதிகரிப்பு (குறைப்பு) | | 5,458,870 | (17,133,531) |
| | | (16,903,674) | 5,328,253 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ய்சல் | | 250,541,083 | 262,064,820 |
| **முதலீட்டு செயற்பாடுகளில் காசுப்பாய்ச்சல்** | | | |
| அரசாங்க பிணையங்களில் முதலீடுகள் | | (250,939,905) | (266,982,177) |
| முதலீட்டு செயற்பாடுகளிலிரந்து தேறிய காசு | | (250,939,905) | (266,982,177) |
| காசும் காசு சமனிகளும் தேறிய அதிகரிப்பு (குறைப்பு) | | (398,823) | (4,917,357) |
| ஊவருட ஆரம்பத்தில் காசும் காசு சமனிகளும் | | 427,280 | 5,344,637 |
| வருட இறுதியில் காசும் காசு சமனிகளும் | | 28,457 | 427,280 |
| கையிலஎ்ள காசு | 2 | 28,457 | 427,280 |

மேற்படி நைதொகையானது கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் பக்கம் 61-68 காணப்படுகின்ற குறிப்பக்களுக்கு இயைந்ததாக வாசிக்கப்படவுள்ளது.

# கணக்கியல் கொள்கைகள்

## 1. முக்கிய கணக்கியல் கொள்கைகள்

### 1.1 தயாரிப்புக்கான அடிப்படை அம்சங்கள்

சபையின் நிதித்துறை அறிக்கைகள் இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டு வரலாற்று அடிப்படையில் கிட்டிய ரூபாவிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் கீழே வரும் குறிப்புகளில் தரப்பட்டுள்ளன.

### 1.2 இணக்கப்பாட்டிற்கான அறிக்கை

இலங்கை காப்புறுதிச் சபையின் நிதித்துறை அறிக்கைகள் அனைத்தும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்ட இலங்கை கணக்கியல் தரங்களுக்கு ஏற்ற விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளதோடு, அத்தகைய தரங்களுக்கும் இணங்கியுள்ளன.

### 1.3 ஐந்தொகை திகதியின் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகை திகதிக்குப் பின்னரான சகல நிகழ்வுகளும் கருத்திற்கெடுத்துக்கொள்ளப்பட்டு பொருத்தமான சீராக்கல்களோ அல்லது வெளிப்பாடுகளோ தேவையின் அடிப்படையில் நிதித்துறை அறிக்கைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.4 ஒப்பிட்டு புள்ளிவிபரங்கள்

ஒப்பீட்டு புள்ளிவிபரங்கள் அனைத்தும் ஆய்வுக்குட்பட்ட நிதி வருட சமர்ப்பணத்தில் மாற்றங்களுக்கு இணங்கும் வகையில் சீராக்கப்பட்டுள்ளன.

### 1.5 வரிவிதிப்பு

வருமான வரிக்கான ஏற்பாடு 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளன.

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 7(பி) பிரிவின் கீழ் சபையை அட்டவணைப்படுத்தும்படி நிதி திட்டமிடல் அமைச்சிற்கு இலங்கை காப்புறுதிச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

### 1.6 வெளிநாட்டு நாயத்திற்கு மாற்றுதல்

வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை நடவடிக்கைகள் ஏதாவது இருந்தால், அவை நடவடிக்கை இடம்பெற்ற சமயத்தில் கடைப்பிடிக்கப்பட்ட நாணயப் பரிவர்த்தனை விகிதத்தின் அடிப்படையில் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டுள்ளன.

## 2. ஆதனங்களின் விலைமதிப்பிற்கான அடிப்படை அம்சங்கள்

### 2.1 ஆதனம், பொறி, உபகரணங்கள்

சொந்தமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்கள் என்பன கொள்விலையில் திரட்டிய தேய்மானம் கழிக்கப்பட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளன. ஆதனம், பொறி, உபகரணங்களின் கொள்விலை என்பது அவற்றை வாங்குவதற்கான பணத்துடன் திட்டமிடப்பட்ட உபயோகத்தில் அவற்றைச் செயற்படு நிலைக்குக் கொண்டுவருவதில் ஏற்பட்ட செலவினங்களையும் உள்ளடக்கியதாகும்.

**தேய்மானம்**

கீழ்க்காணும் விகிதத்தில் மதிப்பிடப்பட்ட பயனுள்ள காலத்தில் மேற்கோடு அடிப்படையில் தேய்மானம் கணிக்கப்படுகிறது.

| | % வருட விகிதம் |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 25 |
| மரத்தளபாடங்கள், பொருத்திகள், | 12.5 |
| அலுவலக மற்றும் நுனி உபகரணங்கள் | 25 |
| பயிற்சி உபகரணங்கள் | 25 |

சொத்து ஒன்று கொள்வனவு செய்யப்பட்ட திகதியில் இருந்து தேய்மானம் கணக்கிடப்படுகிறது. அதேவேளை, அகற்றும் திகதி வரை தேய்மானம் கணக்கிடப்படும்.

நிதிக் குத்தகையின் கீழ் பெறப்பட்ட சொத்துக்கள் தேய்மானம் குறுகிய குத்தகை காலம் அல்லது சொத்துக்களின் பயனுள்ள உபயோக காலம் என்பதன் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

### 2.2 முதலீடுகள்

அரச கடன் பத்திரங்களில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் கொள்விலையில் தெரிவிக்கப்பட்டு வருட இறுதி வரை வட்டி கணக்கிடப்படுகிறது.

### 2.3 பதிவேட்டுப் பொருட்கள்

பதிவேட்டுப் பொருட்கள் அனைத்தும் குறைந்த மட்டக் கொள்விலை அல்லது பெறக்கூடிய நிகர பெறுமதி என்பதில் காட்டப்பட்டுள்ளன. முதலில் பெறப்பட்ட, முதலில் அகற்றப்பட்ட அடிப்படையில் பதிவேட்டுப் பொருட்களின் கொள்விலை கணக்கிடப்படுகிறது.

### 2.4 பெறுகைள்

பெறுகைகள் அனைத்தும் மதிப்பிடப்பட்ட பெறக்கூடிய பெறுமதியில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 2.5 காசும் காசுக்குச் சமமானவையும்

காசுப்பாய்ச்சல் அறிக்கை சம்பந்தப்பட்டமட்டில் காசும் காசுக்குச் சமமானவையும் என்பது, வங்கியிலுள்ள பணம் மற்றும் கையிருப்பிலுள்ள பணம் என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.

## 3. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

### 3.1 ஓய்வூதிய நன்மைகள்

**3.1.1 குறித்துரைக்கப்பட்ட நன்மைத்திட்டங்கள் - பணிக்கொடை**

இலங்கை கணக்கியல் தரம் 16 க்கு அமைய ஷஓய்வூதிய நன்மை செலவினம்' ஊழியரின் முதலாம் வருட சேவைக்காலத்தில் இருந்து பணிக்கொடையின் முழு அளவிலான ஏற்பாடுகள் செய்யப்படுவது அவசியமாகும்.

முதலாம் வருட சேவை முடிவடைந்ததும் சபை பணிக்கொடையை ஏற்பாடு செய்கிறது. இருந்த போதிலும், பொறுப்புக்களின் அடிப்படையில் இந்த ஏற்பாடு சீராக்கப்படும்.

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்திற்கு அமைய ஊழியர் ஒருவரின் தொடர்ச்சியான ஐந்து வருடகால சேவை பூர்த்தியடைந்ததும், பணிக்கொடைக்கான பொறுப்பு ஆரம்பமாகும்.

**3.1.2 குறித்துரைக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி**

சகல நிரந்தர ஊழியர்களும் சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைய ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பை வழங்க உரிமையுடையவர்களாவர்.ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி என்பனவற்றுக்கு ஊழியர்களின் மொத்த சம்பளத்தின் முறையே 12 மற்றும் 3 பங்களிப்பை சபை வழங்குகிறது.

### 3.2 பொறுப்புக்கள்

ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்கள் எனக் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்கள், கோரிக்கையின் பேரில் செலுத்தப்பட வேண்டியவையும் அல்லது ஐந்தொகை திகதியில் இருந்து ஒரு வருட காலத்தினுள் செலுத்தப்பட வேண்டியவையுமாகும். நடைமுறைப் பொறுப்பக்களாவன, ஐந்தொகை திகதியில் இருந்து ஒரு வருட காலத்தின் பின்னர் கொடுப்பனவுகளுக்குரிய நிலுவைத் தொகைகளாகும்.

நிதித்துறை அறிக்கையைத் தயாரிப்பதில் சகல தெரிந்த பொறுப்புக்கள் கொள்விலை அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன.

### 3.3 மானியங்கள்

ஆயுள்காப்புறுதிதாரரின் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மாற்றப்பட்ட மூலதனச் செலவினங்களும் மைக்ரோ காப்புறுதித் திட்டத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களும் மானியங்கள் எனக் கருதப்பட்டு சொத்தின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள உபயோக காலத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன.

## 4. வருமானமும் செலவினமும்

### 4.1 வருமான அங்கீகாரம்

வருமான அங்கீகாரம் திரண்ட அடிப்படையில் இடம்பெற்றுள்ளது.

### 4.2 அரசாங்க மானியங்கள்

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் அரசாங்க மானியங்கள் எதுவும் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

### 4.3 செலவின அங்கீகாரம்

செலவினத்திலும் பார்க்கக் கூடிய அளவிலான வருமானத்தைத் தீர்மானிப்பதில் சபையை நடத்துவதில் ஏற்பட்ட சகல செலவினங்களும் வருமானத்திற்கு எதிராகக் கணக்கிடப்பட்டுள்ளன.

### 4.4 காசுப்பாய்ச்சல் அறிக்கை

காசுப்பாய்ச்சல் அறிக்கை நேரடியற்ற வழிமுறையை உபயோகித்து தயாரிக்கப்பட்டுள்ளது.

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1. சொத்து பொறித்தொகுதி கருவிகள்

| | மோட்டார் வாகனங்கள் | தளபாடங்கள்ஈ பொருத்துக்கள் இணைப்புகள் | அலுவலக உபகரணங்கள் (ஈடிபி ஏனையவை) | பயிற்சி கருவிகள் | நிதி குத்தகை மோட்டார் வாகனங்கள் மீதான சொத்துகக்ள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| **செலவு** | | | | | | |
| 2011 சனவரி 1 இல் உள்ளவாறான நிலுவை | 9,473,243 | 14,206,234 | 18,058,366 | 141,450 | 2,800,000 | 44,679,294 |
| சேர்ப்புகள் | - | 76,775 | 2,425,817 | - | - | 2,502,591 |
| நீக்கல்கள் | - | - | - | - | (2,800,000) | (2,800,000) |
| 2011 சனவரி 1 இல் உள்ளவாறான நிலுவை | 9,473,243 | 14,283,009 | 20,484,183 | 141,450 | - | 44,381,885 |
| **திரட்டிய தேய்மானம்** | | | | | | |
| 2011 சனவரி 1 இல் உள்ளவாறான நிலுவை | 7,710,546 | 5,831,228 | 12,289,327 | 141,450 | 1,888,082 | 27,860,633 |
| ஆண்டுக்கான மாற்றம்ச | 1,012,061 | 1,778,607 | 3,249,780 | - | 197,115 | 6,237,563 |
| நீக்கல்கள் | - | - | - | - | (2,085,197) | (2,085,197) |
| 2011 சனவரி 1 இல் உள்ளவாறான நிலுவை | 8,722,607 | 7,609,835 | 15,539,107 | 141,450 | - | 32,012,999 |
| **கீழ்கொண்டுவரப்பட்ட பெறுமதி** | | | | | | |
| 2011 திசம்பர் 31 இல் உள்ளவாறு | 750,636 | 6,673,174 | 4,945,076 | - | - | 12,368,886 |
| கீழ்கொண்டுவரப்பட்ட பெறுமதி | | | | | | |
| 2010 திசம்பர் 31 இல் உள்ளவாறு | 1,762,697 | 8,375,006 | 5,769,040 | - | 911,918 | 16,818,661 |

## 2. கொள்கை வைத்திருப்போர் பாதுகாப்பு நிதிய முதலீடகளும் ஏனையவையும்

| டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு | குறிப்புகள் | 2011 | 2010 |
|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. |
| **நடைமுறையல்லா தொத்துகக்ள்** | | | |
| வாடகையும் மின்சார வைப்பகளும் | | 8,728,590 | 8,728,590 |
| **நடைமுறையல்லா தொத்துகக்ள்** | | | |
| அரசாங்க முறிகளில் முதலீடு | | 1,189,577,848 | 938,637,943 |
| அரசாங்க பிணையங்கள் மீதான பெறத்தக்க வட்டி | | 31,884,906 | 23,507,545 |
| பெறத்தகக் செஸ் வரி | | 50,000,000 | 36,014,817 |
| வங்கியிலுளட்ள நிலுவை | | 28,457 | 427,280 |
| செஸ் நிதியத்தறிகு மாற்றப்படவுள் தொகை | | - | 4,493,936 |
| தொகை | | | |
| செஸ் நிதியத்தறிலிருந்து மாற்றப்படவுள் | | 964,935 | - |
| | | 1,270,526,277 | 1,003,081,521 |
| மொத்த சொத்துகக்ள் | | 1,279,254,867 | 1,011,810,111 |

| டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு | குறிப்புகள் | 2011 ரூபா. | 2010 ரூபா. |
|---|---|---|---|
| **3. பொருட்பதிவேடுகள்** | | | |
| அச்சிடுதல், எழுது பொருட்கள் மற்றும் கணனிப் பாகங்கள் | | 175,871 | 171,186 |
| வெளியீடுகள் | | - | 51,100 |
| முத்திரைகள் | | 7,260 | 89,845 |
| | | 183,131 | 312,131 |
| **4. ஏனைய நடைமுறைச் சொத்துகக்ள்** | | | |
| வைப்புகள் | | 187,870 | 162,000 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | | 146,911 | 5,416 |
| நி.வை.வ பெறத்தக்கவைகள் | | 1,055,865 | 841,728 |
| வெட் கட்டுப்பாடு | | 1,182,959 | 1,423,033 |
| பெறத்தக்க வட்டி - திறைசேரி உண்டியல்கள் | | - | 8,036 |
| பதவியினர் கடன்கள்* | | 3,668,481 | 4,025,086 |
| முற்பணமும் முன் கொடுப்பணவுகளும் | | 821,104 | 745,892 |
| செஜ் நிதியத்திலிருந்து மாற்றப்படவுள்ள தொகை | | 964,935 | - |
| | | 8,028,124 | 7,211,191 |

*பதவியினருக்கு வழங்கப்பட்ட கடன்கள்

| | | | |
|---|---|---|---|
| சனவரி 1 ஆந் திகதியன்று நிலுவை | | 4,025,086 | 3,112,003 |
| ஆண்டுக்காலப்பகுதியல் வழங்கப்பட்ட கடன்கள் | | 2,305,239 | 3,282,500 |
| | | 6,330,325 | 6,394,503 |
| ஆண்டுக்காலப்பகுதியல் மீள் கொடுப்பனவுகள் | | (2,661,844) | (2,369,417) |
| 2011 திசம்பர் 31 உள்ளவாறான நிலுவை | | 3,668,481 | 4,025,086 |

| | | | |
|---|---|---|---|
| **5. காசும் காசு சமனிகளும்** | | | |
| **வங்கிகளிலுள்ள் காசு** | | | |
| இலங்கை வங்கி | | 185,159 | 1,600,315 |
| இலங்கை வங்கி | | - | 5,970 |
| | | 185,159 | 1,606,285 |
| **6. திரட்டிய நிதியம்** | | | |
| காலத்தின் ஆரம்பத்தில் நிலுவை | | - | 67,828,254 |
| ஆண்டுக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கம் | | - | (67,828,254) |
| காலப்பகுதிதேறிய குறைப்பு (அதிகரிப்பு) | | - | - |
| காலப்பகுதியின் இறுதியல் நிலுவை | | - | - |

| டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு | குறிப்புகள் | 2011 ரூபா. | 2010 ரூபா. |
|---|---|---|---|
| **7. கொள்கை வைத்திருப்போர் பாதுகாப்பு நிதியம்** | | | |
| ஆரம்ப நிலுவை | | 1,011,810,110 | 755,073,543 |
| இவ் வருடத்தில் கிடைத்த செஸ் | | 216,837,328 | 144,666,577 |
| திறைசேரி முறி முதலீடு மீதான வட்டி | | 44,927,884 | 31,740,107 |
| ஐரெபோ மற்றும் அழைப்பு கணக்கு மீதான வட்டி | | 35,463,880 | 44,466,546 |
| ஆண்டில் செய்யப்பட்ட சீராக்கம் | | - | 67,828,254 |
| | | 1,309,039,202 | 1,043,775,027 |
| **குறைக்க:** | | | |
| தொழிற்பாட்டு செலவுகளுக்கான மாற்றங்கள் | | 27,262,344 | 30,472,838 |
| மூலதன செலவுகளுக்கான மாந்ற்றங்கள் | | 2,502,591 | 1,478,079 |
| மொதட்த மாற்றங்கள் -கொள்கை வைத்திருப்போர் பாதுகாப்பு நிதியம் | | 29,764,935 | 31,950,917 |
| வங்கி அறவீடுகள் | | 19,400 | 14,000 |
| | | 29,784,335 | 31,964,917 |
| எஞ்சிய நிலுவை | | 1,279,254,867 | 1,011,810,110 |
| **8. கொடை** | | | |
| வருட ஆரம்பாத்தில் நிலுவை | | 15,906,644 | 21,949,005 |
| காப்புறுதியுறுநர் பாதுகாப்பு நிதியத்திலிருந்தான மூலதனச் செலவுகள் | | 2,502,591 | 1,478,079 |
| கழி: வருடத்தில் பதிலீடு செய்யப்பட்டவை | | (6,040,348) | (7,520,440) |
| வருட இறுதியில் நிலுவை | | 12,368,887 | 15,906,644 |

**குிறிப்பு - கொடை அங்கீகரிப்பு**

இ.க.த 24 இன் பிரகாரம் கொடைகளட் கணிப்பிடப்பட்டிருக்கின்றன. கொகையானது பின்வரும் விகிதங்களில் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது.

| | | |
|---|---|---|
| மோட்டார் வாகனம் | 25% | ஒரு வருடத்திற்கு |
| அலுவலக உபகரணம்- ஏனையவை | 25% | ஒரு வருடத்திற்கு |
| தளபாட பொருத்துகளும் இணைப்புகளும் | 12.5% | ஒரு வருடத்திற்கு |

| | | 2011 | 2010 |
|---|---|---|---|
| **9. இளைப்பாற்றல் நன்மை கடப்பாடுகள்** | | | |
| வருட ஆரம்பாத்தில் நிலுவை | | 1,444,533 | 876,171 |
| ஆண்டுக்காலப்பகுதியில் செய்யப்பட்ட ஏறபாடு | | 703,074 | 568,362 |
| (-)ஆண்டுக்காலப்பகுதியில்செய்யப்பட்ட கொடுப்பனவு | | (313,698) | - |
| வருட இறுதியில் நிலுவை | | 1,833,909 | 1,444,533 |
| **10. கடன்களுக்கான வட்டி** | | | |
| நிதி குத்தகை பொறுப்பு | | | |
| குத்தகை கடன்பட்டோர் | | - | 1,268,352 |
| குறைக்க: தடுத்துவைக்கப்பட்டுள்ள வட்டி | | - | (143,911) |
| | | - | 1,124,441 |
| நிதி குத்தகை பொறுப்பகளின் தற்போதைய பகுதி | | - | (762,569) |
| | | - | 361,872 |

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | குறிப்புகள் | 2011 ரூபா. | 2010 ரூபா. |
|---|---|---|---|
| **11. ஏனைய நடைமுறைப்பொறுப்புகள்** | | | |
| ஏனையவை | | 5,162,486 | 10,122,632 |
| | | 5,162,486 | 10,122,632 |
| **12. வருமானம்** | | | |
| காப்பறுதிக்கம்பனிகளில் இரந்து வருமானட | | 34,578,544 | 29,186,084 |
| பதிவும் புதுப்பித்தல் கட்டணங்களும் | | 5,920,000 | 2,310,891 |
| | | 40,498,544 | 31,496,975 |
| **13. ஏனைய வருமானம்** | | | |
| ஐவாகன கடன் மீதான வட்டி | | 48,055 | 61,934 |
| இடர் மீதான வட்டி | | 102,196 | 106,300 |
| வெளியீடுகளின் விற்பனை | | 49,875 | 32,880 |
| நீக்கங்களிலின் இலாபம் | | 172,023 | - |
| நானாவித வருமானம் | | 43,097 | 23,054 |
| | | 415,246 | 224,168 |
| **14. செலவினம் மீதான மினை(குறை) வருமானம்** | | | |
| பின்வருவன உள்ள்ளிட்ட அனைத்து செலவுகளும் அறவிடப்பட்ட பின்னர் ஆண்டக்கான பற்றாக்குறை கொண்டுவரப்பட்டுள்ளது. | | | |
| பதவியினர் சமட்பளங்கள் | | 18,504,115 | 15,322,247 |
| ஊசே.நி மற்றும் ஊ.ந.நி. | | 2,806,072 | 2,285,409 |
| ஓய்வூதிய பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 703,074 | 568,362 |
| பதவியினர் பயிற்சி - வெளிநாடு | | 3,087,200 | 2,792,680 |
| உள்ளூர் உசாவுகைகள் | | 614,167 | 503,511 |
| வெளிநாட்டு உசாவுகைகள் | | 719,121 | 572,678 |
| கணக்காய்வாளர்களின் ஊதியங்கள் | | 585,252 | 200,000 |
| தேய்மானம் | | 6,237,563 | 8,220,340 |
| தலைவரின் செலவுகள் - படி | | 457,500 | 356,000 |
| தலைவரின் செலவுகள் - எரிபொருள் | | 268,920 | 158,010 |
| பணிப்பாளர்களின் வாகனப் படி | | 1,767,419 | - |
| சபை உறுப்பினர்களுக்காக வருகைக் கட்டணம் | | 500,797 | 66,000 |
| பொது மக்கள் விழிப்புணர்வு | | 3,318,217 | 3,677,305 |
| வங்கி அறவீடுகள் | | 73,534 | 61,101 |
| கடன் வரி | | 25,816 | 151,807 |

## 15. வரி

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, 2011 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வருமான வரிக்கான ஏற்பாடுகள் கணிக்கப்பட்டுள்ளன.

### 15.1 அரசாங்கப் பிணையங்கள் மீதான இரண்டாம் நிலைச் சந்தைப் பரிமாற்றங்கள் மீதான நிறுத்திவைத்தல்வரிக்கான தேசிய வரவு

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 137 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, அரசாங்கப் பிணையங்கள் மீதான இரண்டாம் நிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானத்திற்காக அவை சபையின் நியதிச்சட்ட வருமானத்தின் ஒரு பகுதியாக இருப்பதனால் தேசிய வரிவரவு சபைக்கு கிடைக்கும்.

அதற்கிணங்க, அரசாங்கப் பிணையங்கள் மீதான இரண்டாம்நிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல் மூலம் கிடைத்த வருமான நிதிக் கூற்றுக்களில் அதிகரிக்கும். 2011 ஆம் ஆண்டுக்கான வரிவரவு ரூபா 14,392.29 ஆகும். இது 2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

செஸ் நிதியத்தின் அரசாங்க பிணைங்கள் மீதான இரண்டாம் நிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் மூலம் கிடைத்த வட்டி வருமானம் தேறிய பெறுமதியில் காட்டப்பட்டுள்ளது.

**16. மூலதனக் கடப்பாடுகள்**
2011 டிசம்பர் 31 இல் மூலதனக் கடப்பாடுகள் எதுவும் காணப்படவில்லை.

**17. நிரந்தரமல்லாத பொறுப்புக்கள்**
2011 டிசம்பரில் 31 இல் நிரந்தரமல்லாத பொறுப்புக்கள் எதுவும் காணப்படவில்லை.

**18. ஐந்தொகைத் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்**
ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர், நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்கங்களை அல்லது வெளிப்படுத்தல்களை வேண்டி நிற்கின்ற நிகழ்வுகள் எதுவும் இடம்பெறவில்லை.

**19. தொடர்புடைய தரப்புக்கள் பற்றிய வெளிப்படுத்தல்கள்**
திருமதி. இந்திராணி சுகததாஸ (தலைவர்), திரு.ஜீ.குணவர்தன, திரு.நவாஸ் ரஜாப்தீன், திரு.காமினி கொஹன (அங்கத்தவர்கள்) ஆகியோர் 2011 ஆம் ஆண்டில் சபையில் பதவி வகித்தனர்.

திரு. டி.கே.ஹெட்டிஆரச்சி 2011 மே மாதத்தில் சபையின் நிறைவேற்றுத் தர அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

திரு.பீ.டி.ஜே. பெர்னாண்டோ அவர்கள் சபையின் அங்கத்துவத்திலிருந்து இடைநிறுத்தப்பட்டு திரு.பீ.டி.டபிள்யு.ஏ.சில்வா 2011 செப்டெம்பரில் அங்கத்தவராகப் பதவியேற்றார்.

சபை அங்கத்தவர்கள் கொண்டிருந்த நிறுவனத் தொடர்புகளைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| அங்கத்தவரின் பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு |
|---|---|---|
| திருமதி.இந்திராணி சுகததாஸ | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | தலைவர் (2011 டிசம்பர் 05 ஆந் திகதி வரை) |
| திரு.பீ.டி.ஜே.பெர்னாண்டோ | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | அங்கத்தவர் (2011 செப்டம்பர் வரை) |
| திரு.பி.டி.டபிள்யு.ஏ சில்வா | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | நிறைவேற்றுத்தர அங்கத்தவர் (2011 செப்டெம்பர்) |
| திரு.டி.கே.ஹெட்டிஆரச்சி | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | நிறைவேற்றுத் தர அங்கத்தவர் |
| திரு.டி.விதானகமாச்சி | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | நிறைவேற்றுத்தர அங்கத்தவர் |

சந்தையில் நிலவும் விலைகளில் வழமையாக நடைபெறும் கொடுக்கல் வாங்கல்களைத் தவிர வேறு ஏதும் கொடுக்கல் வாங்கல்கள் மேலே குறிப்பிட்ட நிறுவனங்களில் இடம்பெறவில்லை.

## 20. பதவியினர் செலவுகள்

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது | குறிப்புகள் | 2011 ரூபா. | 2010 ரூபா. |
|---|---|---|---|
| பதிவும் ஒழுங்கறுத்துகையும் | | 7,593,164 | 6,461,546 |
| மேற்பார்வை | | 11,563,369 | 10,518,351 |
| பரிசோதனை | | 5,746,372 | 2,610,504 |
| பொது உறவகள் | | 1,646,540 | 1,539,262 |
| நிதி மற்றும் நிருவாகம் | | 9,513,963 | 7,844,629 |
| | | 36,063,408 | 28,974,292 |

## 21. தொழில்சார் கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| உள்ளுர் உசாவுகைகள் | 867,167 | 503,511 |
| வெளிநாட்டு உசாவுகைகள் | 466,121 | 572,678 |
| ஏனையவை | 286,496 | - |
| | 1,619,784 | 1,076,189 |

## 22. தொழிற்பாட்டு செலவினங்கள்

| | | |
|---|---|---|
| பதிவும் ஒழுங்குபடுத்தலும் | 9,493,344 | 10,634,394 |
| மேற்பார்வை | 9,246,637 | 10,350,944 |
| புலனாய்வு | 6,848,294 | 7,786,004 |
| பொது உறவுகள் | 3,384,915 | 4,051,993 |
| நிதி மற்றும் நிருவாகம் | 7,594,529 | 8,367,167 |
| | 36,567,719 | 41,190,502 |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல / My No } எப்பீ/ஐ/ஐபீஎஸ்எல்/2/2011/04

ඔබේ අංකය / உமது இல / Your No }

දිනය / திகதி / Date } 2012 ஆகஸ்ட் 31

தலைவர்
இலங்கை காப்புறுதிச் சபை.

**இலங்கை காப்புறுதிச் சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை காப்புறுதிச் சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2000 இன் 43 ஆம் இலக்க இலங்கை காப்புறுதித் தொழிலை நெறிப்படுத்துதல் அதிகாரச்சட்டத்தின் 8(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை சபையின் தலைவருக்கு 2012 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone } 2887028 - 34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. } oaggov@sltnet.lk

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை காப்புறுதிச் சபையின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சேமிக்கப்பட்ட விடுமுறைகளுக்காக செலுத்தப்படுகின்ற படிகள் அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு செலுத்த வேண்டியிருந்த போதிலும் சபையினால் மொத்த சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செலுத்தப்பட்டமையினால் ரூபா 580,842 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 20,211,966 தொகையான வருடாந்த வாடகை அடிப்படையில் சபை நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற உலக வர்த்தக நிலையக் கட்டிடத்தில் அமைந்துள்ள அலுவலகத்தினை பிரித்து ஒதுக்கீடு செய்வதற்காக 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட ரூபா 2,701,825 செலவினம் வாடகைக் கால எல்லைக்கு விகித சமமாக பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்குக் குறைவான விகிதத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

**2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திறைசேரியினால் அங்கீகரிக்கப்படாத நிதி நலன்கள் சபையினால் ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தன.

**2.2.3 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்த முடியாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையினால் 2011 மே 11 மற்றும் 12 ஆந் திகதிகளில் நடாத்தப்பட்ட சமய விழாவிற்காகச் செய்யப்பட்ட ரூபா 308,019 செலவினத்திற்காக உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் 4 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் மாதமொன்றிற்கு அவர்களின் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 607,431 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையில் சேவையாற்றுகின்ற 33 ஊழியர்களின் குடும்ப அங்கத்தவர்களை காப்புறுதி செய்வதற்காக சபையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 513,713 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

**3.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான வரிக்கு முன்னரான விளைவுகள் ரூபா 27,251,414 ஆன பற்றாக்குறையானதுடன், அதற்கு நோரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 29,177,024 ஆக இருந்தமையினால் நிதிப்பெறுபேற்றில் ரூபா 1,925,610 தொகை அல்லது 7% ஆன அதிகரிப்பைக் காட்டியது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சபையின் மொத்த வருமானம் 11% இனால் அதிகரித்திருந்ததுடன் மொத்தச் செலவுகள் 4% இனால் குறைவடைந்திருந்தது. நிதிசார் விளைவுகளின் பொழிப்பொன்று கீழே தரப்படுகின்றன.

| | 2011<br>ரூபா | 2010<br>ரூபா |
|---|---|---|
| மொத்த வருமானம் | 47,099,011 | 42,306,072 |
| மொத்தச் செலவுகள் | (74,350,426) | (71,483,097) |
| வரிக்கு முன்னர் தேறிய பற்றாக்குறை | (27,251,415) | (29,177,025) |
| காப்புறுதிப் பத்திர உடைமையாளரின் பாதுகாப்பு நிதியிலிருந்து மாற்றுதல் | *27,262,345 | 30,472,839 |
| வருமான வரி | (10,930) | (1,295,814) |
| தேறிய மிகை | - | - |

*நிதி விளைவுகளில் பாதகமான நிலைமையை சமனாக்குவதற்காக காப்புறுதிப் பத்திர உடமையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திலிருந்து ரூபா 27,262,344 தொகை இலாபத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் உத்தியோகத்தர்களின் கல்விச் செயற்பாடுகளுக்காக ரூபா 1,332,015 தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் பயிற்சியளித்தல் தொடர்பாக உத்தியோகத்தர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பயிற்சியின் ஒரு வருடத்திற்குப் பின்னர் அந்த உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து விலகுவார்களாயின் பயிற்சிக்காகச் செய்யப்பட்ட செலவினங்களின் நலன்களை காப்புறுதிச் சபைக்குப் பெற்றுக் கொள்ளும் முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

2011 ஆம் ஆண்டில் விடுதி ஊழியர்களுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 870,000 வரை அதிகரிக்கப்பட்டு அப்பணத்தில் ரூபா 865,355 தொகை உத்தியோகத்தர் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் உல்லாச பயணங்களுக்காகச் செலவிடப்பட்டிருந்தன.

### 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உலக வர்த்தக நிலையக் கட்டிடத்தில் 11 ஆவது மாடியில் 8741 சதுர அடி சபையின் தலைமை அலுவலகத்திற்காக வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 20,211,966 வாடகை செலுத்தப்பட்டிருந்தது. சபையில் 36 உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேவையில் இருந்தமையினால் ஒரு உத்தியோகத்தருக்காக அதன் பிரகாரம் ரூபா 561,444 வாடகைக் கிரயமொன்று செய்யப்பட்டிருந்தது. இக் கிரயத்தைக் குறைப்பதற்கோ அல்லது மாற்றுச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கோ கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் யூன் 30 வரையான காலப்பகுதிக்காக சபையினால் பயன்படுத்தப்படாத 06 தொலைபேசி இணைப்புக்களுக்காக ரூபா 36,233 நிலையான கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) உள்நாட்டுப் பயிற்சிகளாக மாநாடுகள், செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டின் போது 06 உத்தியோகத்தர்களுக்கு கல்வி நடவடிக்கைகளுக்காக ரூபா 606,881 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போதும் முறையே ரூபா 60,820 மற்றும் ரூபா 725,134 தொகைகள் 11 உத்தியோகத்தர்களின் கல்விக்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அவ் வருடங்களில் மாநாடுகள், செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 07 பதவிகள் 2009 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பயிற்சி நிகழ்ச்சித் திட்டமும் செயலாற்றலும்
(ஆ) கொடுக்கல் வாங்கல்களுக்காக உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல்



**எச்.ஏ.எஸ்.சமரவீர**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# கணக்காளர் தலைமையதிபதியின் கருத்துரைகளுக்கான சபையின் அறிக்கை

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | இலங்கை காப்புறுதி சபையின் பதில்கள் |
|---|---|
| 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள் | |
| (அ) சேமிக்கப்பட்ட விடுமுறைகளுக்காக செலுத்தப்படுகின்ற படிகள் அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு செலுத்த வேண்டியிருந்த போதிலும் சபையினால் மொத்த சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செலுத்தப்பட்டமையினால் ரூபா 580,842 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | இலங்கை காப்புறுதி சபை மிகக் குறைந்த பதவியணியுடன் தொழிற்படுவதினால பதவியணியினரிடையே விடுமுறைகள் எடுப்பதனைத் தடுப்பதற்காக பணக் கொடுப்பனவைச் செலுத்த சபை தீர்மானித்தது. 2011 ஆம் ஆண்டில் விடுமுறை பணமாக்கல் கொடுப்பனவு அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு உரியவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) ரூபா 20,211,966 தொகையான வருடாந்த வாடகை அடிப்படையில் சபை நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற உலக வர்த்தக நிலையக் கட்டிடத்தில் அமைந்துள்ள அலுவலகத்தினை பிரித்து ஒதுக்கீடு செய்வதற்காக 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட ரூபா 2,701,825 செலவினம் வாடகைக் கால எல்லைக்கு விகித சமமாக பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்குக் குறைவான விகிதத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. | 2005 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட மூல வாடகை உடன்படிக்கை கடந்த 7 வருடங்களின்போது காலத்துக்குக் காலம் நீடிக்கப்பட வேண்டியிருந்தது. பிரித்து ஒதுக்கீட்டின் பயனான காலம் 8 வருடங்களென கருதி இலங்கை கணக்கீட்டு நியமம் (இ.நி.சே.) 18 இற்கு இணங்க அவை பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளன. |
| 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை | |
| 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திறைசேரியினால் அங்கீகரிக்கப்படாத நிதி நலன்கள் சபையினால் ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தன. | இலங்கை காப்புறுதிச் சபையின் ஊழியர்களின் எல்லா நலன்களும் சபை உறுப்பினர்களின் முன் அங்கீகாரத்துடனேயே வழங்கப்படுகின்றன. இந்த நலன்களை உள்ளடக்கிய இலங்கை காப்புறுதிச் சபையின் நிருவாகக் கையேட்டின் ஊடாக திறைசேரியின் இணக்கத்தினை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. |
| 2.2.3 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்த முடியாத கொடுக்கல் வாங்கல்கள் | |
| (அ) சபையினால் 2011 மே 11 மற்றும் 12 ஆந் திகதிகளில் நடாத்தப்பட்ட சமய விழாவிற்காகச் செய்யப்பட்ட ரூபா 308,019 செலவினத்திற்காக உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கம் 2011 ஆம் ஆண்டில் ஸ்ரீ சம்புத்தாவ ஜெயந்திய நினைவு விழாவிற்குப் பல நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கமைத்தது. இலங்கை காப்புறுதிச் சபை 2011 மே மாதம் 11 ஆந் திகதி பிரித் விழாவிலும் 2011 மே மாதம் 12 ஆந் திகதி தானத்திலும் சபையின் அங்கீகாரத்துடன் பங்குபற்றியது. |
| (ஆ) சபையினால் 4 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் மாதமொன்றிற்கு அவர்களின் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 607,431 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | இவ் உத்தியோகத்தர்கள் சபையின் அங்கீகாரத்துடனேயே சேர்க்கப்பட்டுள்ளனர். மேற்குறித்த மூன்று பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இரு பணிப்பாளர் பணிகளுக்கு பத்திரிகை விளம்பரம் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஆனால் இது பொருத்தமான உத்தியோகத்தர்களைச் சேர்ப்பதற்கு சாத்தியமற்றதாக இருந்தது. கூறப்பட்ட இரு ஒப்பந்தங்களினதும் நியதிகள் 2012 டிசம்பர் மாதத்தில் முடிவடைகின்றது. மற்ற இரு ஒப்பந்தங்களும் 2013 மே மாதத்திலும் 2013 டிசம்பர் மாதத்திலும் முடிவுறும்.<br><br>மேலும் ஒப்பந்த உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளங்களும் நலன்களும் நிரந்தர உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்படும் தொகையைவிட மிகவும் குறைவானதாக இருக்கின்றது. எனவே இலக்கைக் காப்புறுதி சபைக்கு நிதி இழப்பு எதுவும் ஏற்படவில்லை. |
| இ) சபையில் சேவையாற்றுகின்ற 33 ஊழியர்களின் குடும்ப அங்கத்தவர்களை காப்புறுதி செய்வதற்காக சபையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 513,713 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | சபையின் அங்கீகாரத்தின்மீது 2005 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்திலிருந்து இலங்கை காப்புறுதிச் சபையின் ஊழியர்களும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களும் காப்புறுதி செய்யப்பட்டுள்ளனர். |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | இலங்கை காப்புறுதி சபையின் பதில்கள் |
|---|---|
| 4.1 செயலாற்றல் | |
| 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் உத்தியோகத்தர்களின் கல்விச் செயற்பாடுகளுக்காக ரூபா 1,332,015 தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் பயிற்சியளித்தல் தொடர்பாக உத்தியோகத்தர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பயிற்சியின் ஒரு வருடத்திற்குப் பின்னர் அந்த உத்தியோகத் தர்கள் சேவையிலிருந்து விலகுவார்களாயின் பயிற்சிக்காகச் செய்யப்பட்ட செலவினங்களின் நலன்களை காப்புறுதிச் சபைக்குப் பெற்றுக் கொள்ளும் முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிணைக் காலத்தினை இரண்டு வருட காலப்பகுதிக்கு அதிகரிக்க சபையினால் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. பயிற்சியாளர் சித்தியடையாதிருத்தல் கல்வி நிகழ்ச்சித்திட்டம் நிறைவடைவதற்கு முன்பாக எந்தவொரு காரணத்தினாலும் பயிற்சி நெறியிலிருந்து விலகுகின்ற அல்லது அதனைக் கைவிடுகின்ற பட்சத்தில் அவர் இலங்கைக் காப்புறுதிச் சபையினால் உறப்பட்ட செலவை மீளளிப்புச் செய்ய அழைக்கப்படல் வேண்டும். பிணைக்காலப்பகுதியின் ஒரு பகுதிக்கு மாத்திரமே அவர் சேவையாற்றும பட்சத்தில் பிணையின் பின் விகிதப் பெறுமதியை மீளச் செலுத்துதல் வேண்டும். |
| 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள் | |
| 2011 ஆம் ஆண்டில் விடுதி ஊழியர்களுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 870,000 வரை அதிகரிக்கப்பட்டு அப்பணத்தில் ரூபா 865,355 தொகை உத்தியோகத்தர் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் உல்லாச பயணங்களுக்காகச் செலவிடப்பட்டிருந்தன. | இச்செலவினம் சபையின் அங்கீகாரத்துடன் 2006 ஆம் ஆண்டிலிருந்து கிரமமாக நடாத்தப்படும் ஆண்டுப் பயிற்சி மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஏற்பட்டுள்ளது. மீளாய்வு ஆண்டுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஸ்மாட் குவெஸ்ட் பிறைவேட் லிமிடெட்டினால் நடாத்தப்பட்டது. 2012 ஆம் ஆண்டின் நிகழ்ச்சித்திட்டம் அதிக சிக்கனத்துடன் திட்டமிடப்பட்டுள்ளது. |
| 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | |
| (அ) உலக வர்த்தக நிலையக் கட்டிடத்தில் 11 ஆவது மாடியில் 8741 சதுர அடி சபையின் தலைமை அலுவலகத்திற்காக வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 20,211,966 வாடகை செலுத்தப்பட்டிருந்தது. சபையில் 36 உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேவையில் இருந்தமையினால் ஒரு உத்தியோகத்தருக்காக அதன் பிரகாரம் ரூபா 561,444 வாடகைக் கிரயமொன்று செய்யப்பட்டிருந்தது. இக் கிரயத்தைக் குறைப்பதற்கோ அல்லது மாற்றுச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கோ கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | காப்புறுதித் தொழிலின் ஒழுங்கமைப்பாளராக இருப்பதனால் இலங்கைக் காப்புறதி சபைக்கு உத்திரோயகத்தர்களின் தொழில் நிலையங்களுக்கு மட்டுமன்றி தொழில் கூட்டங்கள் முதலியனவற்றுக்காகவும் இடம் தேவைப்படுகின்றது. தற்போதைய இடமானது கேட்போர் கூடம், இயக்குனர் 4ட்ட அறை, வரவேற்பறை, உணவுச் சாலை, தவிசாளர் அறை, கூட்ட அறை, கணனி அறை, கணணி மேசைகள், கோவை அலுமாரிகள் மற்றும் நிழற்பிரதியெடுத்தல் இயந்திரம் என்பவற்றிற்காக பயன்படுத்தப்படுகின்றது.<br><br>இலங்கை காப்புறுதி சபைக்கு மாற்றிடம் தெரிவு செய்ய நாம் முயற்சி செய்தபோதும் சிக்கனமான வாடகையுடன் பொருத்தமான இடம் காணப்படவில்லை. பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவுடன் இணைந்து இலங்கை காப்புறுதிச் சபை இம்முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது. |
| (ஆ) 2011 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் யூன் 30 வரையான காலப்பகுதிக்காக சபையினால் பயன்படுத்தப்படாத 06 தொலைபேசி இணைப்புக்களுக்காக ரூபா 36,233 நிலையான கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. | தொலைபேசிகள் சிறிது காலம் வெற்றிடம் நிலவிய காரணத்தினால் பயன்படுத்தப்படவில்லை, ஆனால் அவை தற்போது பயன்பாட்டில் உள்ளன. இத்தகைய இணைப்புகள் மீள் இணைப்பு அறவீட்டை தவிர்ப்பதற்காக நிலையான கட்டணங்களை செலுத்துவதன் மூலம் தம்வசம் வைத்திருக்கப்பட்டன. |
| (இ) உள்நாட்டுப் பயிற்சிகளாக மாநாடுகள், செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டின் போது 06 உத்தியோகத்தர்களுக்கு கல்வி நடவடிக்கைகளுக்காக ரூபா 606,881 தொகை செலவிடப்பட்டிருந்தது. | பயிற்சிக்கான 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள், மாநாடுகள், செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக இலங்கை காப்புறுதி சபை உத்தியோகத்தர்களை அனுப்புவதை நோக்காகக் கொண்டிருந்தன. உத்யோகத்தர்களின் வேண்டுகோளின் மீதும் தலைமைப் பிரிவின் அங்கீகாரத்தின் மீதும் தமது நாளாந்த கடமைகளை வினைத்திறனாகவும் பயனுறுதியுடனும் நிறைவேற்ற அவர்களுக்கு உதவுவதற்கான இயைபா பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். |
| (ஈ) 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போதும் முறையே ரூபா 60,820 மற்றும் ரூபா 725,134 தொகைகள் 11 உத்தியோகத்தர்களின் கல்விக்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அவ் வருடங்களில் மாநாடுகள், செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சபை, மூன்று வருட காலப்பகுதி யொன்றுக்கான ஊழியர் தொடர்பான உயர்கல்விக்கான அனுசரணையாக ரூபா 250,000 தொகையை அனுமதித்துள்ளது. இந்த அனுசரணை ஊழியரின் உற்பத்தி திறனிற்கு பங்களிப்புச் செய்யும். |
| 4.4 பதவியணியினர் நிர்வாகம் | |
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 07 பதவிகள் 2009 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டது. | சபை விளம்பரப் பகுதியிலுள்ள போதிலும் பொருத்தமான உத்தியோகத்தரை கண்டுபிடிக்க இயலாமை காரணமாக மீளாய்வாண்டின் போது இப்பதிவுகளினை நிரப்புதல் சாத்தியமற்றதாக இருந்தது. |

# பின்னிணைப்பு I

2000ஆம்ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்ட்ட காப்புறுதிக் கம்பனிகள் - 2011 டிசம்பர் 31 இல் உள்ளவாறு

| இல | காப்புறுதிக் கம்பனி | காப்புறுதி வியாபாரத்தின் வகை |
|---|---|---|
| 1 | எல்லியன்ஸ் இன்சுரன்ஸ் லங்கா லிமிரட் | சாதாரண காப்புறுதி |
| 2 | எல்லியன்ஸ் லைப் இன்சுரன்ஸ் லங்கா லிமிரட் | நீண்டகால காப்புறுதி |
| 3 | அமானா தகாபுல் பீஎல்சீ | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 4 | ஆர்ப்பிகோ இன்சுரன்ஸ் | நீண்டகால காப்புறுதி |
| 5 | ஏசியன் எல்லியன்ஸ் இன்சுரன்ஸ் பீஎல்சீ | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 6 | அவிவா என்டிபி இன்சுரன்ஸ் பீஎல்சீ | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 7 | சிலின்கோ இன்சுரன்ஸ் பீஎல்சீ* | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 8 | சிலின்கோ தகாபுல் லிமிரட் | சாதாரண காப்புறுதி |
| 9 | ஷார்டிஸ் இன்சுரன்ஸ் லிமிரட் | சாதாரண காப்புறுதி |
| 10 | கன்டினன்டல் இன்சுரன்ஸ் லங்கா லிமிரட் | சாதாரண காப்புறுதி |
| 11 | கோப்பரேடிவ் இன்சுரன்ஸ் கம்பனி லிமிரட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 12 | எச்என்பி எஸ்சுரன்ஸ் பீஎல்சீ | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 13 | ஜனசக்தி இன்சுரன்ஸ் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 14 | லைப் இன்சுரன்ஸ் கோபரேஷன் | நீண்டகால காப்புறுதி |
| 15 | எல்ஓஎல்சீ இன்சுரன்ஸ் கம்பனி லிமிரட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 16 | எம்பிஎஸ்எல் இன்சுரன்ஸ் கம்பனி லிமிரட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 17 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | சாதாரண காப்புறுதி |
| 18 | ஒரியன்ட் இன்சுரன்ஸ் லிமிரட் | சாதாரண காப்புறுதி |
| 19 | பீபல்ஸ் இன்சுரன்ஸ் லிமிரட் | சாதாரண காப்புறுதி |
| 20 | சீமாசகித்த சணச ரக்ஷன சமாகம | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 21 | இலங்கை காப்புறதி கூட்டுத்தாபனம் லிமிரட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 22 | யூனியன் அன்சுரன்ஸ் பீஎல்சீ | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |

* 2009 ஆகஸ்ட் 5 ஆந் திகதி முதல் காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

# பின்னிணைப்பு II

2000ஆம்ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் - 2011 டிசம்பர் 31 இல் உள்ளவாறு

| இல | காப்புறுதித் தரகர் | காப்புறுதி வியாபாரத்தின் வகை |
|---|---|---|
| 1 | ஏ.ம்.டபிள்யு. இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 2 | ஏ.எஸ்.ஜீ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 3 | ஏடிஇஸட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 4 | எய்ட்கன் ஸ்பென்சர் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 5 | அல்பின்கோஇன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 6 | அலியன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | சாதாரண காப்புறுதி |
| 7 | அசெட்லைன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | சாதாரண காப்புறுதி |
| 8 | பிரிலியன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 9 | சியக்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | சாதாரண காப்புறுதி |
| 10 | சிலோன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | சாதாரண காப்புறுதி |
| 11 | சீஎவ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 12 | கொமர்ஷல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 13 | டெல்மேஜ்இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 14 | ஈகுவிட்டி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 15 | ஈஸாஜீஇன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 16 | ∴பின்லேஇன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 17 | க்ளோபல் இன்சூரன்ஸ் சேர்விசஸ்(பிரை)லிமிடட் | சாதாரண காப்புறுதி |
| 18 | இன்டஸ்ட்ரியல் அன்ட் கொமர்ஷல் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 19 | ஜே இன்சூரன்ஸ் கன்ஸல்டன்ட்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 20 | ஜேஎவ் இன்சூரன்ஸ் கன்ஸல்டன்ட்ஸ் (பிரை)லிமிடட | சாதாரண காப்புறுதி |
| 21 | களனி யுனிஇன்சூரன்ஸ் கன்ஸல்டன்ட்ஸ் (பிரை)லிமிடட | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 22 | எல்எம் அன்ட் ஏ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட கன்ஸல்டன்ட்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 23 | லக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 24 | லைப் அன்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் சிலோன்(பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 25 | மக்வூட்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 26 | மக்ஸ்வெல் என்டபிரைசஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 27 | மேர்கன்டைல் இன்சூரன்ஸ் கன்ஸல்டன்ட்ஸ் (பிரை)லிமிடட | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 28 | நேஷன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 29 | பயனியர் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | சாதாரண காப்புறுதி |
| 30 | பிளசிட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 31 | புரொகெயார் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 32 | புரொடெக்ஷன் அன்ட் அசூவரன்ஸ் இன்சூரன்ஸ் கன்ஸல்டன்ட்ஸ் (பிரை) லிமிடட | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 33 | புரொடெக்ஷன் அன்ட் அட்மோஸ்ட் இன்சூரன்ஸ் கன்ஸல்டன்ட்ஸ் (பிரை) லிமிடட | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 34 | ரெட்மோ சுவிஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | சாதாரண காப்புறுதி |
| 35 | ரெலியன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 36 | ரோபா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 37 | சம்சன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | சாதாரண காப்புறுதி |
| 38 | சேனாரத்ன அசோசியேட்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 39 | ஸ்ட்ரடெஜிக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 40 | சன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லங்கா (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 41 | யூஎன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | சாதாரண காப்புறுதி |
| 42 | யுனைடட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | சாதாரண காப்புறுதி |
| 43 | வெரசிடி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 44 | விக்டர் எம்மானுவெல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 45 | வொலன்கா இன்சூரன்ஸ் சேர்விசஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |
| 46 | ஸெனித் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை)லிமிடட் | நீண்டகால மற்றும் சாதாரண காப்புறுதி |

# சொல் விளக்கம்

### திரண்டு வருதல்
ஒரே கம்பனியில் காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் அல்லது மீள் காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் கணிசமான அளவிலான நட்டவச்சங்கள் ஓர் இழப்பு நிகழ்வினால் ஒரே நேரத்தில் பாதிக்கப்படுதல்.

### கையகப்படுத்தும் செலவுகள்
புதிய காப்புறுதி ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தற்போதைய காப்புறுதி ஒப்பந்தங்களைப் புதுப்பித்தல் (உதாரணமாக, தரகுக் கட்டணங்கள்) என்பனவற்றுடன் சம்பந்தப்பட்ட பிரதானமான அனைத்துச் செலவுகளும்.

### தரவுக் கணிப்பு நிபுணர்
காப்புறுதி, முதலீடுகள், நிதி முகாமைத்துவம் மற்றும் குடிசனவியல் என்பன தொடர்பாக நிகழ்தகவு மற்றும் புள்ளிவிபரக் கோட்பாட்டினைப் பிரயோகிக்கும் ஒரு நிபுணர்.

### நிர்வாகச் செலவுகள்
தவணைக்கட்டணச் சேகரிப்பு, காப்புறுதிப்பத்திர நிர்வாகம், ஆளணிச் செலவுகள், சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன தொடர்பான தேய்மான ஒதுக்கீடுகள் என்பனவற்றில் இருந்து ஏற்படும் செலவுகளையும் உள்ளடக்கிய நிர்வாக இயல்பைக் கொண்ட செலவுகள்.

### அனுமதிக்கத்தக்க ஆதனங்கள்
காப்புறுதி வழங்குநர் ஒருவரின் நியதிபூர்வமான கடன் தீர் ஆற்றலை நிர்ணயிப்பதில் உள்ளடக்கக்கூடிய ஆதனங்கள் அத்தகைய சொத்துக்கள், 2000 ஆவது ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறையை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட விதிமுறைகளின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

### ஆண்டுத் தொகை
குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பிரிவுக்கு அல்லது காப்புறுதிதாரரின் ஆயுள் காலத்தின் போது, காலத்திற்குக் காலம் வருமான அனுகூலங்களைச் செலுத்தும் ஒரு காப்புறுதித் திட்டம். இதில் தாமதப்படுத்தப்பட்ட கொடுப்பனவு மற்றும் உடனடிக் கொடுப்பனவு என இரண்டு அடிப்படைக் காப்புறுதி வகைகள் இருந்து வருகின்றன. தாமதப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள் காப்புறுதிதாரர்களுக்கான கொடுப்பனவுகளாக மாற்றப்படுவதற்கு முன்னர், காலப்போக்கில் தாமதப்படுத்தப்பட்ட வரிக் கொடுப்பனவுகளாக சொத்துக்கள் வளர்ச்சியடைவதற்கு உதவுகின்றன. உடனடி ஆண்டுத் தொகைகள், கொள்வனவின் சுமார் ஒரு வருட காலத்திற்குள் கொடுப்பனவுகள் ஆரம்பிப்பதற்கு இடமளிக்கின்றன.

### பயனாளி
காப்புறுதிப்பத்திரதாரரின் மரணத்தின் போது, காப்புறுதி செய்யப்பட்ட தொகையையும், கிடைக்க வேண்டிய ஏனைய பயன்களையும் பெற்றுக்கொள்ள வேண்டியவர் எனக் காப்புறுதிதாரரினால் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் நபர்.

### இணங்குபவர்
ஒரு மீள் காப்புறுதிக் கம்பனியின் வாடிக்கையாளர் (முதன்மை காப்புறுதிக் கம்பனி)

### கோரிக்கைகள்
காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் நிகழ்வு சம்பவிக்குமிடத்து, ஒரு காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய தொகை. அதாவது, சொத்துக்கள் அழிதல் அல்லது சேதமடைதல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட மரணம் அல்லது காயங்கள், மருத்துவமனைச் செலவுகள் அல்லது மருந்துச் செலவுகள் ஏற்படுதல், காப்புறுதி செய்யப்பட்ட நபரின் மரணம் அல்லது உடல் ஊனம், ஒரு காப்புறுதிப்பத்திரம் முதிர்ச்சியடைதல், ஓய்வூதிய வயதை அடைதல், காப்புறுதிப் பத்திரத்தைக் கையளிக்கும் போது செலுத்தப்பட வேண்டிய தொகை.

### கோரிக்கைகள் தொடர்பாக ஏற்பட்ட செலவு
கணக்கீட்டுக் காலத்தின் போது பணம் செலுத்தப்பட்ட அனைத்துக் கோரிக்கைகளினதும் மொத்தத் தொகை. கோரிக்கைகளைக் கையாளும் செலவுகளும் இதில் அடங்கும். பொருத்தமானவிடத்து, கணக்கிட்டுக் காலத்தின் ஆரம்பத்தின் போதும், முடிவின் போதும் நிலுவையிலிருந்து வரும் கோரிக்கைகளுக்கான சீராக்கங்கள் செய்யப்படும்.

### கோரிக்கைகள் தொடர்பாக ஏற்பட்ட அறிவிக்கப்படாத செலவுகள்
ஏற்பட்டிருக்கும் (ஆனால், இதுவரையில் காப்புறுதி வழங்குநருக்கு அறிவிக்கப்பட்டிராத) எதிர்பார்க்கப்படும் இழப்புக்களின் செலவை உள்ளடக்கும் பொருட்டு, சொத்து, பொறுப்பு மற்றும் ஏனைய காப்புறுதிகள் என்பன தொடர்பாக கணக்கீட்டுக் காலத்தின் முடிவின் போது வைக்கப்பட்டிருக்கும் ஓர் ஒதுக்கு.

### நிலுவையில் இருக்கும் கோரிக்கைகள் ஒதுக்கு - பொதுக் காப்புறுதி வர்த்தகம்
ஐந்தொகைத் திகதிக்குள் இடம்பெற்றிருக்கும் நிகழ்வுகளில் இருந்து தோன்றும் கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதற்கான மதிப்பிடப்பட்ட செலவுகளை உள்ளடக்கும் பொருட்டு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை. இது அறிவிக்கப்படாத (IBNR) ஆனால், ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் கோரிக்கைகள் தொடர்பான செலவுகள், கோரிக்கைகளைக் கையாளும் செலவுகள் என்பனவற்றை உள்ளடக்குவதுடன், அக்கோரிக்கைகள் தொடர்பாக ஏற்கனவே செலுத்தப்பட்டிருக்கும் தொகைகள் இதிலிருந்து கழிக்கப்படுகின்றன.

### இணை காப்புறுதி
ஓர் நட்டவச்சத்தைக் குறித்துரைக்கப்பட்ட தவணைக் கட்டணத்தில் உடன்பட்டிருக்கும் விகிதத்தில் உள்ளடக்கும் பொருட்டு காப்புறுதி செய்பவருடன் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட காப்புறுதி வழங்குநர்கள் தனியொரு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளும் ஓர் ஏற்பாடு.

### தரகுக் கட்டணம்
காப்புறுதி வழங்குநர் ஒருவரின் காப்புறுதித் திட்டங்களை விற்பனை செய்தமைக்காக மற்றும் சேவைகளை வழங்கியமைக்காக, ஒரு தரகருக்கு அல்லது காப்புறுதி முகவருக்குச் செலுத்தப்படும் கொடுப்பனவு.

### தாமதப்படுத்தப்பட்ட கையகப்படுத்தல் செலவு - பொதுக் காப்புறுதி வர்த்தகம்
வருடாந்த கணக்கீட்டு அடிப்படையின் கீழ் ஐந்தொகைத் தினத்தில் செல்லுபடியான ஒப்பந்தங்களின் முதிர்ச்சியடையாத நட்டவச்சக் காலம் தொடர்பான கையகப்படுத்தல் செலவுகள்.

இவை ஒரு கணக்கீட்டுக் காலப் பிரிவிலிருந்து, அடுத்துவரும் கணக்கீட்டுக் காலப் பிரிவுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

### பெறப்பட்ட தவணைக் கட்டணம்
கணக்கீட்டுக் காலத்தின் ஆரம்பத்திலும், முடிவிலும் பெறப்படாத தவணைக்கட்டண ஒதுக்குகளின் மூலம் சீராக்கம் செய்யப்பட்ட எழுதப்பட்ட தவணைக் கட்டணங்கள்.

### பொதுக் காப்புறுதி வர்த்தகம்
தீ அபாயம், கடல் அபாயம், மோட்டார் வாகன அல்லது நானாவித காப்புறுதி வர்த்தகத்தை தனியாகவோ, ஒன்றுடன் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றுடன் இணைந்து மேற்கொள்ளல். கிடைத்த மொத்த தவணைக் கட்டணங்கள் அல்லது அனைத்து மூலங்களில் இருந்தும் கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணங்கள். இவை கணக்கீட்டுக் காலப் பிரிவின் போது பொதுக் காப்புறுதி வர்த்தகம் தொடர்பாகக் கருதப்பட்ட மீள் காப்புறுதிக்கான கட்டணங்களையும் உள்ளடக்குகின்றன.

### காப்புறுதி இழப்பீடு
காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வு ஏற்படக்கூடிய வாய்ப்பு, காப்புறுதிக் கோரிக்கையின் அளவு அல்லது கோரிக்கைக் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டிய காலம் என்பன தொடர்பான நிச்சயமற்ற நிலை.

### காப்புறுதி வழங்குநர்
2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒரு பொதுக் கம்பனியாகக் கூட்டிணைக்கப்பட்டு, 2000 ஆவது ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறையை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தின் கீழ் ஒரு காப்புறுதி வழங்குநராக தன்னைப் பதிவுசெய்து கொண்டிருக்கும் கம்பனி.

### நீண்டகாலக் காப்புறுதி வர்த்தகம்
மனித உயிர்கள் தொடர்பான காப்பீட்டு ஒப்பந்தங்களில் ஈடுபடுதல் அல்லது பராமரித்தல் தொடர்பான வர்த்தகம். அத்தகைய ஒப்பந்தங்கள் மரணத்தின் போது அல்லது மனித வாழ்க்கையில ஏதேனும் திடீர் நிகழ்வுகள் இடம்பெறும் போது, பணக் கொடுப்பனவு உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களையும், மனித வாழ்க்கையில் ஏற்படக்கூடிய ஓர் அவசர நிலைக்கென தவணைக் கட்டணங்கள் செலுத்தப்படுவதற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களையும் உள்ளடக்குகின்றன.

### முதிர்ச்சி
ஒரு நீண்டகால காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் உத்தரவாதப்படுத்தப்படடிருக்கும் கொடுப்பனவுத் தொகை அதன் காலப் பிரிவின் முடிவின் போது திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய காலம்.

### தேறிய கோரிக்கைகள் விகிதம் அல்லது தேறிய இழப்பு விகிதம்
தேறிய இழப்புச் செலவுகளை தேறிய வருமானத்துடன் தொடர்புபடுத்துவதற்கென காப்புறுதி வழங்குநர்களினால் பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு வழிமுறை. (அதாவது, சம்பந்தப்பட்ட மீள் காப்புறுதிகளைக் கழித்த பின்னர்)

$$\frac{\text{தேறிய கோரிக்கைக் கொடுப்பனவுகள்}}{\text{பெறப்பட்ட தேறிய தவணைக் கட்டணங்கள்}} \times 100$$

### தேறிய இணைந்த விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்
இது காப்புறுதி வழங்குநரின் தொழிற்பாடுகளின் இலாபத்தன்மையைக் காட்டுகின்றது. இது தேறிய நட்டத் விகிதத்தையும் தேறிய செலவு விகிதத்தையும் இணைத்துக் கணிக்கப்படுகின்றது. இது முதலீட்டு வருமானத்தைக் கவனத்தில் எடுப்பதில்லை.

$$\frac{\text{தேறிய கோரிக்கைக் கொடுப்பனவுகள்} \times 100}{\text{பெறப்பட்ட தேறிய தவணைக்கட்டணங்கள்}} + \frac{\text{செலவுகள்} \times 100}{\text{பெறப்பட்ட தேறிய தவணைக்கட்டணங்கள்}}$$

### பெறப்பட்ட தேறிய தவணைக் கட்டணங்கள் (பொதுக் காப்புறுதி வர்த்தகம்)
மீள் காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் பெறப்படாத தவணைக் கட்டணங்களுக்கான அதிகரிப்பு மற்றும் குறைவு என்பனவற்றுக்கென சீராக்கம் செய்யப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்.

### தேறிய செலவு விகிதம் - ஆயுள்காப்புறுதி சாராதது
கையகப்படுத்தல் மற்றும் நிர்வாகச் செலவுகளைக் குறிப்பிடுவதற்கென காப்புறுதிக் கம்பனிகளினால் பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு வழிமுறை. (உதாரணம், தரகுக்கட்டணம், வரிகள், ஆளணி, விற்பனை மற்றும் செயற்பாட்டுச் செலவுகள்)

### தேறிய இழப்பு விகிதம் - ஆயுள் காப்புறுதி சாராதது
பெறப்பட்ட தேறிய தவணைக்கட்டண வருமானத்துடன் கோரிக்கைகள் தொடர்பாகச் செலுத்தப்பட்ட தேறிய தொகைகளைச் சம்பந்தப்படுத்திப் பார்ப்பதற்கென காப்புறுதி வழங்குநர்களினால் பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு வழிமுறை. (அதாவது, சம்பந்தப்பட்ட மீள் காப்புறுதிகளைக் கழித்த பின்னர்)

### பங்கேற்காத காப்புறுதிப்பத்திரம் - ஆயுள் காப்புறுதி சாராதது
சம்பந்தப்பட்ட ஆயுள் காப்பீட்டு நிதியத்தின் மிகையைப் பகிர்ந்துகொள்வதற்கு பத்திரதாரர்கள் ஒப்பந்த ரீதியான உரித்தினைக் கொண்டிராத ஆயுள் காப்புறுதி வர்த்தகம்.

### காப்புறுதிப் பத்திரம்
காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றின் விதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பனவற்றை எடுத்து விளக்கும் ஓர் ஆவணம்.

### காப்புறுதிப் பத்திரதாரர்
காப்புறுதி வழங்குநருடனான ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்டிருக்கும் அச்சந்தர்ப்பத்தில் காப்புறுதிப் பத்திரத்தை சட்டபூர்வமாக வைத்திருக்கும் ஒரு நபர்.

### காப்புறுதிப் பத்திரக் கடன்
ஆயுள் காப்புறுதிப் பத்திரத்தின் ஒப்படைப்புப் பெறுமதியைப் பிணையாக எடுத்து, காப்புறுதி வழங்குநர் காப்புறுதிப் பத்திரதாரர் ஒருவருக்கு வழங்கும் கடன். இக்கடன் காப்புறுதிப் பத்திரத்தின் தற்போதைய ஒப்படைப்புப் பெறுமதியின் குறிப்பிட்டதொரு சதவீதத்திற்கு பொதுவாக வரையறுக்கப்பட்டிருப்பதுடன், இத்தகைய கடன்கள் மீது வட்டி அறவிடப்படுகின்றன.

### தவணைக் கட்டணம்
காப்புறுதி செய்யப்பட்டிருப்பவர் ஒருவர் காப்புறுதிக்கெனச் செலுத்தவேண்டிய தொகை.

### ஆரம்ப காப்புறுதி வழங்குநர்
ஒரு காப்புறுதி தவணைக் கட்டணத்திற்குப் பதிலாக, நட்டவச்சங்களைப் பொறுப்பேற்பதுடன், காப்புறுதிப் பத்திரத்தை வைத்திருப்பவருடன் ஒரு நேரடி ஒப்பந்த ரீதியான தொடர்பினை வைத்திருக்கும் காப்புறுதிக் கம்பனிகள் (தனியார், தனி நபர், நிறுவனம், அல்லது அமைப்பு)

### செயற்பாட்டு இலாபம்
முதலீட்டு வருமானம், தேறிய மூலதன ஆதாயங்கள் மற்றும் ஏனைய வருமானம் என்பனவற்றைக் கவனத்திற் கொண்ட பின்னர், பொதுக் காப்புறுதித் தொழிலை மேற்கொள்வதன் மூலம் உருவாக்கப்படும் இலாபம்.

### மீள் காப்புறுதி
ஒரு தரப்பு (மீள் காப்புறுதி வழங்குநர்) ஒரு தவணைக் கட்டணத்தைக் கருத்திற்கொண்டு, மற்றொரு தரப்புக்கு (ஆரம்ப காப்புறுதி வழங்குநருக்கு) மீள் காப்புறுதிப்பத்திரம் அல்லது பத்திரங்களின் கீழ் ஏற்கப்பட்டிருக்கும் பொறுப்பின் ஒரு பாகத்திற்கு எதிராக அல்லது மொத்தப் பொறுப்புக்கும் எதிராக நட்ட உத்தரவாதம் வழங்குவதற்கு உடன்படும் ஓர் ஏற்பாடு.

### மீள் காப்புறுதி தரகுக் கட்டணம்
மீள் காப்புறுதி வழங்குநர் ஒருவருக்குச் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்பட வேண்டிய தவணைக் கட்டணங்கள் தொடர்பாக கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய தரகுக் கட்டணம்.

### உள்நோக்கிய மீள் காப்புறுதி
மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் நட்ட அனர்த்தங்களை ஏற்றுக்கொள்ளல்.

### வெளிநோக்கிய மீள் காப்புறுதி
மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் நட்ட அனர்த்தங்களை வைத்தல்.

### மீள் காப்புறுதி இலாப தரகுக் கட்டணம்
மீள் காப்புறுதி வழங்குநரினால் மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் மூலம் பெறப்பட்ட (மீள் காப்புறுதி ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு) தேறிய இலாபத்தின் அடிப்படையில், மீள் காப்புறுதி செய்தவருக்கு (ஆரம்பக் காப்புறுதி வழங்குநருக்கு) கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய மீள் காப்புறுதி மற்றும் தரகுக் கட்டணம்.

### பிடித்து வைத்திருத்தல்
காப்புறுதி வழங்குநர் ∴ மீள் காப்புறுதி வழங்குநர் மீள் காப்புறுதி வழங்காதிருக்கும் பொறுப்பேற்றுக்கொண்ட நட்ட அனர்த்தத்தின் ஒரு பகுதி. அதாவது, சொந்தக் கணக்கிற்கென வைத்துக்கொள்ளப்பட்ட தேறிய தொகை.

### கடன் தீர் நிதி அளவு - நீண்டகால காப்புறுதி
சொத்துக்களின் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி என்பவற்றுக்கு இடையிலான வித்தியாசம். இது 2000 ஆவது ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறையை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் பிரகாரம், (நீண்டகால காப்புறுதி) கடன் தீர் நிதி அளவு தொடர்பாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். அளவின் கீழ் நீண்டகால காப்புறுதித் தொழிலை மேற்கொண்டு வரும் காப்புறுதி வழங்குநர்களினால் பராமரிக்கப்படுவது அவசியமாகும்.

### கடன் தீர் நிதி அளவு - ஆயுள் சாராதது (பொதுக் காப்புறுதி)
சொத்துக்களின் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி என்பவற்றுக்கு இடையிலான வித்தியாசம். இது, 2000 ஆவது ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழில்துறையை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் பிரகாரம் (பொதுக் காப்புறுதி) கடன் தீர் நிதி அளவு தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கும் அளவின் கீழ் பொதுக் காப்புறுதித் தொழிலை மேற்கொண்டு வரும் காப்புறுதி வழங்குநர்களினால் பராமரிக்கப்படுவது அவசியமாகும்.

### ஒப்படைப்புப் பெறுமதி
ஒரு காப்புறுதிப் பத்திரம் அதன் கால எல்லை முதிர்ச்சியடைவதற்கு முன்னர் முடிவடையும் போது ஆயுள் காப்புறுதி தொடர்பாக காப்புறுதி வழங்குநர் ஒருவர் காப்புறுதிப் பத்திரதாரருக்குச் செலுத்த வேண்டிய தொகை. ஒப்படைப்புப் பெறுமதி ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, ஒரு காப்புறுதிப் பத்திரம் குறைந்தது மூன்று வருடகாலப் பிரிவுக்கு தொடர்ச்சியாக வலுவில் இருந்து வந்திருத்தல் வேண்டும்.

### இலாபத்திற்கான நட்ட உத்தரவாதம்
இது முதலீட்டு வருமானம் மற்றும் ஏனைய வருமானம் என்பவற்றைக் கவனத்திற் கொள்ளாது பொதுக் காப்புறுதி வர்த்தகத்தை மேற்கொள்வதன் மூலம் உருவாக்கப்படும் தொழில்சார் இலாபமாகும்.

### பெற்றுக்கொள்ளப்படாத தவணைக் கட்டணம்
இது, வரவேண்டிய தொகைகள் என ஏற்கனவே கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், ஐந்தொகைத் திகதியை அடுத்து வரும் காலகட்டத்துடன் சம்பந்தப்பட்ட தவணைக் கட்டணங்களின் ஒரு பகுதியைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

### ஈட்டப்படாத தவணைக்கட்டண ஒதுக்கு
ஏற்கனவே வலுவில் இருந்து வலும் காப்புறுதிப்பத்திரங்களின் கீழ் எதிர்காலத்தில் தோன்றக்கூடிய கோரிக்கைகளுக்கென ஏற்பாடு செய்யும் பொருட்டு பொதுக் காப்புறுதி வழங்குநர் ஒருவரினால் பராமரிக்கப்பட்டு வரும் ஒரு நிதியம்.

### முதிர்ச்சியடையாத நட்ட அனர்த்த ஒதுக்கு
நிதியாண்டின் முடிவின் பின்னர், அத்திகதிக்கு முன்னர் முடிவாக்கப்பட்ட ஒப்பந்தங்களில் இருந்து தோன்றக்கூடிய கோரிக்கைகள் மற்றும் செலவுகள் என்பவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதியை மதிப்பீடு செய்த தொகைகள் அவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதி பெற்றுக்கொள்ளப்படாத தவணைக் கட்டணங்களுக்கான ஒதுக்கினை மதிப்பிட்டுக் காணப்படும் நிலை (தாமதப்படுத்தப்பட்ட எவையேனும் கையகப்படுத்தப்பட்ட செலவுகளைக் கழித்த பின்னர்)

# குறிப்புகள்

குறிப்புகள்

# பொதுத் தகவல்கள்

### அலுவலக முகவரி
11, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக நிலையம்,
எச்சலன் சதுக்கம், கொழும்பு 1,
இலங்கை.

தொலைபேசி : + 94 11 2396184-9
தொலைநகல் : + 94 11 2396190
மின்னஞ்சல் : info@ibsl.gov.lk
இணையத்தளம் : www.ibsl.gov.lk

### சட்டபூர்வ நிலைமை
2000 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழில் ஒழுங்கமைப்புச் சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டு, 2001 பெப்ரவரி 23 ஆம் திகதிய 1172∴27 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி அறிவித்தலை அடுத்து 2001 மார்ச் 01 ஆம் திகதி நடவடிக்கைகளை மேற்கொண்ட சட்டபூர்வமான அந்தஸ்தைக் கொண்ட நிறுவனம்.

### சபையின் நோக்கமும் பொறுப்புக்களும்
காப்புறுதியாளர்களினதும், வருங்கால காப்புறுதியாளர்களினதும் நன்மைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தில், இலங்கையில் காப்புறுதித் தொழில் நேர்மையாகவும், தொழில்சார் அடிப்படையிலும், ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும், இலங்கையில் காப்புறுதித் தொழில் நடத்தப்படுவதை நிச்சயிப்பதே சபையின் நோக்கமும், பொறுப்புக்களுமாகும்.

### கணக்கியல் ஆண்டு
டிசம்பர் 31

### கணக்காய்வாளர்கள்
கணக்காய்வாளர் அதிபதி

### வங்கியாளர்கள்
இலங்கை வங்கி

### கணக்காய்வுக் குழு
திரு.டி.விதானகமாச்சி - தலைவர்
திரு.நவாஸ் ரஜாப்தீன்
திரு.காமினி கொஹன

10 YEARS

INSURANCE
BOARD OF SRI LANKA

ஆண்டறிக்கை 2011



# இலக்கினை தீர்மானித்தல்...
# குறிக்கோள்களினை அடைதல்

**இலங்கை காப்புறுதிச் சபை**
11 ஆம் மாடி, கிழக்குக் கோபுரம்,
உலக வர்த்தக நிலையம்
எச்சலன் சதுக்கம்
கொழும்பு 1.
தொலைபேசி : +94 11 2396184-9 தொலைநகல் : +94 11 2396190

www.ibsl.gov.lk